இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 144 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 18 – புதன்கிழமை 03 ஜனவரி 2024 – வெளியூர் 12 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 144 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 18 - Wednesday 03 January 2024 - Dak 12+8 Pages ₹ 5.00

## மாநில உரிமைகளை நிலைநாட்ட முயற்சிப்பது

# அரசியல் முழக்கம் அல்ல!

## திருச்சியில் பிரதமர் மோடி முன்னிலையில் நடைபெற்ற விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம்!

**திருச்சி, ஜன. 3 -**

**"மாநிலத்திற்காக கோரிக்கை வைப்பதும் மாநில உரிமைகளை நிலைநாட்டுவதும் அங்கு வாழும் மக்களின் கோரிக்கைகள் தானே தவிர, அவை 'அரசியல் முழக்கங்கள்' அல்ல" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சியில் பிரதமர் மோடி அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற பன்னாட்டு விமான நிலையத்தின் புதிய முனையக் கட்டடத் திறப்பு விழாவில் உரையாற்றும் போது விளக்கமாகக் கூறினார்.**



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (2.1.2024) திருச்சிராப்பள்ளி விமான நிலையத்தில் நடைபெற்ற அரசு விழாவில், திருச்சிராப்பள்ளி விமான நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய ஒருங்கிணைந்த முனையம் உள்ளிட்ட பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, புதிய இரயில் திட்டங்களை நாட்டு மக்களுக்கு அர்ப்பணித்தார். இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, ஒன்றிய சிவில் விமானத்துறை மற்றும் எஃகுத் துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா, ஒன்றிய மீன்வளம், கால்நடை வளர்ப்பு மற்றும் பால் வளத்துறை, தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை இணை அமைச்சர் எல். முருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர் சு. திருநாவுக்கரசர் உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.1.2024) திருச்சிராப்பள்ளி சர்வதேச விமான நிலையத்தில் நடைபெற்ற புதிய ஒருங்கிணைந்த முனைய கட்டட திறப்பு விழா உள்ளிட்ட பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழா மற்றும் புதிய திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டு விழாவில் ஆற்றிய உரை வருமாறு :-

தொட்ட துறை அனைத்திலும் சிகரத்தை தொட்ட மாநிலமான தமிழ்நாடு இந்தியத் திருநாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் முக்கியப் பங்காற்றி வருகிறது.

அப்படிப்பட்ட நம்முடைய தமிழ்நாட்டின் இதயப்பகுதியாக இருக்கும் திருச்சிராப்பள்ளியின் "பன்னாட்டு விமான நிலையத்தில், ஆயிரத்து 112 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டிருக்கும் புதிய முனையத்தை" பிரதமர் அவர்கள் திறந்து வைத்து சிறப்பித்திருக்கிறார்.

தமிழ்நாடு முதலமைச்சர் என்கிற வகையில், தமிழ்நாட்டு மக்கள் சார்பாக அவருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இந்தத் துறையின் அமைச்சர் ஜோதிர் ஆதித்ய சிந்தியா அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

### தமிழ்நாட்டின் 2வது பெரிய பன்னாட்டு விமான நிலையம்!

திருச்சிராப்பள்ளி பன்னாட்டு விமான நிலையம் தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய பன்னாட்டு விமான நிலையம். இதை மேலும் தமிழ்நாடு அரசு 318 கோடியே 85 லட்சம் ரூபாய் செலவில், 294.57 ஏக்கர் நில எடுப்பு செய்து இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

மேலும், திருச்சி உட்பட சென்னை, கோயம்புத்தூர், மதுரை, வேலூர், தூத்துக்குடி விமான நிலையங்களை விரிவாக்கம் மற்றும் நவீனமயப்படுத்த 3 ஆயிரத்து 118 கோடி ரூபாய் செலவில், 2,302.44 ஏக்கர் அரசு மற்றும் பட்டா நிலங்களை இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த விரிவாக்கப் பணிகளை விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டும்.

தென் தமிழ்நாட்டில் இராமேஸ்வரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களுக்கு இந்தியாவின் பல்வேறு பகுதியிலிருந்தும் மக்கள் ஆன்மீகப் பயணமாக வருகிறார்கள். பல நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகளும் வந்து செல்கிறார்கள். அவர்கள் எளிதாக வந்து செல்வதற்கு ஏதுவாக, மதுரை விமான நிலையத்தை பன்னாட்டு விமான நிலையமாக அறிவிக்க வேண்டும் என்று நாங்கள் ஏற்கனவே வைத்த கோரிக்கையை பிரதமர் அவர்கள் கனிவோடு பரிசீலிக்க வேண்டுகிறேன்.

### முன்னுரிமை அடிப்படையில் நேரடி விமான சேவை!

மலேசியா மற்றும் ஜப்பான் நாடுகளோடு தமிழ்நாடு பண்பாட்டு மற்றும் வர்த்தகத் தொடர்புகளை கொண்டிருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு, சென்னை பினாங்கு, சென்னை டோக்கியோ இடையே நேரடி விமான சேவையை முன்னுரிமை அடிப்படையில் தொடங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு, சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்ட திட்டப் பணிகளுக்குப் 'பங்குப் பகிர்வு மாதிரி' அடிப்படையில் ஒன்றிய அரசின் பங்களிப்பை விரைந்து வழங்க பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரை,

❖ தமிழ்நாட்டில் இப்போது தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் (NHAI) செயல்படுத்தப்பட்டு வரும் பணிகளை விரைவுபடுத்த வேண்டும்.

❖ சமீப காலமாக, இருவழிச்சாலையாக மேம்படுத்தப்படுகிற நெடுஞ்சாலைகளுக்கும் சுங்கக் கட்டணம் வசூலிக்கப்படுவதில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும்.

அடுத்து, திருச்சி மாவட்டத்தின் MSME நிறுவனங்கள்தான் 'பெல்' பொதுத்துறை நிறுவனத்துக்குத் தேவையான உதிரி பாகங்களை வழங்கிக் கொண்டு வந்தார்கள்.

தற்போது பெல் நிறுவனத்திடம் இருந்து இவர்களுக்கு கேட்பாணை (Procurement Order) மிகவும் குறைந்துவிட்டது. இதனால் இந்தப் பகுதியில் செயல்பட்டு வரும் MSME நிறுவனங்கள் மிகவும் பாதிப்படைந்து இருக்கிறார்கள். எனவே, பெல் (BHEL) நிறுவனம் மீண்டும் அதிகப்படியான கேட்பாணைகளை இவர்களுக்கு வழங்க ஆவன செய்யப்பட இந்திய பிரதமர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

### "கடுமையான இயற்கை பேரிடர்" என அறிவிப்பீர்!

பிரதமர் அவர்கள் அறிந்த ஒன்று தான்! கடந்த மாதம் சென்னை மற்றும் தென் மாவட்டங்களில், கடுமையான மழைப்பொழிவை தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளம் காரணமாக, அந்த மாவட்டங்களில் பொது உட்கட்டமைப்புகள் பெருத்த சேதமடைந்திருக்கிறது. மக்களின் வாழ்வாதாரமும் மோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அவற்றை "கடுமையான இயற்கைப் பேரிடர்கள்" என்று அறிவித்து, தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து தமிழ்நாட்டுக்கு உரிய நிவாரண நிதியை வழங்க தமிழ்நாட்டு மக்கள் சார்பாக நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்ந்து கோரிக்கையாக வைக்கிறோமே என்று எண்ண வேண்டாம்! பரந்து விரிந்த இந்தியப் பெருநாட்டில் கோடிக்கணக்கான மக்களுக்கு நெருக்கமாக இருந்து, கல்வி மருத்துவம் அவசியத் தேவைகள் உதவிகள் ஆகியவற்றை செய்து தர வேண்டிய முக்கியக் கடமை மாநில அரசுகளுக்குத்தான் இருக்கிறது. மாநிலத்திற்காக கோரிக்கை வைப்பதும் மாநில உரிமைகளை நிலைநாட்டுவதும் அங்கு வாழும் மக்களின் கோரிகைகள்தானே தவிர, அவை, 'அரசியல் முழக்கங்கள்' அல்ல.

அந்த வகையில், தமிழ்நாடு அரசின் கோரிக்கைக்கு பிரதமர் அவர்கள் நிச்சயமாக நிறைவேற்றி தருவார் என நான் நம்புகிறேன். I conclude my speech by thanking our Hon'ble Prime Minister, for gracing this occasion and inaugurating various schemes for Tamil Nadu and laying foundation for new schemes.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### தொடர்ந்து கோரிக்கை வைக்கிறோம் என்று எண்ண வேண்டாம்!

**தொடர்ந்து கோரிக்கையாக வைக்கிறோமே என்று எண்ண வேண்டாம்! பரந்து விரிந்த இந்தியப் பெருநாட்டில் கோடிக்கணக்கான மக்களுக்கு நெருக்கமாக இருந்து, கல்வி மருத்துவம் அவசியத் தேவைகள் உதவிகள் ஆகியவற்றை செய்து தர வேண்டிய முக்கியக் கடமை மாநில அரசுகளுக்குத்தான் இருக்கிறது. மாநிலத்திற்காக கோரிக்கை வைப்பதும் மாநில உரிமைகளை நிலைநாட்டுவதும் அங்கு வாழும் மக்களின் கோரிகைகள்தானே தவிர, அவை, 'அரசியல் முழக்கங்கள்' அல்ல.**

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 03-01-2024

# தேர்தல் ஆணையம் நியாயமாகச் செயல்படுமா?

தன்னிச்சையாக இயங்க வேண்டிய அனைத்து அமைப்பு களையும் தன்வசப்படுத்தும் வகையில் சட்டம் கொண்டு வருவதுதான் பா.ஜ.க.வின் பாணியாகும். அதுதான் தேர்தல் ஆணையர்கள் நியமனச் சட்டத்திலும் நடந்திருக்கிறது.

**சுதந்திரமாக செயல்படவேண்டிய தேர்தல் ஆணையம் பற்றி உச்சநீதி மன்றத் தீர்ப்பையும் மீறி, தன் வசதிக்கேற்ப சட்ட திருத்தம் கொண்டு வந்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு. தேர்தல் ஆணையம் என்பது ஜனநாயகத்தின் முகமாக இருக்க வேண்டியது ஆகும். அந்த தேர்தல் ஆணையத்தை தனது வசதிக்கு ஏற்ப வளைத்து விட்டது பா.ஜ.க. அரசு.**

“பிரதமர் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவரால் தேர்தல் ஆணையக் குழு உறுப்பினர்களை நியமிக்கும் தற்போதைய அமைப்பு மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை” என்று 2012 ஆம் ஆண்டு ஜூன் 2 ஆம் தேதி அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் எழுதியவர் அப்போதைய பா.ஜ.க. தலைவர் அத்வானி. அதைத் தான் இன்று சட்டமாகவே செய்து விட்டது பா.ஜ.க.

பஞ்சாப் மாநில அதிகாரியான அருண் கோயல் என்பவர் 2022 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் நாள் திடீரென பதவி விலகினார். மறுநாளே இவர் தேர்தல் ஆணை யராக நியமிக்கப்பட்டார். அதாவது தேர்தல் ஆணைய ராக இவரை நியமிப்பதற்காகவே பதவி விலக வைத்துள்ளார்கள். அருண் கோயல் நியமனத்துக்கு எதிராக உச்சநீதி மன்றத்தில் பல்வேறு தரப்பினரும் வழக்கு தாக்கல் செய்தார்கள். இது போன்ற முக்கியமான பணியிடத்துக்கான தேர்வை ‘கொலிஜியம்’ போன்ற அமைப்பு தான் நடத்த வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். தலைமைத் தேர்தல் ஆணையர், பிற தேர்தல் ஆணையர்களின் நியமனமானது சுதந்திரமாக நடைபெற வேண்டும் என்பதே உச்சநீதிமன்றத்தில் போடப்பட்ட வழக்கின் கோரிக்கை ஆகும். இந்த வழக்கில் அரசியல் சாசன அமர்வு தனது வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை வழங்கியது.

இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையர், மற்றும் தேர்தல் ஆணையர்களை எப்படித் தேர்வு செய்ய வேண்டும் என்பதை கடந்த மார்ச் மாதம் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. நீதியரசர் கே.எம்.ஜோசப் தலைமையிலான ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு இத்தீர்ப்பை அளித்தது.

* **பிரதமர்**
* **மக்களவை எதிர்க்கட்சித் தலைவர்**
* **உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகிய மூவர் அடங்கிய குழு தான் தலைமைத் தேர்தல் ஆணையரையும், தேர்தல் ஆணையர்களையும் தேர்வு செய்ய வேண்டும் என்று தீர்ப்பு அளித்தது.**

“பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய குழுவின் அறிவுறுத்தலின்படி, தேர்தல் ஆணையர்கள், தலைமைத் தேர்தல் ஆணையர் ஆகியோரை குடியரசுத் தலைவர் நியமனம் செய்ய வேண்டும். மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் இல்லை என்றால், தனிப் பெரும்பான்மையுள்ள எதிர்க்கட்சியின் தலைவர், இந்த குழுவில் இடம்பெற வேண்டும். தேர்தல் ஆணையர்கள் நியமனம் தொடர்பாக நாடாளு மன்றத்தில் சட்டம் இயற்றும் வரை இந்த நடைமுறை தொடரும்.

ஜனநாயகத்தில் தேர்தல் எந்தவித சந்தேகமும் இன்றி நியாயமாக நடைபெற வேண்டும். புனிதத்தன்மை காக்கப்படுவதை தேர்தல் ஆணையம் உறுதி செய்ய வேண்டும். இல்லையென்றால் மோசமான விளைவுகள் ஏற்படும்.

அரசியல் சாசன அமைப்புக்கு உட்பட்டு தேர்தல் ஆணையம் சட்டப்படி செயல்பட வேண்டும். நியாயமற்ற முறையில் செயல்பட முடியாது. நியாயமான தேர்தலை தேர்தல் ஆணையத்தால் உறுதி செய்ய முடியவில்லை என்றால், ஜனநாயகத்தின் அடித்தளமாக விளங்கும் சட்ட விதிகளின் கீழ் அளிக்கப்பட்ட உத்தரவாதங்கள் சிதைந்து போகும். அரசியல் சாசனத்தின் 324வது பிரிவில், தேர்தல் ஆணைய உறுப்பினர்கள் நியமனத்துக்கு சட்டம் இயற்ற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் எந்தச் சட்டத்தையும் நாடாளு மன்றம் நிறைவேற்ற வில்லை” என்று அரசியல் சாசன அமர்வு கூறியது.

உச்சநீதிமன்றத்தின் மீது மரியாதை இல்லாத பா.ஜ.க. அரசு என்ன செய்தது என்றால், கடந்த 21 ஆம் தேதி அன்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி விட்டார்கள். அதன்படி உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி என்பதற்குப் பதிலாக ஒன்றிய அமைச்சர் ஒருவர் என்று மாற்றி விட்டார்கள். இதன் படி பார்த்தால் தேர்தல் ஆணையரைத் தேர்வு செய்யும் மூவர் குழுவில் இருவர், ஆளும்கட்சியைச் சேர்ந்தவராக இருக்குமாறு பார்த்துக் கொண்டார்கள். அதாவது தங்கள் வசதிக்கு ஏற்ப சட்டத்தை வளைத்துக் கொண்டார்கள்.

தேர்தல் ஆணையர்கள் நியமன மசோதா 2023 என்பது மக்களவையில் கடந்த ஆகஸ்ட் மாதம் தாக்கல் செய்யப் பட்டது. டிசம்பர் 12 அன்று மாநிலங்களவையில் நிறை வேறியது. மக்களவையில் கடந்த 21 ஆம் தேதி வைக்கப்பட்டது. மக்களவை உறுப்பினர்களில் 100க்கும் மேற்பட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்களை இடை நீக்கம் செய்து விட்டதால் அது பா.ஜ.க.வுக்கு வசதியாகப் போய்விட்டது. எந்த விவாதமும் நடத்தப்பட வில்லை. சட்ட அமைச்சர் அர்ஜுன் மேவால் பேசினார். மசோதா நிறைவேறிவிட்டது.

**உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியை நீக்கிவிட்டு அமைச்சரை நியமிப்பதன் மூலமாக தேர்தல் ஆணையத்தை தனது கைப்பாவையாக ஆக்க முயற்சித்துள்ளார் பிரதமர் நரேந்திர மோடி.**

இது ஜனநாயகத்துக்கு ஆபத்தான முடிவு என்பதை உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி ரோஹிண்டன் பாலி நாரிமன் சொல்லி இருக்கிறார். **“இந்த முறையில்தான் தேர்தல் ஆணையர்களை நியமிக்கப் போகிறார்கள் என்றால், அந்தத் திருத்தச் சட்டத்தால் தேர்தல் ஆணையத்தின் சுதந்திரம் கடுமையாகப் பாதிக்கப்படும். அதை நீக்கவில்லை என்றால் அது ஜனநாயகத்துக்கு மிகப்பெரிய ஆபத்தாக மாறும். எனவே உச்சநீதிமன்றம் இந்தச் சட்டத்திருத்தத்தை தன்னிச்சையானது என்று அறிவித்து ரத்து செய்யவேண்டும்,”** என்று மும்பையில் நடைபெற்ற ஒரு விழாவில் பேசி இருக்கிறார். இதனை உச்சநீதிமன்றம் செய்ய வேண்டும்.



பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் 38–வது பட்டமளிப்பு விழா மற்றும் திருச்சிராப்பள்ளியில் நடைபெறும் அரசு விழா ஆகியவற்றில் கலந்து கொள்ள வருகை தந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை நேற்று (2.1.2024) திருச்சிராப்பள்ளி விமான நிலையத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொன்னாடை அணிவித்து, வரவேற்றார். தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, அமைச்சர் பெருமக்கள் உடனிருந்தனர்.



பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் 38–வது பட்டமளிப்பு விழா மற்றும் திருச்சிராப்பள்ளியில் நடைபெறும் அரசு விழா ஆகியவற்றில் கலந்து கொள்ள வருகை தந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை நேற்று (2.1.2024) திருச்சிராப் பள்ளி விமான நிலையத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொன்னாடை அணிவித்து, “வைக்கம் போராட்டம் நூற்றாண்டு மலர்” ஆங்கில பதிப்பு புத்தகம் வழங்கி வரவேற்றார். தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, அமைச்சர் பெருமக்கள் உடனிருந்தனர்.

### 2030-க்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம்:

# உலக முதலீட்டாளர் மாநாட்டில் செயல்திட்டம் வெளியிட தமிழ்நாடு மும்முரம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, ஜன. 3 -

2030-ஆம் ஆண்டுக்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை எய்துவதற்கான செயல் திட்டத்தை உலக முதலீட்டாளர் மாநாட்டில் வெளியிட தமிழ்நாடு மும்முரமாகிறது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**உலக முதலீட்டாளர் மாநாடு - 2024 தொடங்க இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் அது குறித்த ஆர்வம் மென்மேலும் பெருகி வருகிறது.**

**2030-ஆம் ஆண்டுக்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம் ஆவதற்கான செயல்திட்டத்தை உலக முதலீட்டாளர் மாநாட்டில் வெளியிடத் தமிழ்நாடு மும்முரமாகிறது.**

**தமிழ்நாட்டின் துடிப்புமிகுந்த தொழிற் சூழலை வெளிக்காட்டும் பிரம்மாண்டமான மாநாட்டில் வரும் ஜனவரி 7, 8 தேதிகளில் இணைந்திடுங்கள்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### உலகெங்கும் வாழும் தமிழ் உறவுகளைப் புதுப்பிக்கும்

# ‘வேர்களைத் தேடி’ திட்டம் துவக்கம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

*சென்னை, ஜன. 3 -*

*உலகெங்கும் வாழும் தமிழ் உறவுகளை புதுப்பிக்கும் “வேர்களைத் தேடி” திட்டம் துவக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.*

*இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு: -*

*அயலகத்தில் வாழும் தமிழர்களின் நலன் காக்கவும், அயலகத்திற்கு தமிழ்நாட்டில் இருந்து கல்வி, வேலை வாய்ப்புகள் என்று இடம் பெயரும் தமிழர்களை பாதுகாப்பாக வழிநடத்தவும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலுடன் “அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை” செயல்பட்டு வருகிறது.*

*அயலகத் தமிழ் உறவுகளை ஒன்றிணைக்கும் முகமாக தமிழ்நாடு அரசு “அயலகத் தமிழர் தினம்” எனும் சிறப்பு தினத்தை அறிவித்து ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 11 மற்றும் 12 ஆகிய நாட்களில் கடந்த இரண்டு ஆண்டுகளாக சென்னையில் பிரமாண்டமாக கொண்டாடி வருகிறது.*

*அயலகத் தமிழர்களின் கலாச்சார உறவுகளை மேம்படுத்துவதின் ஒரு நகர்வாக பல தலைமுறைகளுக்கு முன்பு அயலகம் இடம்பெயர்ந்து அங்கு வாழும் அயலகத்தமிழர்களின் குழந்தைகளுக்காக வேர்களைத்தேடி” என்றொரு பண்பாட்டுப் பயணத் திட்டத்தை தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்திருந்தார்.*

*இத்திட்டம் மூலம் அயலகத்தில் வாழும் 18 முதல் 30 வயதுக்குட்பட்ட தமிழர்களின் இளைஞர்களை தமிழ்நாடு அரசு செலவில் தமிழ்நாட்டிற்கு வரவழைத்து அவர்கள் தமிழ் மற்றும் தமிழர்தம் பெருமிதங்களை உணரும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களுக்கு ஒரு பண்பாட்டு பயணம் ஏற்பாடு செய்ய உத்தரவிட்டிருந்தார் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதனடிப்படையில் வேர்களைத் தேடி திட்டத்தின் முதல் பயணம் டிசம்பர் 27 ஆம் தேதி காலை 8 மணி அளவில் மகாபலிபுரத்தில் உள்ள தமிழ்நாடு ஹோட்டலில் இருந்து பயணம் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு அயலகத் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி. கே.எஸ். மஸ்தான் இப்பண்பாட்டு பயணத்தை துவக்கி வைக்கிறார். தமிழ்நாடு அரசு அயலகத் தமிழர் நலத்துறை ஆணையர் கிருஷ்ணமூர்த்தி ஐ ஓ எப் எஸ் முன்னிலை வகிக்கிறார்.*

*இப்பண்பாட்டு பயணத்திற்காக ஆஸ்திரேலியா, கனடா, பிஜி இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து 58 இளைஞர்கள் தேர்வாகி தமிழ்நாடு அரசு செலவில் சென்னை வந்தடைந்துள்ளனர்.*

*மேலும் சென்னையில் இருந்து மகாபலிபுரம், தஞ்சாவூர், சிவகங்கை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை, திருச்சி, செஞ்சிகோட்டை, காஞ்சிபுரம் ஆகிய இடங்களுக்கு பயணித்து தமிழர்களின் கட்டிடக்கலை, சிற்பக் கலை, இயல், இசை, நாட்டியம்,சிற்பம், ஓவியம், சுதந்திர போராட்ட வரலாறு, பல்வேறு தமிழ் இலக்கிய வரலாறு ஆகியவற்றை அறிந்துகொள்வார்கள். இத்துடன் தமிழ் அறிஞர்கள் மற்றும் ஆய்வாளர்களுடன் கலந்துரையாடல்களும் பயிற்சி வகுப்புகளும் இடம் பெறுகின்றன.*

*இந்த இருவார பயணத்தின் மூலம் தமிழர்களின் கலாச்சாரம், வரலாறு, மொழியியல் உட்பட பல்வேறு திறன்களை கற்றுணர்வார்கள் மூன்றாவது ஆண்டாக அயலகத்தமிழர்கள் தினம் வரும் ஜனவரி 11 மற்றும் 12 ஆகிய தேதிகளில் சென்னையில் உள்ள நந்தம் பாக்கம் வர்த்தக மையத்தில் பிரமாண்டமாக நடைபெறுகிறது. இவ்விழாவில் இந்த இளைஞர்கள் பங்கேற்று தங்களின் அனுபவங்களை பகிர்ந்துகொள்வார்கள்.*

*மேலும் தங்கள் நாடுகளுக்கு சென்று தமிழர்களின் கலாச்சாரதூதுவர்களாகவும் செயல்பட ஊக்கம்பெறுவார்கள்.*

*தொடர்புக்கு: செண்பக வள்ளி : 6382067900, சத்தியா : 9600153394, ராஜ்மோகன்: 9551546616.*

*இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளது.*

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதிமாறன் எம்.பி. முன்னிலை!

# எழும்பூர் தெற்கில் கலைஞர் நூற்றாண்டு விழா - புகழரங்கம்!

## நீதியரசர் கே.சந்துரு - உ.வாசுகி - கம்பம் செல்வேந்திரன் - ஓ.ஏ. நாகலிங்கம் சிறப்புரை!

*சென்னை, ஜன. 3 -*

*சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்குப் பகுதிக் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, ‘‘முத்தமிழ் அறிஞர் நாவன்மை நாயகர்” என்ற தலைப்பில் இன்று (3.1.2024 ) மாலை 6 மணிக்கு சேத்துப்பட்டில் கிளப் சாலையில் உள்ள மலையாளி கிளப்பில் நடைபெறுகின்றது.*

*நிகழ்ச்சிக்கு தெற்குப் பகுதிக் கழகச் செயலாளர் வி.சுதாகர் தலைமை வகிக்கிறார்.*

*மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு , தயாநிதிமாறன் எம்.பி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இந்நிகழ்ச்சியில் முன்னாள் நீதியரசர் கே.சந்துரு, திருமதி உ.வாசுகி, கம்பம் செல்வேந்திரன், ஓ.ஏ.நாகலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.*

*இதில் சொ.வேலு, கோ.ஏகப்பன், கூ.பி. ஜெயின், கே.எஸ்.எம். நாதன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், அ.நிர்மலா தேவி, எஸ். ரசூல், டி.வி.வேலு, எம். மலர்மாறன், கே.அன்னபூரணி, எஸ்.ஜெகதீசன், வான்மதி கதிரவன், வி.விஜயகுமார், ஆர்.பாபு, எஸ். டால்பின் அரி, இ.மெய்தீன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

*எல்.சுந்தரராஜன் நன்றி கூறுகிறார்.*




முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு திருவண்ணாமலையில் எஸ்.கே.பி. கல்வி குழும வளாகத்தில் மாநில பொறியாளர் அணி சார்பாக மண்டல அளவிலான பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சரும், மாவட்டச் செயலாளருமான எ.வ.வேலு பரிசும், நற்சான்றிதழும் வழங்கினார். சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, பொறியாளர் அணித் தலைவர் துரை கி.சரவணன், பொறியாளர் அணிச் செயலாளர் எஸ்.கே.பி.கு.கருணாநிதி, சி.என்.அண்ணாதுரை எம்.பி., எ.வ.வே.கம்பன் உள்ளிட்டோர் உடனுள்ளனர்.

தமிழினத் தலைவர்

# கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (8)

இன்று (ஜனவரி 3) வெளிவருகிறது!



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி, 2023 ஜூன் 3 முதல், ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று "முரசொலி சிறப்பிதழ்" வெளிவரும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.**

**அந்த அறிவிப்பிற்கு ஏற்ப, இன்று (ஜனவரி 3 - புதன்கிழமை) முரசொலி சிறப்பிதழ், "கல்வியாளர்கள் பார்வையில் கலைஞர்" என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**

**- ஆசிரியர்.**




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (01.01.2024) சென்னை, காமராசர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், கவிப்பேரரசு வைரமுத்துவின் "மகா கவிதை" நூலினை வெளியிட, ஒன்றிய முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப.சிதம்பரம் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மன்றத்தின் துணைத் தலைவர் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை, மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கலைஞானி கமல்ஹாசன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சேலத்தில் விவசாயிகளின் நிலம் - நடிகை கௌதமியின் சொத்துக்கள் அபகரிப்பு!

# தமிழ்நாடு முழுவதும் பா.ஜ.க.வினர் அராஜகம் தொடர்கிறது!

## ஒன்றிய அரசின் அதிகாரத்தைப் பயன்படுத்தி அட்டகாசம்! மார்க்சிஸ்ட் செயலாளர் பாலகிருஷ்ணன் கண்டனம்!

சென்னை, ஜன. 3 -

பட்டியல் வகுப்பைச் சேர்ந்த ஏழை விவசாயிகளின் நிலத்தை மோசடி செய்து அபகரித்த பா.ஜ.க. சேலம் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் குணசேகரனை கைது செய்ய வேண்டும் என்று தமிழக அரசுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும், குணசேகரனின் மோசடிக்குத் துணை போகும் வகையில், அதிகார துஷ்பிரயோகம் செய்து விவசாயிகளைமிரட்டியும், சாதியைக் குறிப்பிட்டும் சம்மன் அனுப்பிய அமலாக்கத் துறை அதிகாரிகள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:-

சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, ராமநாயக்கன் பாளையம் கிராமம், தேவேந்திர குல வேளாளர் சமூகத்தைச் சார்ந்த முதியவர்கள் மற்றும் ஏழை விவசாயிகள் கிருஷ்ணன், கண்ணையன் ஆகியோர் ஆவர். இவர்களின் 6.50 ஏக்கர் நிலத்தை, பா.ஜ.க.வின் சேலம் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் குணசேகரன், தனது பெயருக்கு போலியாக பத்திரப் பதிவு செய்து கொண்டுள்ளார்.

**பாதிக்கப்பட்ட பட்டியலின விவசாயிகள்!**

கிருஷ்ணன், கண்ணையன் ஆகியோரின் நிலத்தை, குணசேகரன் அடி மாட்டு விலைக்கு வாங்க முற்பட்ட போது அவர்கள் விற்பதற்கு முன் வராததால் காவல்துறை, வருவாய்த் துறை, அமலாக்கத் துறை அதிகாரிகளின் துணையோடு பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டு தனது பெயருக்குபோலிப் பத்திரம் பதிவு செய்துள்ளார்.

விவசாயிகளையும் தங்களின் சொந்த நிலத்தில் விவசாயம் செய்ய முடியாத வகையில் அடியாட்களை வைத்து கொலைமிரட்டல் விடுத்து அச்சுறுத்தியும் உள்ளார். இதுகுறித்து காவல் துறையில் புகார் செய்யப்பட்டும், தன் மீது நடவடிக்கை எடுக்காத வகையில், தனது பா.ஜ.க. அரசியல் பின்னணி மற்றும் கிரிமினல் குற்றப் பின்னணியை சாதகமாக பயன்படுத்திக் கொண்டுள்ளார்.



கிருஷ்ணன், கண்ணையன் ஆகியோரின் நிலத்தை அபகரித்தது போல் இப்பகுதியில் ஏராளமான விவசாயிகளின் நிலங்களையும் அபகரித்துள்ளது சம்பந்தமாக பல்வேறு வழக்குகள் இவர் மீது நிலுவையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

குற்றப் பின்னணி கொண்ட பா.ஜ.க. நிர்வாகிகள் தமிழகத்தில் கொலை, கொள்ளை, வழிப்பறி, போதைப் பொருட்கள் கடத்தல், நில அபகரிப்பு என பல்வேறு குற்றப் பின்னணிகளை கொண்டவர்கள் பா.ஜ.க. நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

சமீபத்தில் கூட தனது சொந்தக் கட்சிக்காரரான நடிகை கௌதமியின் 25 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்தை பா.ஜ.க.வினரே அபகரித்தது நாடறியும்.

இதுபோன்று தமிழகம் முழுவதும் ஒன்றிய ஆட்சியதிகாரத்தை பயன் படுத்தி பா.ஜ.க. வினர் சட்டத்திற்கு புறம்பான வேலைகளில் ஈடுபட்டு வருவது கடும் கண்டனத்திற்குரியது.

எனவே, ஏழை விவசாயிகளின் நிலங்களை அபகரித்துள்ள சேலம் பா.ஜ.க. மாவட்ட பொறுப்பாளர் குணசேகரனை நில அபகரிப்புச் சட்டம், வன்கொடுமை தடுப்புச் சட்டம் உள்ளிட்டு கடுமையான பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவுசெய்து உடன் கைது செய்திடவும், இவருக்கு உடந்தையாக இருக்கும் காவல்துறை, வருவாய்த் துறை, அமலாக்கத்துறை அதிகாரிகளை கைது செய்து உரிய முறையில் விசாரணை மேற்கொண்டு இவரால் அபகரிக்கப்பட்ட நிலங்களை ஏழை விவசாயிகளுக்கு திரும்ப வழங்கிடவும், கொலை மிரட்டலுக்கு ஆளாகியுள்ள விவசாயிகளுக்கு உரிய போலீஸ் பாதுகாப்பு வழங்கிட வேண்டுமெனவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தமிழக அரசையும், சேலம் மாவட்ட நிர்வாகத்தையும் வலியுறுத்துகிறது.

சாதியைக் குறிப்பிட்டு நோட்டீஸ் அனுப்பிய அமலாக்கத்துறை

பா.ஜ.க.வால் அமலாக்கத் துறை எப்படி தவறாக பயன்படுத்தப் படுகிறது என்பதற்கு இந்தச் சம்பவம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அதிலும் சாதியை குறிப்பிட்டு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியிருப்பது வன்மையான கண்டனத்திற்குரியது.

எனவே, பட்டியல் சாதியை சார்ந்த விவசாயிகளின் நிலத்தை திட்டமிட்டு அபகரிக்கும் நோக்கத்துடன் செயல்பட்டுள்ள குணசேகரனுக்கு ஆதரவாக செயல்பட்டு, அதிகார துஷ்பிர யோகத்தில் ஈடுபட்டுள்ள அமலாக்கத் துறை அதிகாரிகள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது. இவ்வாறு கே. பாலகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.

சாக்கோட்டை ஒன்றியத்தில்

# ரூ.80 லட்சத்தில் புதிய திட்டப் பணிகள்!

## அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் துவக்கி வைத்தார்!

சிவகங்கை, ஜன.3-

சிவகங்கை மாவட்டம் சாக்கோட்டை ஒன்றியத்தில் நெடுஞ்சாலைத்துறை, பள்ளி கல்வித்துறை மற்றும் பொது சுகாதாரத்துறை சார்பில் புதிய மூன்று திட்டப்பணிகள் துவக்க விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் தலைமையில் நடைபெற்றது. இதில் சாக்கோட்டை ஒன்றியம் சங்கராபுரம் ஊராட்சியில் ரூபாய் ஒரு கோடியே ரூ. 20 லட்சத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சாக்கோட்டை ஒன்றியத்தில் நெடுஞ்சாலை திட்டப் பணிகள் பள்ளி கல்வித்துறை சார்பில் புதிய கட்டடங்கள் ஆகியவற்றின் திட்டப்பணிகள் ரூபாய் 80 லட்சத்து 5ஆயிரம் மதிப்பில்நடைபெற உள்ளது.இந்த மூன்று திட்டப் பணிகளை கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். தொடர்ந்து சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள சிறுதானிய சிற்றுண்டியை திறந்து வைத்தார். மேலும் மானாமதுரை வட்டாரத்தில் உள்ள 41 சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 5 லட்சத்து 2 ஆயிரம் மதிப்பிலான சுய மகளிர்உதவி கடன்களை வழங்கி சிறப்புரையாற்றினார் .

இந்த நிகழ்ச்சியில் எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், எஸ். மாங்குடி, முன்னாள் அமைச்சர் மு. தென்னவன், தேவகோட்டை கோட்டாட்சியர் பால்துரை, திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கைமாறன், சிவகங்கை ஒன்றியக்குழு தலைவர் மஞ்சுளா பாலச்சந்தர், ஊராட்சி மன்ற தலைவர் கே.எஸ்.எம்.மணிமுத்து, சிவகங்கை நகர்மன்ற தலைவர் சி.எம்.துரை ஆனந்த் ஒன்றிய செயலாளர்கள் சுப.சின்னத்துரை, கே.ஆர்.ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி உட்பட அரசு அதிகாரிகள், பொது மக்கள் கலந்து கொண்டார்கள்.

# யு.பி.ஐ. மூலம் இனி ரூ.5 லட்சம் வரை அனுப்பலாம்!

சென்னை, ஜன.3-

ஸ்மார்ட் போன்கள் மூலம் உடனடி பண பரிமாற்றத்தை செய்ய உதவும் யு.பி.ஐ. பரிவர்த்தனையில் ரூ.5 லட்சம் வரை அனுப்புவதற்கான புதிய விதிகள் நேற்று முதல் அமலுக்கு வந்துள்ளன. உடனடி பணப் பரிமாற்றம் செய்வதில் யு.பி.ஐ. முறை முக்கிய பங்கு வகிக்கிறது. இதன் பயன்பாட்டை அதிகரிக்கும் விதமாக முதற்கட்டமாக கல்வி நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகள் கூகுள் பே, போன் பே மற்றும் பே.டி.எம். ஆகியவற்றில் ஒரே நேரத்தில் அதிகபட்சமாக ரூ.5 லட்சம் வரை அனுப்பவும், பெறவும் முடியும்.

இதற்கு முன்பு இந்த தொகை ஒரு லட்ச ரூபாயாக இருந்தது. அத்துடன் ஆன்லைன் வாலட்டுகள் போன்ற ப்ரீபெய்டு பேமெண்ட் கருவிகளை பயன்படுத்தி சில வணிகர்கள் செய்யும் வணிக ரீதியிலான ரூ.2,000க்கும் அதிகமான பரிவர்த்தனைகளுக்கு 1.1% பரிமாற்ற கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆன்லைன் பேமெண்ட் மோசடிகளை தடுக்க ரூ.2,000க்கும் அதிகமாக செய்யப்படும் முதல் பரிவர்த்தனைக்கும் 4 மணி நேரம் அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாப்பிள்ளையூரணியில்

# மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.6000 நிவாரண உதவி!

## அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்!

திண்டுக்கல், ஜன.3-

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி தூத்துக்குடி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்,

தூத்துக்குடி வட்டம், மாப்பிள்ளையூரணி, மாசிலாமணிபுரம் மற்றும் மூன்றாம் மைல் ஆகிய பகுதிகளில் உள்ள கூட்டுறவு மற்றும் அமுதம் நியாய விலைக்கடைகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 கிலோ அரிசி மற்றும் ரூ.6,000 நிவாரணத்தொகை ஆகியவற்றை வழங்கினார்.

பின்னர் அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:-

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 17.12.2023 மற்றும் 18.12.2023 ஆகிய தேதிகளில் பெய்த அதிகன மழையின் காரணமாக தூத்துக்குடி வட்டம் மாப்பிள்ளையூரணி, மாசிலாமணிபுரம், மூன்றாம் மைல் ஆகிய பகுதிகளில் மிகக் கடுமையாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இப்பகுதிகளில் 31.12.2023 அன்று ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தேன்.

மேலும், இப்பகுதிகளில் உள்ள கூட்டுறவு மற்றும் அமுதம் நியாய விலைக் கடைகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட 5 கிலோ அரிசி மற்றும் ரூ.6,000 நிவாரண த்தொகை ஆகியவற்றை வழங்கினோம். முதலமைச்சர் அவர்கள் வெள்ள நிவாரணமாக ரூ.6,000 நிவாரணத்தொகை மற்றும் 5 கிலோ தரமான அரிசி வழங்கியதற்கு பொதுமக்கள் நன்றிகளை தெரிவித்து மகிழ்ச்சியோடு அவற்றை பெற்று சென்றனர். மேலும் நிவாரணத்திற்காக வழங்கப்பட்ட அரிசி நல்லமுறையில் வழங்கப்படுகிறதா என்பதையும் நாங்கள் ஆய்வு செய்தோம், என அமைச்சர் சக்கரபாணி தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

தூத்துக்குடி மாவட்டம்

# திருவைகுண்டம் மழை வெள்ளம் பாதித்த பகுதிகள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆய்வு!

தூத்துக்குடி, ஜன. 3 -

திருவைகுண்டம் அருகே உள்ள பொன்னங்குறிச்சி மழை வெள்ள பாதிப்புகளை வீடு வீடாக சென்று அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆய்வு செய்தார்.

தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் தாலுகாவிற்கு உட்பட்ட ஆதிச்சநல்லூர், புதுக்குடி, தெற்கு தோழப்பண் பண்ணை, பொன்னங்குறிச்சி உள்ளிட்ட பகுதிகளில் மழை வெள்ள பாதிப்புகள் குறித்து சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆய்வு மேற்கொண்டார். அப்போது பொன்னங்குறிச்சி தாமிரபரணி ஆற்றில் ஏற்பட்ட உடைப்புகள் சரி செய்யப்படாத நிலையில் இருந்ததை சுட்டிக்காட்டி நீர்வளத் துறையினரிடம் சரிசெய்ய வேண்டும் என உத்தரவிட்டார். இந்நிலையில், பொன்னங்குறிச்சிக்கு மீண்டும் வந்த அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தாமிரபரணி ஆற்றில் ஏற்பட்ட உடைப்புகள் சரி செய்யும் பணிகளை பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து, வெள்ளத்தால் இடிந்த வீடுகளை நேரில் பார்வை யிட்டுவீடு வீடாகச் சென்று மக்களின் குறைகளை கேட்டறிந்தார். ஆதரவற்ற முதியோர்களுக்கு அவர் நிவாரண உதவிகளை வழங்கினார். அப்போது பொது மக்கள், வீடுகள் மட் டுமல்லாமல் ஆடு, மாடுகள் இழப்பு உள்பட பல்வேறு பாதிப்புகள் குறித்தும் தெரிவித்தனர். உடனடியாக முதல்வர் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

முதல்வர் ஆயிரம் கோடி ரூபாய்க்கு புதிய அறிவிப்புகளை வெளியிட்டார். இதனால் பொதுமக்கள் அவரை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

ஆய்வுப் பணிகள் குறித்து அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் கூறுகையில், தமிழக முதல்வரின் உத்தரவின்படி திருவைகுண்டம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள், சாலைகள் மற்றும் பாலங்களை பார்வையிட்டு வருகிறோம். வீடுகள் பாதிக்கப்பட்டு இருப்பதையும் ஆய்வு செய்து வருகிறோம். மழை வெள்ள நிவாரண தொகையாக ரூ.6000 வழங்கப்பட்டு வருவதையும் நேரில் பார்வையிட்டு வருகிறோம். தமிழக முதல்வரின் பல்வேறு நடவ டிக்கைகளால் தற்போது இயல்பு நிலை திரும்பி வருகிறது என்றார்.

தூத்துக்குடியில் பெருமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள்

# வீடுகள் - மீன்பிடி படகுகள் சேதமடைந்தோர் நிவாரணத்திற்கான விண்ணப்பங்கள்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கீதாஜீவன் அறிக்கை

தூத்துக்குடி, ஜன.3-

பெருமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டத்தில் சேதமடைந்த வீடுகள், மீன்பிடி படகுகள், கால்நடைகளுக்கு நிவாரணம் மற்றும் சிறு வணிகங்கள், குறு சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு கடனுதவி, பழுதடைந்த வாகனங்களுக்கு காப்பீடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பின்படி பாதிக்கப்பட்டவர்கள் உரிய நிவாரணம் பெற விண்ணப்பிக்குமாறு மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

டிசம்பர் - 17 மற்றும் 18 தேதிகளில் பெய்த கன மழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு தூத்துக்குடி மாவட்டத்தில் பெரும்பான்மையான பகுதிகள் முற்றிலும் பாதிக்கப்பட்டது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.12.2023 அன்று வெள்ளம் பாதித்த பகுதிகளை நேரில் பார்வையிட்டதோடு மட்டுமல்லாது நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் செய்திட உத்தரவிட்டார்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரண உதவிகள் வழங்கிடும் வித்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு முக்கியமான அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள்.

அதன்படி தூத்துக்குடி மாவட்டத்தில் வெள்ளத்தால் முழுவதுமாக சேதமடைந்த வீடுகளை புதிதாக கட்டுவதற்கு ரூ.4 லட்சமும், பகுதி சேதமடைந்த வீடுகளை சீரமைத்திட ரூ.2 லட்சம் வரையிலும் வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள்.

பெருமழை மற்றும் வெள்ளத்தால் இறந்த கால்நடைகளான பசு மற்றும் எருமைக்கும் ரூ.37,500/ ம், வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடு ஒன்றிற்கு ரூ.4,000/ ம், கோழி ஒன்றிற்கு ரூ.100/ம் வழங்கப்படும். மேலும் புதிய கால்நடைகளை வாங்கிட தலா ரூ.1.50 லட்சம் புதிய கடன் வழங்கப்படும். இதற்கு சம்பந்தபட்ட தாலூகா அலுவலகத்தை அனுகி பாதிப்படைந்தவர்கள் உரிய நிவாரணத்திற்கு மனு செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அதுபோல பெருமழை, வெள்ளத்தால் மானாவாரி மற்றும் நஞ்செய் நிலங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அதற்கும் இழப்பீட்டு நிவாரணம் வழங்கப்படும். பாதிக்கப்பட்ட விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் அந்தந்த பகுதி கிராம நிர்வாக அலுவலகத்தை அனுகிட கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் மழை, வெள்ளத்தின் காரணமாக தூத்துக்குடி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான இயந்திரங்களும் மீன்பிடி படகுகளும், சேதமடைந்துள்ளன. சேதமடைந்த படகுகளின் உரிமையாளர்கள் தகுந்த ஆவணங்களுடன் மீன்பிடித்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் உரிய நிவாரணத் தொகை பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்க வும்.

பெருமழை, வெள்ளத்தால் தூத்துக்குடி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட உப்பளத் தொழிலாளர்களுக்கு நிவாரணத் தொகை ரூ.3000/ம் அறிவிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்த உப்பளத் தொழிலாளர்கள் வாரியத்தை அனுகி நிவாரணத்தொகை பெற்றுக் கொள்ளலாம்.

அதுபோல வெள்ளத்தின் காரணமாக பல்வேறு மாணவ - மாணவியரின் பள்ளி மற்றும் கல்லூரி சான்றிதழ்கள், பாடபுத்தகங்கள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு இருக்கலாம். சான்றிதழ்களை இழ்நத மாணவர்கள் அவர்கள் படித்த பள்ளியில் விண்ணப்பம் எழுதிக் கொடுத்தால் மாற்று சான்றிதழ் வழங்கப்படும். பாடபுத்தகங்களை இழந்த, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பதிய பாடபுத்தகங்கள் அவர்கள் பயிலும் பள்ளியில் வழங்கப்படும்.

வருவாய்த்துறை மற்றும் இதர அரசு துறையால் வழங்கப்படும் சான்றிதழ்கள் / ஆவணங்கள் / குடும்பஅட்டை / வாக்காளர் அட்டை, ஆதார் அட்டை போன்ற அரசு ஆவணங்களை இழந்தவர்கள் தங்கள் பகுதிக்கு உட்பட்ட தாலுகா அலுவலகங்களில் நடைபெறும் சிறப்பு முகாம்களில் கலந்து பயன்பெறவும்.

மேலும் வெள்ளத்தால் பாதிப்படைந்த சிறு, குறு மற்றும் நடுத்தர உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த தொழில் நிறுவனங்கள், தங்கள் வணிகத்தை மீண்டும் புதுப்பித்துத் தேவையான மூலதனச் செலவு மற்றும் நடைமுறை மூலதனம் போன்ற அத்தியாவசிய செலவுகளுக்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் சார்பில் "வெள்ள நிவாரண கடனுதவி திட்டம்" எனும் சிறப்பு திட்டத்தின் மூலம் பாதிப்படைந்த தொழில் நிறுவனங்களுக்கு அதிகபட்சமாக ரூ.3.00 லட்சம் வரை ஆண்டுக்கு 6% சிறப்பு சலுகை வட்டி விகித்தில் கடனுதவி வழங்கிடவும் முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

மொத்தத்தில் வெள்ளத்தால் பாதிக்கபட்ட மாவட்டங்களில் உள்ள பொது மக்கள் எந்த நிலையிலும் பாதிக்கப்பட கூடாது என்ற ஒரே நோக்கத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ரூ.1000/ கோடி அளவிற்கு திட்டங்களை அறிவித்துள்ளார். பாதிப்படைந்த பொதுமக்கள் அனைவரும் உரிய நிவாரணம் கிடைத்திட சம்பந்தப்பட்ட துறை அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தூத்துக்குடியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நிதி ரூ.6000 மற்றும் 5 கிலோ அரிசியை அமைச்சர்கள் ஐ.பெரியசாமி,அர.சக்கரபாணி ஆகியோர் வழங்கினர். உடன் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் உள்ளனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில்

# நகரங்களுக்கு இணையாக கிராமங்களில் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன!

## அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

சின்னாளபட்டி, ஜன.3-

திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் கிராமங்களில் நகரங்களுக்கு இணையான நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது என்று ஊரக வளர்ச்சித் துறை ஐ,பெரியசாமி பெருமிதமாக கூறியதோடு கிராம ஊராட்சிகளில் புதிய தார்சாலை, தெருவிளக்கு வசதி, 100 சதவிகிதம் குடிதண்ணீர் கிடைக்க தமிழக முதல்வர் நடவடிக்கை எடுத்து வருவது பாராட்டுக்குரியது என்றார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினரும், தி.மு.க. மாநில துணைப்பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி ஆத்தூர் தொகுதி பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று தீர்வு வழங்கியதோடு, உடனடியாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்புகொண்டு நலத் திட்ட பணிகளை தொடங்க உத்தரவிட்டார். அப்போது கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த ஊராட்சி மன்ற தலைவர்கள் தங்கள் ஊராட்சிகளில் 30 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட நாடகமேடை மற்றும் அங்கன் வாடி மையங்களை புதுப்பித்து தரவேண்டுமென கோரிக்கை விடுத்தனர் பொது மக்களின் கோரிக்கை மனுக்களை பெற்ற ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் பெரியசாமி கடந்த இரண்டு வருடங்களாக கூட்டுறவு துறை மற்றும் ஊரக வளர்ச்சி துறை மூலமாக நியாய விலைகடைகள், நாடக மேடைகள், தார் சாலைகள், நீர்வழி பாதையில் தரைப் பாலங்கள்கட்டப்பட்டு வருகிறது தமிழகத்தில் கிராம ஊராட்சிகளின் பொற்காலம் இப்போது தான் உள்ளது. அதற்கு காரணம் திராவிட மாடல் ஆட்சி நாயகன் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தான் என்றார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது உள்ளாட்சி துறை அமைச்சராக இருந்த தளபதியார் அவர்கள் தமிழகம் முழுவதும் சென்று ஊராட்சி நிலைகளை பார்வையிட்டதால் இன்று அவர் முதல்வராக பொறுப்பில் உள்ளபோது கிராம ஊராட்சி களின் முன்னேற்றத்திற்கு அதிகம் முக்கியத்துவம் அளித்து நிதி ஒதுக்கீடு செய்து வருவதால் இன்று கிராமங்கள் தோறும் தார்சாலைகள், தெருவிளக்கு வசதிகள், குடிதண்ணீர் வசதிகள் 100 சதவிகிதம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மண் சாலைகள் கூட முதலமைச்சரின் கிராமப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் மூலம் தார்சாலைகளாக மாறி வருவதால் கிராமப்புற விவசாயிகள் பயனடைவதோடு, பள்ளிக்குச் செல்லும் மாணவர்களும் சிரமமின்றி பள்ளிக்குச் சென்று கல்வி கற்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்றார்.

தற்போது தொடர் மழை பெய்து வருவதால்பள்ளிகளில் சேதமடைந்த காம்பவுண்டு சுவர்கள் மற்றும் மாணவ மாணவியர்களின் நலன் கருதி கூடுதலாக கழிப்பறைகள் கட்டிக் கொடுக்கப்படும் என்றார். நிகழ்ச்சியின் போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் திண்டுக்கல் நெடுஞ்செழியன், ஆத்தூர் பாறைப்பட்டி ராமன், ரெட்டியார் சத்திரம் ஒன்றிய செயலாளர் ப.க.சிவ குருசாமி, நிலக்கோட்டை ஒன்றியச் செயலாளர்கள் மணிகண்டன், சௌந்தரபாண்டியன், திமுக நிர்வாகி அம்பை ரவி, சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், அமைச்சரின் உதவியாளர் ஹரிஹரன், பொதுக்குழு உறுப்பினர்கள் அக்பர், குட்டத்து ஆவாரம்பட்டி டென்னி, மலைச்சாமி மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் கண்ணன்மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் விவேகானந்தன் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி ஜே.அருண்,

அய்யம்பாளையம் பேரூராட்சி மன்ற தலைவர் ரேகாஅய்யப்பன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், திண்டுக்கல் கிழக்கு பகுதி செயலாளர் ராஜேந்திரகுமார், மாவட்ட கவுன்சிலர் சுதாசெல்வி ஆரோக்கியமேரி ராஜா, கோனூர் ஊராட்சிமன்ற தலைவர் வெள்ளத்தாய் தங்கபாண்டியன், டி.புதுப்பட்டி தி.மு.க. நிர்வாகி திண்டுக்கல் மாமபாஎன்ற உறுப்பினர்கள், நெல்லை சுபாஷ், ஆனந்தனதிமுக நிர்வாகி நந்தி நடராஜன், அய்யம்பாளையம் பேரூராட்சி அலுவலகத்தைச் சேர்ந்த சுந்தர், பொன்னுமாந்துரை திமுக நிர்வாகி அறிவழகன், உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு

# மக்கள் வறுமையிலிருந்து மீள பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகிறது!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜன.3-

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு மக்கள் வறுமையிலிருந்து மீள பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகிறது என "தினகரன்" நாளேடு தனது தலையங்கத்தில் "மக்களுக்கான அரசு" என தலைப்பிட்டு பாராட்டு தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

2023ஆம் ஆண்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு, கலைஞர் மகளிர் உரிமை தொகை, அவள் திட்டம், சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி, புதுமை பெண் திட்டம் விரிவாக்கம், மழை, வெள்ளம் நிவாரணம் என மக்களுக்கான அரசாக செயல்பட்டது. இது பெண்கள், விவசாயிகள் மத்தியில் வரவேற்பை பெற்றது.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் சேது சமுத்திர திட்டத்தை ஒன்றிய அரசு உடனடியாக நிறைவேற்ற தீர்மானம் நிறைவேற்றியது. தமிழ்நாடு அரசு பணிகளில் சேர தமிழில் தேர்ச்சி கட்டாயம். பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் புத்தொழில் நிதித் திட்டம் தொடங்கப்பட்டது. 17 ஆண்டுகளுக்கு பிறகு பழநி மலை கோயில் குடமுழுக்கு, அரசு விரைவு பேருந்துகளின் இருப்பிடத்தை அறிய சென்னை பஸ் செயலி அறிமுகமானது. மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 உதவித் தொகை வழங்கும் புதுமை பெண் திட்டம் விரிவாக்கமானது. தமிழ்நாடு ரியல் எஸ்டேட் தொலை நோக்கு திட்டம், 433 அரசு பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டது.

மின் வாகன கொள்கையை அறிவித்து ரூ.50,000 கோடி முதலீட்டை ஈர்த்து 1.5 லட்சம் வேலை வாய்ப்பை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆன்லைன் சூதாட்ட தடை சட்டம் அமலானது. மகளிர் காவல் துறை சார்பில் `அவள்' திட்டம் தொடங்கப்பட்டு பெண் காவலர்களுக்கு விடுப்பு வழங்குவது உள்ளிட்ட 9 திட்டங்களை அறிவித்தார்.

சென்னை அடுத்த ஒரகடத்தில் நிறுவியுள்ள 4.0 தொழில்நுட்ப மையங்கள், 1,000 படுக்கைகளுடன் உலகத்தரத்தில் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை, கடலூர் பண்ருட்டியில் முந்திரி பதப்படுத்தும் குறுந் தொழில் குழுமம் தொடங்கப்பட்டது.

மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு ரூ.70,000 கடனுதவி திட்டம்,500 நகர்ப்புற சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையங்கள் திறக்கப்பட்டது. மதுரையில் பிரமாண்டமான கலைஞர் நூற்றாண்டு நூலகம் திறப்பும், முதியோர் உதவித் தொகை ரூ.1,200 உயர்த்தியும் வழங்கப்படுகிறது.

சென்னையில் ரூ.4,276 கோடியில் கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் அடிக்கல், தமிழ்நாடு முழுவதும் 31,000 அரசு பள்ளிகளில் காலை உணவு திட்டமும், பிரபல பின்னணி பாடகர் மறைந்த டி.எம்.சௌந்தர ராஜனுக்கு மதுரையில் சிலை திறப்பும் வரவேற்பை பெற்றது. நடப்பாண்டில் 50 ஆயிரம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் அமலானது.

குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் `கலைஞர் மகளிர் உரிமை தொகை' திட்டத்தின் கீழ் ஒரு கோடியே 15 லட்சம் பேருக்கு மேல் பயன்பெறுகிறார்கள். உடல் உறுப்பு தானம் செய்வோரின் இறுதி சடங்குகள் அரசு மரியாதை உத்தரவு பாராட்டை பெற்றது. சென்னையில் ஏ.பி.ஜெ.அப்துல் கலாமின் திருவுருவச்சிலை, சாலைகள் குறித்து புகார் சொல்ல `நம்ம சாலை' என்ற புதிய செயலி, உங்களை தேடி, உங்கள் ஊரில்' திட்டம் அமலானது. ஒ.எம்.ஆர். சாலையில் `U' வடிவ மேம்பாலம், முன்னாள் பிரதமர் வி.பி. சிங் சிலையும் திறக்கப்பட்டது.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், நெல்லை, தூத்துக்குடி மாவட்ட மக்களுக்கு ரூ.6 ஆயிரம் நிவாரண நிதியும், தென்காசி, கன்னியாகுமரிக்கு ரூ.1,000 நிவாரணம் வழங்கப்பட்டது. கிளாம்பாக்கத்தில் இந்தியாவிலேயே மிகப்பெரிய `கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம்' திறக்கப்பட்டது.

இதுபோன்ற மக்களுக்கான திட்டங்கள் மூலம் மக்களை வறுமையில் இருந்து மீளவும், பெண்களுக்கான பொருளாதாரத்தை உயர்த்தவும் அமைந்தது என்றால் அது மிகையாகாது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



தினகரன்

ஜனவரி 2, 2024 செவ்வாய்க்கிழமை

மக்களுக்கான அரசு

2023ம் ஆண்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு, கலைஞர் மகளிர் உரிமை தொகை, அவள் திட்டம், சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவி, புதுமை பெண் திட்டம் விரிவாக்கம், மழை, வெள்ளம் நிவாரணம் என மக்களுக்கான அரசாக செயல்பட்டது. இது பெண்கள், விவசாயிகள் மத்தியில் வரவேற்பை பெற்றது.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் சேது சமுத்திர திட்டத்தை ஒன்றிய அரசு உடனடியாக நிறைவேற்ற தீர்மானம் நிறைவேற்றியது. தமிழ்நாடு அரசு பணிகளில் சேர தமிழில் தேர்ச்சி கட்டாயம். பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் புத்தொழில் நிதித் திட்டம் தொடங்கப்பட்டது. 17 ஆண்டுகளுக்கு பிறகு பழநி மலை கோயில் குடமுழுக்கு, அரசு விரைவு பேருந்துகளின் இருப்பிடத்தை அறிய சென்னை பஸ் செயலி அறிமுகமானது. மாணவிகளுக்கு மாதம் ₹1,000 உதவித்தொகை வழங்கும் புதுமை பெண் திட்டம் விரிவாக்கமானது. தமிழ்நாடு ரியல் எஸ்டேட் தொலை நோக்கு திட்டம், 433 அரசு பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு

### மர்ம நபர்கள் துப்பாக்கிச் சூடு!

# மணிப்பூரில் கலவரம் – 3 பேர் பலி!

இம்பால், ஜன.3-

மணிப்பூர் மாநிலத்தின் தௌபால் மாவட்டத்தின் லிலாங் சிங்காவ் பகுதிக்குள் காரில் வந்திறங்கிய மர்ம நபர்கள் பொது மக்களை நோக்கி நடத்திய திடீர் துப்பாக்கி சூடு அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற துப்பாக்கி சூட்டில் பொது மக்களில் மூன்று பேர் உயிரிழந்தனர். மேலும் ஐந்து பேர் படுகாயம் அடைந்தனர்.

திடீர் துப்பாக்கி சூட்டை தொடர்ந்து அந்த மாவட்டத்தில் ஊடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தௌபால் மட்டுமின்றி இம்பால் கிழக்கு, இம்பால் மேற்கு, காக்சிங் மற்றும் பிஷ்னுபூர் மாவட்டங்களிலும் ஊரடங்கு உத்தரவு மீண்டும் பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

திடீர் துப்பாக்கி சூட்டை தொடர்ந்து ஆவேசம் அடைந்த உள்ளூர்வாசிகள் மூன்று நான்குசக்கர வாகனங்களுக்கு தீ வைத்தனர். அந்த வாகனங்கள் யாருக்கு சொந்தமானவை என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற வன்முறை சம்பவத்திற்கு அம்மாநில முதலமைச்சர் பைரன் சிங் கடும் கண்டனம் தெரிவித்தார். மேலும் தாக்குதல் நடத்தியவர்களை பிடிக்கும் பணிகளில் காவல் துறை செயல்பட்டு வருகிறது.

விரைவில் அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு, சட்டப்படி தண்டிக்கப்படுவர் என அவர் மேலும் தெரிவித்தார்.

### 2024 நாடாளுமன்றத் தேர்தலில்

# பா.ஜனதா அரசை மக்கள் நிச்சயம் தூக்கி எறிவார்கள்!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ நம்பிக்கை

சென்னை,ஜன.3-

வரும் 2024 நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜனதா அரசை மக்கள் நிச்சயம் தூக்கி எறிவார்கள் என ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ ஆங்கில புத்தாண்டையொட்டி நேற்று முன்தினம் (1.1.2024) பத்திரிகையாளர்களை சந்தித்தார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பா.ஜ.க., திட்டத்தின்படி நாட்டின் பா.ஜனதா அரசு 2014 ஆட்சிக்கு வந்தது முதல் ஜனநாயகத்துக்கு விரோதமாக செயல்பட்டு வருகிறது. ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மதம், ஒரே கலாசாரம் என்கிறது அரசமைப்பு சட்டத்தின் விழுமியங்களை சிதைத்து வரும் பா.ஜனதா அரசு ஒட்டு மொத்த அதிகாரத்தையும் டில்லியில் குவித்து சர்வாதிகார ஆட்சி நடத்தி வருகிறது.

காஷ்மீரில் 370ஆவது பிரிவை அடியோடு அகற்றி நம்பிக்கை மோசடியை செய்துள்ளது. ஒவ்வொரு தேசிய இனங்களின் தனித் தனி இன, மொழி, பண்பாட்டு அடையாளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. மாநிலங்களின் எதிர்காலத்தில் ஜனநாயகத்தை காக்க முடியுமா? மதச்சார்பற்ற தன்மையை பாதுகாக்க முடியுமா? என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில், பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கையோடு இந்தியா கூட் டணி உருவாகி உள்ளது. இந்த கூட்டணி சுமுகமாக செயல்பட்டு வருகிறது.



**மக்கள் தூக்கி எறிவார்கள்!**

2024 நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜனதா அரசை நிச்சயம் மக்கள் தூக்கி எறிவார்கள் - இந்தியா கூட் டணி அரசு நாடு முழுவதும் மக்கள் சக்தியை திரட்டி பா.ஜனதாவை வீழ்த்தும் என்ற நம்பிக்கை உள்ளது.

மு.க.ஸ்டாலின் வெள்ள நிவாரண பணிகளுக்காக ரூ.21.ஆயிரத்து 600 கோடி தேவை என்று தெரிவித்தார். ஆனால், ஒன்றிய அரசு ரூ.450 கோடியை ஒதுக்கி உள்ளது. இது போதுமானது அல்ல. மாநில அரசு கேட்டுள்ள நிதியை ஒன்றிய அரசு வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

டில்லியில் பிரதமரை சந்தித்த முதலமைச்சர் உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், பீகார், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களுக்கு வரிப் பகிர்வு நிதியை அள்ளி வழங்கி உள்ள ஒன்றிய அரசு தமிழ் நாட்டுக்கு கிள்ளித் தருகிறது.

பா.ஜனதா ஆளும் உத்தரப்பிர தேசத்துக்கு ரூ.13 அயிரம் கோடியை வழங்கி உள்ள ஒன்றிய அரசு, தமிழ் நாட்டிற்கு வெறும் 2 ஆயிரத்து 900 கோடி ரூபாயை வழங்கி உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின்போது துணை பொதுச்செயலாளர் மல்லை சத்தியா. பொருளாளர் செந்தில திபன் உடன் இருந்தனர்.

### கோயம்பேட்டிலிருந்து முன்பதிவு செய்த பயணிகளுக்கு

# கட்டண வித்தியாசம் நடத்துநர் மூலம் தரப்படும்!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அறிவிப்பு!

சென்னை, ஜன.3 -

பயணிகளுக்கு கட்டண வித்தியாசம் நடத்துனர் மூலம் தரப்படும் என அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார். தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசு விரைவு போக்குவரத்து கழக பேருந்துகளில் 30 நாட்களுக்கு முன்னரே முன் பதிவு செய்த பயணிகளிடம் சென்னை கோயம்பேட்டில் இருந்து தென் மாவட்டங்களுக்கும் அதே போன்று தென் மாவட்டங்களில் இருந்து சென்னை கோயம்பேட்டிற்கும் பயணம் செய்வதற்காக பெறப்பட்ட கட்டணத்தில் தற்போது கிளாம்பாக்கம் வரை மட்டுமே அரசு விரைவு போக்குவரத்து கழக பேருந்துகள் இயக்கப்படுவதால் கட்டண வித்தியாசத்தொகை நடத்துனர் மூலம் பயணம் தொடங்கும் போது திருப்பி அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே அவர்களுக்கு வங்கி கணக்கில் செலுத்தப்படும் என்று பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களில் அறிவிக்கப்பட்டிருந்தது. இதில் ஏற்படும் கால தாமதத்தை தவிர்ப்பதற்காகவும், அதில் உள்ள சில நடைமுறை சிக்கல்களை தவிர்ப்பதற்காகவும் இவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# இராமநாதபுரத்தில் மக்களுடன் முதல்வர் திட்டம்!

## மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் பங்கேற்பு!

இராமநாதபுரம், ஜன.03-

இராமநாதபுரத்தில் மக்களுடன் முதல்வர் திட்ட சிறப்பு முகாம் 300 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு மனுக்களை மாவட்ட ஆட்சியர் சட்டப்பேரவை உறுப்பினர்களிடம் வழங்கினர். உரிய முறையில் பதிவு செய்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

இராமநாதபுரம் நகராட்சி 28,29,30,31,32,33 ஆகிய 6 வார்டுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்கள் பயன் பெறும் வகையில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் சிறப்பு முகாம் நடைபெற்றது.

இதில், இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர், சட்டப்பேரவை உறுப்பினர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம், மாவட்ட ஆட்சியர் பா.விஷ்ணு சந்திரன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்று அதிகாரிகளிடம் வழங்கி பதிவு செய்யப்பட்டது.

இந்த திட்ட முகாமில் பொதுமக்கள் மற்றும் தொழில்முனைவோர் புதிய மின் இணைப்பு, மின், பெயர்மாற்றம், குடிநீர்கழிவுநீர் இணைப்புகள், சொத்துவரி பெயர்மாற்றம், பிறப்புஇறப்பு சான்றிதழ், திடக்கழிவு மேலாண்மை, பட்டா மாறுதல், உட்பிரிவு நில அளவை, இலவச வீட்டு மனைப்பட்டா, வாரிசு சான்றிதழ், ஜாதி சான்றிதழ் உள்பட அரசு சார்ந்த சேவைகளுக்கு மனுக்கள் பெறப்பட்டு தகுதியான மனுக்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில், பரமக்குடி சட்டப்பேரவை உறுப்பினர் செ.முருகேசன், நகர் மன்ற தலைவர் கார்மேகம்,துணைத்தலைவர் பிரவீன்தங்கம், இராமநாதபுரம் ஒன்றிய குழு தலைவர் கே டி பிரபாகரன், முன்னாள் செயற்குழு உறுப்பினர் குணசேகரன், செயற்குழு உறுப்பினர் மிசா அகமது தம்பி, மண்டபம் ஒன்றிய செயலாளர்கள் கே.ஜே.பிரவீன், நிலோபர் கான் மற்றும்,ஆணையர் மற்றும் 13 துறை சார்ந்த அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

### சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. மூத்த முன்னோடி

# இரா.நாகரத்தினம் மறைவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை, ஜன.3-

சேலம் மத்திய மாவட்ட, தி.மு.க. முன்னோடி இரா. நாகரத்தினம் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

சேலம் மத்திய மாவட்டம் காடையாம்பட்டி தி.மு.க மூத்த முன்னோடி, முன்னாள் ஓமலூர் வட்ட தி.மு.க. செயலாளர், மொழிப்போர்த் தியாகியும். பூசாரிப் பட்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரும் காடையாம்பட்டி ஒன்றிய தி. மு. க. பொறுப்பாளராகவும் இருந்த ‘வட்டம்’ என்று அழைக்கப்படும் இரா. நாகரத்தினம் (வயது 89) இயற்கை எய்தினார் என்பதை அறிந்து துயரம் அடைந்தேன். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும். கழக தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழக தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட தெங்கம்புதூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழாவில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் கலந்து கொண்டு 51 பள்ளி மாணவிகளுக்கு மிதிவண்டிகளை வழங்கினார். நிகழ்ச்சியில் பள்ளி தலைமை ஆசிரியர் பாலவசிகரன், மண்டல தலைவர் முத்துராமன், மாமன்ற உறுப்பினர்கள் ஜெயவிக்ரமன், ரமேஷ், ஒன்றிய செயலாளர் லிவிங்ஸ்டன், இராஜாக்கமங்கலம் ஒன்றிய துணைப் பெருந்தலைவர் சரவணன், பகுதி செயலாளர்கள் ஜீவா, ஷேக்மீரான் உட்பட கழக உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.





இராமநாதபுரம் நகராட்சி 28,29,30,31,32,33 ஆகிய 6 வார்டுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்கள் பயன் பெறும் வகையில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் சிறப்பு முகாம் நடைபெற்றது. இதில், இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர், சட்டப்பேரவை உறுப்பினர் காதர்பாட்ஷா முத்து ராமலிங்கம், மாவட்ட ஆட்சியர் பா.விஷ்ணுசந்திரன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு பொதுமக்களிடம் மனுக்களைப் பெற்று அதிகாரிகளிடம் வழங்கி பதிவு செய்யப்பட்டது.



திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் 38–வது பட்டமளிப்பு விழாவில், நேற்று (2.1.2024) முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மாணவ, மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கினார். இவ்விழாவில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் ம. செல்வம், பதிவாளர் முனைவர் லெ.கணேசன், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருச்சிராப்பள்ளியில், பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் 38வது பட்டமளிப்பு விழாவில், நேற்று (2.1.2024) பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி ஆகியோருடன் பட்டம் பெற்ற மாணவ, மாணவியர்கள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். உடன் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் ம. செல்வம் ஆகியோர் உள்ளனர்.

### திராவிட மாடல் அரசு உயர்கல்விக்கான அனைத்து உட்கட்டமைப்புகளையும் உருவாக்கியதின் விளைவாக

# தமிழ்நாடு உயர்கல்வியின் பூங்கா!

## திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

திருச்சி, ஜன. 3-

**“திராவிட மாடல் அரசு உயர்கல்விக்கான அனைத்து உட்கட்டமைப்புகளையும் உருவாக்கியதின் விளைவாக தமிழ்நாடு உயர்கல்வியின் பூங்காவாகத் திகழ்கிறது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் 38-வது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றும்போது பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (02.01.2024) திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் 38 வது பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

Before I start my speech, let me first extend my New Year wishes to our Honourable Prime Minister and welcome him on behalf of the people of Tamil Nadu.

பட்டமளிப்பு விழா நிகழ்ச்சிக்கு முதன்மை விருந்தினராக வருகை தந்து சிறப்பித்திருக்கக்கூடிய பாரத பிரதமர் நரேந்திர மோடி அவர்களே,

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி அவர்களே, அமைச்சர் பெருமக்களே,

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகளே, மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்களே, பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் செல்வம் அவர்களே, பேராசிரியர் பெருமக்களே, என் அன்பிற்கினிய மாணவக் கண்மணிகளே, பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே, அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துகள்.

“எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு” என்று திராவிடக் கொள்கையை தமிழ் நிலத்தில் முழங்கிய புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பெயரால் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியப் பிரதமர் அவர்கள் இந்த பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளமைக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட விதை!**

இந்தியாவிலேயே உயர்கல்வியில் சிறந்து விளங்கும் மாநிலம், தமிழ்நாடு! ‘கல்வியில் சிறந்த’ என்ற எந்தப் பட்டியல் எடுத்தாலும், அதில் தமிழ்நாட்டு கல்வி நிறுவனங்கள்தான் அதிகமாக இடம் பெற்றிருக்கும். 100 ஆண்டுகளுக்கு முன்பு நீதிக்கட்சி ஆட்சிக்காலத்தில் கல்விக்காகப் போடப்பட்ட விதைதான், இன்றைக்கு வளர்ந்து, கல்வியில் சிறந்த மாநிலமாக, நாம் உயர்ந்து நிற்கிறோம்.



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் 38வது பட்டமளிப்பு விழாவில், நேற்று (2.1.2024) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இவ்விழாவில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் ம. செல்வம், பதிவாளர் முனைவர் லெ.கணேசன், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நமது திராவிட மாடல் அரசு, அனைவருக்கும் கல்வி அனைவருக்கும் கல்லூரிக் கல்வி அனைவருக்கும் ஆராய்ச்சிக் கல்வி என்ற இலக்கோடுதான் சமூக நீதிப் புரட்சியை கல்வித் துறையில் நடத்தி வருகிறது.

“இன்னார்தான் படிக்க வேண்டும்” என்று இருந்த நிலையை மாற்றி, அனைவருக்கும் அனைத்துவிதமான வாய்ப்புகளையும் உருவாக்கித் தருகிறோம்.

❖ தமிழ்நாட்டு மாணவர்களை படிப்பிலும், வாழ்க்கையிலும் வெற்றியாளராக்குவதற்கு “நான் முதல்வன்” திட்டம் உருவாக்கப்பட்டு உள்ளது.

❖ உயர்கல்வி மாணவர்களின் சிந்தனைகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில், “CM Research Grant Scheme”,

❖ உயர்கல்வி மாணவர்களின் சிந்தனைகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில், “CM Fellowship Program” ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

❖ பெண் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு “மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம்” எனும் புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் அரசுப் பள்ளியில் படித்து, கல்லூரிக்குள் நுழையும் 3 லட்சத்து 45 ஆயிரத்து 362 மாணவியருக்கு மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.

❖ தமிழ்நாடு மாணவர்கள் போட்டித் தேர்வுகள், ஆட்சிப் பணித் தேர்வுகள், திறன்சார்ந்த தேர்வுகளுக்கு தயார் செய்யும்பொருட்டு மதுரையில் “கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம்” அமைக்கப்பட்டிருக்கிறது.

**இன்றைக்கு பாரதிதாசன் பல்கலைக்கழகம், உலகப் பல்கலைக்கழகங்கள் தரவரிசைப் பட்டியலிலும், தேசிய தரவரிசைப் பட்டியலிலும் இடம் பெற்றுள்ளது. அப்படிப்பட்ட சிறப்புமிக்க இந்தப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் சிலை, பொறியியல் மற்றும் தொழில்நுட்ப துறைகள், தமிழ் மையம் ஆகிய அனைத்தையும் தொடங்கியது நம்முடைய திராவிட மாடல் அரசுதான் என்பதை பெருமையோடு குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.**

❖ எனது கனவுத் திட்டமான, ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலம் இரண்டு ஆண்டுகளில் 29 லட்சம் மாணவர்களுக்கும், 32 ஆயிரம் ஆசிரியர்களுக்கும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

**ஒரு வருடத்தில் 1.40 லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு!**

ஒரு வருடத்தில், ஒரு லட்சத்து 40 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு உள்ளது. அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கி, அனைத்து தரப்பு மாணவர்களும் தொழிற்கல்வி கற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2021-22, 2022-23, 2023-24 ஆகிய மூன்று கல்வி ஆண்டுகளில் இந்த இட ஒதுக்கீட்டின் மூலம் 28 ஆயிரத்து 749 மாணவர்கள் பொறியியல், மருத்துவம், வேளாண்மை, சட்டம், மீன்வளம் மற்றும் கால்நடை மருத்துவம் ஆகிய படிப்புகளில் சேர்ந்துள்ளார்கள். இவர்களின் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், பேருந்துக் கட்டணம் அனைத்தையும் தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொண்டு 482 கோடி ரூபாய் செலவிடுகிறது.

இது எல்லாமே தமிழ்நாட்டின் மாணவர் சக்தியை அடுத்தகட்டத்துக்கு வளர்த்தெடுக்கும் முயற்சிகள்! இன்றைக்கு பாரதிதாசன் பல்கலைக்கழகம், உலகப் பல்கலைக்கழகங்கள் தரவரிசைப் பட்டியலிலும், தேசிய தரவரிசைப் பட்டியலிலும் இடம் பெற்றுள்ளது. அப்படிப்பட்ட சிறப்புமிக்க இந்தப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் சிலை, பொறியியல் மற்றும் தொழில்நுட்ப துறைகள், தமிழ் மையம் ஆகிய அனைத்தையும் தொடங்கியது நம்முடைய ‘திராவிட மாடல்’ அரசுதான் என்பதை பெருமையோடு குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

இப்படி உயர்கல்விக்கான அனைத்து உட்கட்டமைப்புகளையும் உருவாக்கியதன் விளைவாகத்தான்,

**தரவரிசைப் பட்டியலில் தமிழ்நாடு முதலிடம்!**

❖ பாலிடெக்னிக் மாணவர் சேர்க்கையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம்.

❖ பி.எச்.டி மாணவர் சேர்க்கையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம்.

❖ இந்தியாவின் தலைசிறந்த 100 கலை அறிவியல் கல்லூரிகளாக தேசிய தர வரிசையில் உள்ள 35 கல்லூரிகள் தமிழ்நாட்டில் உள்ளன.

❖ இந்தியாவின் தலைசிறந்த 100 பல்கலைக்கழகங்களில் 22 பல்கலைக் கழகங்கள் தமிழ்நாட்டில் உள்ளன.

❖ இந்தியாவின் தலைசிறந்த 100 பொறியியல் கல்லூரிகளில் 15 பொறியியல் கல்லூரிகள் தமிழ்நாட்டில் உள்ளன.

இவ்வாறு பல்வேறு பிரிவுகளில் 146 கல்வி நிறுவனங்கள் அந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

❖ 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு தேசிய தரவரிசைப் பட்டியலில் முதல் இடம் பெற்றுள்ளது.

❖ 2023 ஆகஸ்ட் நிலவரப்படி, தேசிய தரமதிப்பீட்டு கவுன்சிலின் தரவரிசை பட்டியலில் தமிழ்நாட்டில் இருந்து 398 கல்லூரிகளும், 38 பல்கலைக் கழகங்களும் இடம் பெற்றுள்ளன.

❖ தமிழ்நாட்டில் மொத்தம் 1,623 கலை அறிவியல் கல்லூரிகள் உள்ளன. இவற்றில் 242 மகளிர் கல்லூரிகள்.

**உயர்கல்வி பூங்காவாக தமிழ்நாட்டு பல்கலைக் கழகங்கள்!**

இப்படி “உயர்கல்வியின் பூங்காவாக” தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களும் தமிழ்நாடும் திகழ்கிறது.

கல்வியில் சமூகநீதியையும் புதுமைகளையும் புகுத்துவதே பல்கலைக் கழகங்களின் நோக்கமாக இருக்க வேண்டும். அத்தகைய பல்கலைக்கழகங்களுக்கே சிறப்பான எதிர்காலம் உண்டு.

இன்று பட்டம் பெறும் மாணவ கண்மணிகளே! நீங்கள்தான் நாட்டின் எதிர்காலம்! சிறந்த அதிகாரிகளாக தொழில் முனைவோர்களாக நீங்கள் தேர்ந்த துறையில் சிறந்து விளங்குங்கள்!

சமுதாயமும், பெற்றோரும், உங்களுக்கு தந்த கல்வியை பயன்படுத்தி உங்கள் பெற்றோருக்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் உங்கள் சேவையை திரும்ப வழங்கிடுங்கள்! முக்கியமாக, சிறந்த மனிதர்களாக விளங்குங்கள்! உங்கள் வெற்றிக்கு உறுதுணையாகும் பட்டங்களை வழங்கிய பல்கலைக் கழகத்துக்கும், நீங்கள் பட்டம் பெற காரணமான ஆசிரியர்களுக்கும் பெருமை தேடி தாருங்கள்!

இந்தியாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் புகழ் சேருங்கள்! இதுதான் உங்கள் முதலமைச்சராகவும், தந்தையின் உணர்வோடும் நான் வைக்கும் வேண்டுகோள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்.



தமிழ்நாடு ஒருங்கிணைந்த இசை வேளாளர் சங்கங்களின் கூட்டமைப்பு துவக்கவிழா நல்லி குப்புசாமி தலைமையில் சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் அமைந்துள்ள முத்தமிழ்ப் பேரவை திருவாவடுதுறை டி.என்.இராஜரத்தினம் நினைவரங்கத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தினை ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா எம்.பி., திறந்து வைத்தார். இதில் இசைவேளாளர் முற்போக்கு நலச் சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர்.



கோவை மாநகராட்சி, மத்திய மண்டலம், புலியகுளம் வெரிவாட பள்ளியில் நடைபெற்ற, கோவைமாநகராட்சி, புலியகுளம் 64,66 ஆவது வார்டுக்குட்பட்ட "மக்களுடன் முதல்வர்" நிகழ்ச்சியில், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் கலந்து கொண்டார். இந்நிகழ்வில், கோவை மாநகராட்சி, மத்திய மண்டல தலைவர் மீனாலோகு, கோவைமாநகராட்சி மத்திய மண்டல உதவிஆணையாளர் செந்தில் குமரன் ராமநாதபுரம் பகுதி செயலாளர் ப.பசுபதி, மாமன்ற உறுப்பினர்கள் முனியம்மாள் முருகன், ஜெயப்பிரதா தேவி, வட்டக்கழகச் செயலாளர்கள் நவீன் முருகன், சீனிவாசன், மாநகர் மாவட்ட சிறுபான்மையினர் நலக் குழு அமைப்பாளர் இலா.தேவசீலன், கழக நிர்வாகிகள்,கோவை மாநகராட்சி அதிகாரிகள், மாநகராட்சி அலுவலர்கள்,கழக உடன்பிறப்புக்கள், ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் புத்தாண்டுக் கொண்டாட்டம்!

# சுற்றுலாத் தலங்களில் மக்கள் வெள்ளம்!

சென்னை, ஜன.3-

ஆங்கிலப் புத்தாண்டையொட்டி தமிழ்நாட்டில் பல்வேறு சுற்றுலாத் தலங்களில் மக்கள் கூட்டம் அலைமோதியது. அவ்வூர்களில் நடந்த கொண்டாட்ட விவரங்கள் வருமாறு :-

**சென்னை:** ஆங்கில புத்தாண்டு பிறப்பையொட்டி சென்னை கடற்கரை, மாமல்லபுரம் உள்பட தமிழக முழுவதும் உள்ள சுற்றுலா தலங்களில் இன்று மக்கள் கூட்டம் அலைமோதியது.

**குமரி:** சர்வதேச சுற்றுலாத்தலமான கன்னியாகுமரியில் நேற்று காலையிலேயே ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்திருந்தனர். 2023ம் ஆண்டின் கடைசி சூரிய உதயம் மற்றும் மாலையில் கடைசி சூரிய அஸ்தமன காட்சிகளை கண்டு ரசித்தனர். இதையடுத்து இரவு நேரம் செல்ல செல்ல பல இடங்களில் இருந்து சுற்றுலா பயணிகள் அதிகளவில் குடும்பம் குடும்பமாக வர தொடங்கினர். குறிப்பாக இளசுகளின் கூட்டம் அலைமோதியது. அவர்கள் புத்தாண்டு பிறப்பதற்காக காத்திருந்தனர். நள்ளிரவு 11.45 மணிக்கே வினாடிகளை எண்ண ஆரம்பித்தனர். சரியாக நள்ளிரவு 12 மணிக்கு புத்தாண்டு பிறந்ததும், ஆட்டம்-பாட்டம்- கொண்டாட்டம் என இளைஞர்கள் உற்சாகத்தில் திளைத்தனர். ஆர்வ மிகுதியில் சில இளைஞர்கள் கத்தி கூச்சலிட்டனர். ஒருவரை ஒருவர் கட்டித்தழுவி புத்தாண்டு வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர். கும்பலாக வந்த நண்பர்கள் ரெடியாக கொண்டு வந்திருந்த கேக் வகைகளை அங்கேயே வெட்டி பலருக்கும் கொடுத்தனர். இன்று புத்தாண்டின் முதல் சூரிய உதயம் என்பதால் அதிகாலையிலேயே சுற்றுலா பயணிகள் குவிந்தனர். குமரி குற்றாலம் என்று அழைக்கப்படும் திற்பரப்பு அருவியிலும் இன்று சுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதியது.

**ஊட்டி:** கிறிஸ்துமஸ், பள்ளி அரையாண்டு விடுமுறை மற்றும் புத்தாண்டு விடுமுறை என தொடர் விடுமுறை வந்த நிலையில் ஊட்டியில் சுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதுகிறது. புத்தாண்டையொட்டி சுற்றுலா பயணிகளால் ஊட்டியில் உள்ள காட்டேஜ்கள், லாட்ஜ் மற்றும் ரிசார்ட்டுக்கள் அனைத்தும் நிரம்பி வழிகின்றன. நேற்று ஊட்டியில் உள்ள தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, படகு இல்லம், சூட்டிங் மட்டம், பைக்காரா படகு இல்லம் போன்ற பகுதிகளில் ஏராளமான சுற்றுலா பயணிகள் கூட்டம் காணப்பட்டது. இரவு பல்வேறு ஓட்டல்கள், ரிசார்ட்டுக்கள் மற்றும் காட்டேஜ்களில் புத்தாண்டு கொண்டாட்டங்களை கட்டின. சுற்றுலா பயணிகள் கேக் வெட்டியும், ஆடி, பாடி புத்தாண்டை வரவேற்று கொண்டாடி மகிழ்ந்தனர்.

**கோவை:** கோவை மாவட்டம் பொள்ளாச்சியை அடுத்த ஆழியார் அணை மற்றும் கவியருவிக்கு திருப்பூர், ஈரோடு, சேலம், திண்டுக்கல், மதுரை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் கார், வேன், பஸ் ஆகிய வாகனங்களில் வந்திருந்தனர். அணையின் ஒருபகுதியில் சுற்றுலா பயணிகள் படகு சவாரி செய்தனர். ஆழியார் அணை மற்றும் பூங்காவின் அழகை ரசித்த சுற்றுலா பயணிகளில் பெரும்பாலானவர்களும், வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள கவியருவிக்கும் சென்றனர். அருவியில் மிதமாக கொட்டிய தண்ணீரில், பயணிகள் வெகுநேரம் குளித்து மகிழ்ந்தனர்.

**கொடைக்கானல்:** திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் மலைகளின் இளவரசி என அழைக்கப்படுகிறது. இங்கு புத்தாண்டை கொண்டாட பிற மாவட்டங்களில் இருந்தும், வெளிமாநிலங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் நேற்று குவிந்தனர். இதற்காக நகரில் உள்ள தனியார் தங்கும் விடுதிகள், சுற்றுலாப் பயணிகளை கவருவதற்கு என பல்வேறு சிறப்பு ஏற்பாடுகளை செய்திருந்தனர். சுற்றுலாப் பயணிகளின் வாகனங்களால், அனைத்து பகுதிகளிலும் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. சுற்றுலா இடங்களான மோயர் பாய்ண்ட், பைன் மரக்காடுகள், குணா குகை, தூண்பாறை, பசுமைப் பள்ளத்தாக்கு, அப்பர் லேக் வியூ, ரோஜாப் பூங்கா, பிரையண்ட் பார்க், செட்டியார் பூங்கா, கொடைக்கானல் ஏரி, கோக்கர்ஸ் வாக் உள்ளிட்ட பகுதிகளில் சுற்றுலாப் பயணிகள் நிரம்பி வழிந்தனர்.

இதனால், நகரில் உள்ள தங்கும் விடுதிகள் அனைத்தும் ஹவுஸ் புல் ஆகின. உணவு விடுதிகளும் சுற்றுலா பயணிகளால் நிரம்பி வழிந்தன. சுற்றுலா வாகனங்களால் நகரில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனால், கொடைக்கானல் ஏரிச்சாலையில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டது. நகரில் கடந்த பல தினங்களாக 10 டிகிரிக்கு குறைவான வெப்பம் நிலவி வருகிறது. இரவில் குளிரின் தாக்கம் அதிகமாக இருந்தது. கடுங்குளிரையும் பொருட்படுத்தால், சுற்றுலா பயணிகள் மிகவும் ரசித்து சென்றனர். இதே போல் சென்னை கடற்கரை, மாமல்லபுரம், சேலம் ஏற்காடு உள்பட தமிழக சுற்றுலா தலங்களில் நேற்று மக்கள் கூட்டம் அலைமோதியது.

### பொங்கல் பண்டிகையை முன்னிட்டு

# தென் மாவட்ட ரயில்கள் முன்பதிவு முடிந்தது!

## சிறப்பு ரயில்களை இயக்க பொதுமக்கள் கோரிக்கை!

சென்னை, ஜன.3-

பொங்கல் பண்டிகையையொட்டி சென்னையில் இருந்து தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி, தென்காசி உள்ளிட்ட பகுதிகளுக்கு இயக்கப்படும் அனைத்து ரயில்களும் முன்பதிவு முடிந்துவிட்டது. காத்திருப்போர் பட்டியல் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் சொந்த ஊர் செல்வோர்பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அதிக அளவில் சிறப்பு ரயில்களை இயக்க கோரிக்கை வலுத்துள்ளது. தமிழர்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றான தை பொங்கல் வருகிற ஜனவரி 15ம் தேதி (திங்கட்கிழமை) கொண்டாடப்படுகிறது.

இதற்காக சொந்த ஊர் செல்ல நினைக்கும் அனைவரும் முன்பதிவு தொடங்கிய 4 மாதங்களுக்கு முன்பே ரயில்களில் டிக்கெட் புக்கிங் செய்ய தொடங்கினர்.

இதனால், முன்பதிவு தொடங்கிய அடுத்த சில நிமிடங்களிலே அனைத்து ரயில்களிலும் டிக்கெட் ஹவுஸ் புல் ஆனது. அதாவது, 15ம் தேதி தான் பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது. அதற்கு முன் 12ம் தேதி(வெள்ளிக்கிழமை) முதலே மக்கள் சொந்த ஊர்களுக்குச் செல்ல திட்டமிட்டுள்ளனர். இதனால், இந்த தேதியில் தென்மாவட்டங்களுக்குச் செல்லும் அனைத்து ரயில்களும் நிரம்பியுள்ளது.

அதாவது 2ம் வகுப்பு படுக்கை வசதி பெட்டி முதல் அனைத்து ஏசி வகை பெட்டிகளும் நிரம்பியுள்ளன. குறிப்பாக சென்னையில் இருந்து தூத்துக்குடிக்கு இயக்கப்படும் முத்துநகர் எக்ஸ்பிரஸ், திருநெல்வேலிக்கு இயக்கப்படும் ரயில்கள் மற்றும் தென்காசி, கன்னியாகுமரிக்கு இயக்கப்படும் அனைத்து ரயில்களும் நிரம்பியுள்ளது. ஒவ்வொரு ரயில்களிலும் காத்திருப்பேர் எண்ணிக்கை 200 எண்ணிக்கையை கடந்துள்ளது. இதே போல கோவை, திருச்சி, மதுரை, சேலம் உள்ளிட்ட பகுதிகளுக்கு இயக்கப்படும் ரயில்களிலும்அதிக அளவில் வெயிட்டிங் லிஸ்ட் இருந்து வருகிறது.

பொங்கல் பண்டிகை நெருங்க, நெருங்க காத்திருப்போர் பட்டியல் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனால், பெரும்பாலானவர்களுக்கு டிக்கெட் கன்பார்ம் ஆகுமா? என்ற கவலை இப்போதே தொற்ற தொடங்கியுள்ளது. இதனால், அவர்கள் அடுத்த கட்டமாக என்ன நடவடிக்கையில் இறங்கலாம் என்று யோசித்து வருகின்றனர். ஏனென்றால் ரயிலில் தான் டிக்கெட் கட்டணம் குறைவு, குடும்பத்துடன் செல்ல சவுகரியமாக இருக்கும். பண்டிகை நாட்களில் தனியார் ஆம்னி பஸ்களில் டிக்கெட் ஜெட் வேகத்தில் அதிகரித்து விடும். ஒருவருக்கே டிக்கெட் ரூ.4000, ரூ.3000 என்று நிர்ணயிக்கப்பட்டு இருக்கும்.

இதனால், குடும்பத்துடன் பஸ்களில் பயணம் செய்ய அதிக தொகை செலவு செய்ய வேண்டும். அது நடுத்தர மக்களால் முடியாத காரியம். இதனால் குறைந்த செலவில் பயணம் செய்யும் வகையில் அதிக அளவில் சிறப்பு ரயில்களை இயக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது. கூட்ட நெரிசல் அதிகம் உள்ள பகுதிகளில் சிறப்பு ரயில்களை இயக்க தெற்கு ரயில்வே பரிசீலித்து வருவதாக கூறப்படுகிறது. இதனால், விரைவில் சிறப்பு ரயில்களுக்கான அறிவிப்பு வெளியாகலாம் என்று பொங்கலுக்கு சொந்த ஊர்களுக்கு செல்ல திட்டமிட்டுள்ளவர்கள் ஆர்வத்துடன் காத்துள்ளனர்.



திருச்சி 36–வது வார்டு அம்கா பரத்தைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் மாரி முத்து அவரது மனைவி, 2 மகள்கள், தாய் உள்ளிட்ட 4 பேரும் நேற்று முன்தினம் வீடு இடிந்து விழுந்ததில் பரிதாபமாக உயிரிழந்தனர். இத்தகவலை அறிந்த பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேரில் சென்று அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொண்டதுடன் நிவாரண உதவி வழங்கினார். இந்த நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், காட்டூர் பகுதி கழகச் செயலாளர் நீலமேகம், மாமன்ற உறுப்பினர் கார்த்தி மற்றும் அரசு உயர் அதிகாரிகள் மற்றும் பகுதி மக்கள் உடன் இருந்தனர்.

### ஒன்றியத்தில் பா.ஜ.க. அரசை அகற்றினால்தான்

# இந்தியாவைப் பாதுகாக்க முடியும்!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கே.பாலகிருஷ்ணன் உறுதி!

சென்னை, ஜன.3-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் வெளியிட்ட அறிக்கை வருமாறு :-

மனித நேயம், மதச்சார்பின்மை, சமூக நீதி, நாடாளுமன்ற ஜனநாயகம், மாநில உரிமைகள் ஆகிய அனைத்தையும் கபளீகரம் செய்யும் ஒன்றிய பா.ஜ.க. அரசு மதவெறியை பரப்பி மக்களை கூறுபோடும் பாசிச எண்ணத்துடன் செயல்பட்டு வருகிறது. அதனை வீழ்த்தும் சாதனை மிக்க ஆண்டாக 2024 அமைந்திட வேண்டுமென்ற நம்பிக்கையோடு புத்தாண்டை வரவேற்போம்.

ஒன்றிய பா.ஜ. அரசு மதச்சார்பற்ற ஜனநாயக கூட்டாட்சி அடித்தளம் கொண்ட அரசியல் சாசனத்தின் மீது அடுக்கடுக்கான தாக்குதல்களைத் தொடுத்திட்ட ஆண்டாகவே விடைபெறும் ஆண்டு அமைந்தது.

வகுப்புவாதம் மற்றும் கார்ப்பரேட் முதலாளிகளின் நலன் என்ற இரட்டை இலக்கோடு ஒன்றிய பா.ஜ.க. அரசு செயல்படுகிறது. வறுமை, வேலையின்மை, விலை உயர்வு, பொதுத்துறை தனியார்மயம், மனுவாத கருத்தியல் பரப்பு, பாலின அடிப்படையிலான அநீதிகள், தீண்டாமை உள்ளிட்ட சாதிய சமூகக் கொடுமைகள், சிறுபான்மை மக்கள் மீதான தாக்குதல்கள் என ஒன்றிய பா.ஜ.க. அரசு நாட்டையே நாசம் செய்து வருகிறது.

**தமிழ்நாட்டிற்கு நிதி வழங்கவில்லை!**

தமிழ்நாட்டில் ஏற்பட்ட பேரிடர் வெள்ள சேதத்திற்கு உரிய நிவாரண நிதி கொடுக்க மறுத்து வருவது, மாநிலத்திற்கான நிதி பங்கீட்டை மறுப்பது உள்ளிட்ட பாகுபாட்டு வஞ்சக அணுகுமுறையை மேற்கொண்டு வருகிறது. பாசிச பாணி ஆர்எஸ்எஸ் அமைப்பால் வழிநடத்தப்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசை அதிகாரத்திலிருந்து அகற்றுவதன் மூலமே இந்தியாவையும், இந்திய மக்களையும் பாதுகாக்க முடியும். நாடாளுமன்றத் தேர்தலை நடப்பாண்டில் நாடு சந்திக்கவுள்ள நிலையில், மக்கள் விரோத, எதேச்சதிகார, வகுப்புவாத, வலதுசாரி பாஜ அரசை வீழ்த்துவதொன்றே இந்திய மக்களின் புத்தாண்டுச் சூளுரையாக அமைந்திட வேண்டும்.

இவ்வாறு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கே.பாலகிருஷ்ணன் விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### படிக்கத் தெரியாத விவசாயிகளின் நிலத்தை அபகரிக்க பா.ஜ.க. நிர்வாகி சதி!

# ஏழை விவசாயிகளுக்கு சம்மன் அனுப்பிய அமலாக்கத்துறை!

## சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது புகார்!

சென்னை, ஜன.3-

பிரதம மந்திரி கிஷான் திட்டத்தில் உதவி பெறும் விவசாயிகளுக்கு ‘ஜாதி’ பெயரை குறிப்பிட்டு சட்டவிரோத பணம் பரிமாற்றம் சட்டத்தின் கீழ் சம்மன் அனுப்பிய அமலாக்கத்துறை அதிகாரிகள் மீது டிஜிபியிடம் அளித்த புகாரின் மீது நுங்கம்பாக்கம் போலீசார் தனது விசாரணையை நேற்று முன்தினம் தொடங்கினர்.

முதற்கட்டமாக விவசாயிகள் தரப்பு வழக்கறிஞர் பிரவினாவிடம் போலீசார் விசாரணை நடத்தினர். சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே ராமநாயக்கன் பாளையம் பகுதியில் 10 ஏக்கர் காலனி வடக்கு காடு என்று அழைக்ககூடிய காராமணி பகுதியைச் சேர்ந்தவர் சின்னையா. இவருக்கு கண்ணையன் மற்றும் கிருஷ்ணன் என்ற 2 மகன்கள் உள்ளனர். சின்னையா இறப்பதற்கு முன்பு 6.5 ஏக்கர் விளை நிலத்தை விலைக்கு வாங்கியுள்ளார். நிலம் தற்போது மகன்களான கண்ணையன் மற்றும் கிருஷ்ணன் கட்டுப்பாட்டில் உள்ளது.

இதற்கிடையே சேலம் இருப்பாலை பகுதியைச் சேர்ந்த பா.ஜ.க. சேலம் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் குணசேகரன், கண்ணையன் மற்றும் அவரது சகோதரன் கிருஷ்ணனுக்குச் சொந்தமான 6.5 ஏக்கர் நிலத்தை வாங்க முயற்சி செய்துள்ளார். ஆனால், நிலம் தனது தந்தை சின்னையா வாங்கியது என்பதால் அவரது ஞாபகமாக யாருக்கும் விற்பனை செய்ய மாட்டோம் என்று கூறி சகோதரர்கள் மறுத்துவிட்டனர். ஆனால் பா.ஜ.க. நிர்வாகி குணசேகரன், படிப்பறிவு இல்லாத ஏழைகளான கண்ணையன் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் நிலத்தை விற்பனை செய்ய முன்பணமாக ரூ.1 லட்சம் பெற்றதாக போலியாக ஒரு பத்திரம் தயாரித்து, அதன் மூலம் அவர்களின் 6.5 ஏக்கர் நிலத்தை அபகரிக்க முயற்சி செய்துள்ளார்.

இதனால் அதிர்ச்சியடைந்த கண்ணையன் மற்றும் அவரது சகோதரர் கிருஷ்ணன் ஆகியோர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். எனினும் குணசேகரன் தொடர்ந்து அடியாட்களை வைத்து ஏழை சகோதரர்களை மிட்டியும், அவர்கள் 6.5 ஏக்கர் நிலத்தை பயிர் செய்யாதபடி தடுத்தும் வருவதாக கூறப்படுகிறது. இந்நிலையில் கடந்த ஜூன் 22ம் தேதி கண்ணையன் மற்றும் கிருஷ்ணன் ஆகியோருக்கு சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் இருந்து சம்மன் ஒன்று பதிவு தபால் மூலம் வந்தது. ஒன்றிய அரசின் அமலாக்கத்துறை அலுவலகத்தில் இருந்து சம்மன் அனுப்பும் வகையில் நாங்கள் எந்த தவறும் செய்யவில்லையே என்று அதிர்ச்சி அடைந்த இருவரும் தங்களுக்கு தெரிந்த பெண் வழக்கறிஞர் பிரவினாவை அணுகினர். அவர் அதை பார்த்தபோது, அதில் திரு.கண்ணன், ‘இந்து - பள்ளர்’ என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் ‘பள்ளர்’ என்ற ஜாதி பெயர் ‘தேவேந்திர குல வேளாளர்’ என்று மாற்றப்பட்டு 2 ஆண்டுகள் ஆன நிலையில், ஒன்றிய அரசு எப்படி பள்ளர் என்று ஜாதி பெயரை குறிப்பிட்டிருந்தது. மேலும், அமலாக்கத்துறை அனுப்பிய சம்மனில் கண்ணையா மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் ‘சட்டவிரோத பணம் பரிமாற்றம் சட்டத்தின் கீழ் உங்களிடம் விசாரணை செய்ய வேண்டும். எனவே விசாரணைக்காக வரும் ஜூலை 5ம் தேதி சென்னையில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்திற்கு ஆஜராக வேண்டும். நேரில் ஆஜராகவில்லை என்றால், சட்டவிரோத பணம் பரிமாற்றம் சட்டத்தின் கீழ் இருவருக்கும் சொந்தமான 6.5 ஏக்கர் நிலத்தை நாங்கள் ஜப்தி செய்வோம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

பிரதமர் ஏழை விவசாயிகளுக்கு வழங்கும் ரூ.6 ஆயிரத்தை நம்பி வசித்து வரும் விவசாயிகளுக்கு எப்படி சட்டவிரோத பணம் பரிமாற்றம் சட்டத்தின் கீழ் சம்மன் அனுப்பப்பட்டது என்று வழக்கறிஞர் பிரவினா அதிர்ச்சியடைந்தார். அதைதொடர்ந்து 2 விவசாயிகளுடன் கடந்த ஜூலை 5ம் தேதி சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் வழக்கறிஞர் பிரவினா ஆஜரானார். அப்போது விவசாயிகளான கண்ணையன், கிருஷ்ணன் ஆகியோரை மட்டுமே உள்ளே விசாரணைக்கு வரவேண்டும். உடன் யாரும் வரக்கூடாது என்று கூறி, வழக்கறிஞர் பிரவினாவை அதிகாரிகள் உள்ளே அனுமதிக்கவில்லை.

படிக்க தெரியாத விவசாயிகளின் வழக்கறிஞராகவே தான் நான் உடன் வந்தேன் என்று கூறி, விசாரணைக்கு தன்னை அனுமதிக்க கோரி பெண் வழக்கறிஞர் பிரவினா பல முறை வாதாடியும் அதிகாரிகள் ஏற்கவில்லை. பின்னர் கண்ணையன், கிருஷ்ணன் ஆகிய 2 விவசாயிகளும் வழக்கறிஞர் பிரவினா மூலம் பெயருக்கு பின்னால் ஜாதி பெயரை குறிப்பிட்டும், கிருஷ்ணன் தனது வங்கி கணக்கில் ரூ.500 மட்டுமே இருப்பு வைத்துள்ள நிலையில், அவருக்கு சட்டவிரோத பணம் பரிமாற்றம் சட்டத்தின் கீழ் எப்படி அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியது. விவசாயி கிருஷ்ணன் ஒன்றிய அரசின் 5 ஏக்கருக்கு கீழ் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் ஆண்டுக்கு ரூ.6 ஆயிரம் நிதி உதவி பெறும் நபராக உள்ளார். ரேஷன் கடைகளில் தான் அரிசி வாங்கி சமைத்து சாப்பிட்டு வருகிறார்.

அப்படி இருக்கும் போது, எந்த அடிப்படையில்ஏழைவிவசாயிகளுக்கு அமலாக்கத்துறை அதிகாரிகள் சம்மன் அனுப்பினர். பா.ஜ.க. பிரமுகர் குணசேகரன் 6.5 ஏக்கர் நிலத்தை தனக்கு விற்பனை செய்ய வேண்டும் என்று மிரட்டி வரும் நிலையில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சம்மன் அனுப்பியுள்ளதால், பா.ஜ.க.வின் முக்கிய பிரமுகர்கள் அமலாக்கத்துறை அதிகாரிகளின் பின்னணியில் இருப்பதாக சந்தேகம் எழுந்துள்ளது. எனவே சம்மன் அனுப்பிய, அமலாக்கத்துறை உதவி இயக்குநர் ரித்தேஷ் குமார் மற்றும் அதிகாரிகள் பிரபா, சந்திரன் உள்ளிட்டோர் மீது சட்டப்படி வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புகார் அளித்தார்.

அந்த புகாரின் மீது விசாரணை நடத்த டிஜிபி சங்கர் ஜிவால் அமலாக்கத்துறை அலுவலகம் அமைந்துள்ள நுங்கம்பாக்கம் காவல் நிலையத்திற்கு உத்தரவிட்டார். அதன்படி, நுங்கம்பாக்கம் போலீசார், ஏழை மற்றும் எளிய படிக்க தெரியாத விவசாயிகளான கண்ணையன் மற்றும் கிருஷ்ணன் ஆகியோருக்கு, எந்த அடிப்படையில் ‘சட்டவிரோத பணம் பரிமாற்றம் சட்டத்தின் கீழ் அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியது? விவசாயிக்கு ஜாதி பெயரை குறிப்பிட்டு ஏன் சம்மன் அனுப்ப வேண்டும் என்பது குறித்து விசாரணையை நேற்று முன்தினம் தொடங்கினர்.

முதற்கட்டமாக நுங்கம்பாக்கம் போலீசார் 2 விவசாயிகளுக்கு ஆதரவாக புகார் அளித்த பெண் வழக்கறிஞரான பிரவினாவிற்கு அனுப்பப்பட்ட சம்மனை தொடர்ந்து, அவரிடம் நேற்று முன்தினம் மாலை நுங்கம்பாக்கம் போலீசார் விசாரணை நடத்தினர். இந்த விசாரணையின் போது, வழக்கறிஞர் பிரவினா ஏழை விவசாயி களுக்கு ஜாதி பெயரை கூறி அமலாக்கத்துறை அனுப்பிய சம்மன் கடிதம் உள்ளிட்ட ஆவணங்களை போலீசாரிடம் அளித்து, அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு விளக்கம் அளித்தார். அதை தொடர்ந்து ஓரிரு நாளில் விவசாயி களுக்கு சம்மன் அனுப்பிய அமலாக்கத்துறை அதிகாரிகளை நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்கும்படி சம்மன் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மகளிர் சுய உதவிக்குழுக்களின் மூலம் அமைக்கப்பட்டுள்ள சிறுதானிய சிற்றுண்டி உணவகத்தினை திறந்து வைத்து, 41 மகளிர் சுய உதவிக்குழுக்களை சார்ந்த உறுப்பினர்களுக்கு மொத்தம் ரூ.5.22 கோடி மதிப்பீட்டிலான வங்கி கடனுதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், மகளிர் திட்ட அலுவலர் திருமதி க.வானதி, திருப்புவனம் பேரூராட்சி தலைவர் த.சேங்கைமாறன், சிவகங்கை நகர்மன்ற தலைவர் சி.எம்.துரைஆனந்த், மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் மரு.பிரபாவதி உட்பட பலர் உள்ளனர்.



நீலகிரி மாவட்டம், உதகை பெத்லகேம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நேற்று (02.01.2024) பள்ளிகல்வித்துறையின் சார்பில், நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், 318 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.15.36 இலட்சம் மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, உதகை வருவாய் கோட்டாட்சியர் மகராஜன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.கீதா, உதகை நகரமன்றத் தலைவர் திருமதி.வாணீஷ்வரி, உதகை ஊராட்சி ஒன்றிய தலைவர் மாயன் (எ) மாதன் உட்பட பலர் உள்ளனர்.

### தமிழ்நாட்டில் புயல் - பெருமழை வெள்ள பாதிப்பை - ஒன்றிய அரசு

# கடும் பேரிடராக அறிவித்து கணிசமான நிதி ஒதுக்க வேண்டும்!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, ஜன. 3 -

தமிழ்நாட்டில் புயல் - மழை வெள்ளப் பாதிப்புகளை, ஒன்றிய அரசு கடும் பேரிடராக அறிவித்து கணிசமான நிதி ஒதுக்க வேண்டும் என்று ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து 2.1.2024 தேதியில் ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:




கடந்த 100 ஆண்டுகளில் இல்லாத பெருமழை, தமிழ்நாட்டில் தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி, தென்காசி ஆகிய தென் மாவட்டங்களில் கடந்த மாதம் 17, 18ந்தேதிகளில் பெய்திருக்கிறது. இந்த மழை வெள்ளத்தில் சிக்கி, ஏறத்தாழ 57 பேர் உயிரிழந்துள்ளனர். கால்நடை இழப்பு கணக்கில் அடங்காதது. வீடுகள், குடிசைகள், கடைகள், வணிக நிறுவனங்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின. ஏற்கனவே, கடந்த மாதம் 4ந்தேதி ‘மிக்ஜம்’ புயல் வெள்ளத்தினால் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய வட மாவட்டங்கள் பலத்த சேதம் அடைந்தன. இரு இடங்களில் நடந்த மழை வெள்ள பாதிப்புகளையும் மத்தியக் குழு பார்வையிட்டு சென்றிருக்கிறது.

சென்னை உள்பட 4 மாவட்ட பாதிப்புகளுக்கு, தற்காலிக நிவாரணத் தொகையாக ரூ.7,033 கோடியும், நிரந்தர நிவாரணத் தொகையாக ரூ.12,659 கோடியும் வேண்டும் என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய அரசாங்கத்தை கோரியுள்ளார். தூத்துக்குடி உள்ளிட்ட தென்மாவட்டங்களில், முதற்கட்ட சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள அவசர நிவாரண நிதியாக ரூ.2 ஆயிரம் கோடி வழங்க வற்புறுத்தியுள்ளார். ஆக, இப்போதைக்கு மொத்தம் ரூ.21,692 கோடி நிதி கோரப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல், தமிழ் நாட்டில் மழை வெள்ள பாதிப்புகளை கடும் பேரிடராக அறிவிக்க வேண்டும் என்பதும் தமிழ்நாடு அரசின் கோரிக்கை.

ஒன்றிய அரசாங்கத்தின் சார்பில் தமிழ்நாடு அரசுக்கு ரூ.900 கோடி கொடுத்திருப்பதாக கூறப்படுகிறது. இது ஆண்டுதோறும் அனைத்து மாநிலங்களுக்கும் மாநில பேரிடர் நிவாரண நிதியாக மழை, வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை பேரிடர் காலங்களில் பயன்படுத்த ஒன்றிய அரசாங்கம் வழங்கி வருகிறது. இதற்காக ஒரு தொகையை நிர்ணயித்து, 75 சதவீதத்தை ஒன்றிய அரசாங்கம் வழங்கும். மீதி 25 சதவீதத்தை மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த வகையில், தமிழ்நாட்டுக்கு மாநில பேரிடர் நிதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகை ரூ.1,200 கோடி. அதில் 75 சதவீதமான ரூ.900 கோடியைத்தான் ஒன்றிய அரசாங்கம் தந்திருக்கிறது.

இப்போதைய கடும் மழை வெள்ள பாதிப்பை ஒன்றிய அரசாங்கம் கடும் பேரிடராக அறிவித்து, தேசிய பேரிடர் நிதியில் இருந்து கூடுதல் நிதியை ஒதுக்க வேண்டும். ஏற்கனவே, 2015ம் ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளத்தின் போது, தமிழ்நாடு அரசு சார்பில் ரூ.25,912 கோடியே 45 லட்சம் நிதி கோரப்பட்ட நிலையில், ஒன்றிய அரசாங்கம் ஒதுக்கியது ரூ.1,737 கோடியே 65 லட்சம்தான். அதுபோன்று இப்போதும் குறைவான தொகையே ஒதுக்கப்பட்டால், அதை வைத்து ஒன்றுமே செய்யமுடியாது. எனவே, இந்த பேரழிவை கடும் பேரிடராக அறிவித்து, கணிசமான தொகையை ஒன்றிய அரசாங்கம் ஒதுக்க வேண்டும் என்பதுதான் தமிழக மக்களின், தமிழ்நாடு அரசின் கோரிக்கையாக இருக்கிறது.

இந்தநிலையில், கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை பிரதமர் நரேந்திரமோடி, முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு டெலிபோன் செய்து, வரலாறு காணாத பெருவெள்ளம் குறித்து கேட்டறிந்தார். அப்போது, முதல் அமைச்சர் அவரிடம், விளக்கமாக கூறி ஒன்றிய அரசாங்கம் உடனடியாக நிதியுதவி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இதற்கு பதில் அளித்த பிரதமர் நரேந்திரமோடி, இந்த இரட்டை பேரிடரில் இருந்து தமிழ்நாடு மீண்டெழ ஒன்றிய அரசாங்கம் உதவும் என்று உறுதியளித்தார். எனவே, கடந்த காலங்கள் போல் அல்லாமல், இந்த முறை ஒன்றிய அரசாங்கம் தாராளமாக நிதியுதவி அளிக்கும் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில்

# 14 நாட்களுக்குப் பின்னர் மின் உற்பத்தி!

தூத்துக்குடி, ஜன. 3 -

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் வெள்ள நீர் புகுந்ததால் மின் உற்பத்தி பாதிக்கப்பட்ட நிலையில் 14 நாட்களுக்குப் பின் தற்போது 5வது அலகில் மின் உற்பத்தி நேற்று முன்தினம் முதல் தொடங்கியது. தமிழக அரசுக்கு சொந்தமான அனல் மின் நிலையம் தூத்துக்குடி தெர்மல்நகர் பகுதியில் செயல்பட்டு வருகிறது. இந்த அனல் மின் நிலையத்தில் தலா 210 மெகாவாட் உற்பத்தி திறன் கொண்ட 5 யூனிட்களில் இருந்து சுமார் ஆயிரத்து 50 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த 17 மற்றும் 18ம் தேதி ஆகிய 2 நாள்களில் பெய்த கனமழை காரணமாக, மின் நிலைய வளாகத்தில் வெள்ள நீர் சூழ்ந்தது.

இதைத்தொடர்ந்து மின் நிலையத்தில் உள்ள 5 யூனிட்களிலும் மின் உற்பத்தி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. தொடர்ந்து மழை நீரை அகற்றும் பணி நடைபெற்று வந்ததது. அதுபோல் மின் உற்பத்தியை தொடங்குவதற்காக அனைத்து பணிகளும் நடைபெற்று வந்தன. 18ம் தேதியில் இருந்து 5 மின் உற்பத்தி யூனிட்டுகளும் இயங்காமல் இருந்து வந்தன.

தற்போது, 14 நாட்களுக்கு பின்னர் 5வது யூனிட் மட்டும் சரி செய்யப்பட்டு நேற்று மின் உற்பத்தி துவங்கியது. இதில் 210 மெகாவாட் மின் உற்பத்தி நடந்து வருகிறது. மற்ற 4 யூனிட்களையும் சரிசெய்யும் பணி நடைபெற்றுவருவதாக அனல் மின் நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# டிசம்பர் மாதத்தில் ஜி.எஸ்.டி. வசூல் ரூ.1.64 லட்சம் கோடி!

புதுடெல்லி, ஜன.3 –

இந்தியாவில் கடந்த 2017ம் ஆண்டு ஜூலை 1 முதல் ஜி.எஸ்.டி. என்னும் சரக்கு, சேவை வரி விதிப்பு முறை அமலில் உள்ளது.

இந்நிலையில், டிசம்பர் மாதத்தில் ஜி.எஸ்.டி. வசூல் ரூ.1.64 லட்சம் கோடியை எட்டியுள்ளதாக நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

டிசம்பர் மாத ஜி.எஸ்.டி. வருவாய் தொடர்பான விவரங்களை மத்திய நிதியமைச்சகம் நேற்று வெளியிட்டது.

கடந்த டிசம்பர் மாதத்தில், ரூ.1 லட்சத்து 64 ஆயிரத்து 882 கோடி ஜி.எஸ்.டி. வசூல் ஆகி இருப்பதாக ஒன்றிய நிதி அமைச்சகம் கூறியுள்ளது.

கடந்த 2022ம் ஆண்டு இதே டிசம்பர் மாதத்தில் ரூ.1 லட்சத்து 49 ஆயிரத்து 507 கோடி மட்டுமே வசூலாகி இருந்தது. அதனுடன் ஒப்பிடுகையில், இது 10 சதவீதம் அதிகம் ஆகும்.

கடந்த நவம்பர் மாதம் வசூலான ரூ.1 லட்சத்து 68 ஆயிரம் கோடியுடன் ஒப்பிடுகையில், டிசம்பர் மாத வசூல் குறைவு ஆகும்.

2023–24ம் நிதியாண்டில் மொத்த ஜி.எஸ்.டி. வசூல் 7வது முறையாக ரூ.1.60 லட்சம் கோடியைக் கடந்துள்ளது குறிப்பி டத்தக்கது.

### மாவட்டச் செயலாளர் கோ.தளபதி தலைமை! மதுரை மாநகரில்

# வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் - தங்கம் தென்னரசு பங்கேற்பு!

மதுரை, ஜன. 3 -

ஜனவரி 3 சுதந்திர போராட்ட மாவீரர் மன்னர் வீரபாண்டிய கட்டபொம்மன்அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அவரது திருவுரு வச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தபடவுள்ளது என்று மதுரை மாநகர் மாவட்ட கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்து ள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

சுதந்திரப் போராட்ட மாவீரர் மன்னர் வீரபாண்டிய கட்டபொம்மன்அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இன்று (03.01.2024) காலை 10.30 மணிக்கு பெரியார் பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு வருவாய்த்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்ய உள்ளார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்டக் கழக, ஒன்றிய, பேரூர், கிளை செயலாளர்கள், நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### ரேகா பிரியதர்ஷினி ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# திண்டிவனம் நகர மன்ற உறுப்பினர்கள் சார்பில் நல உதவிகள்!

## இரா.மாசிலாமணி - சீத்தாபதி சொக்கலிங்கம் வழங்கினர்!

திண்டிவனம், ஜன. 3 -

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திண்டிவனம் 13 நகர மன்ற உறுப்பினர்கள் சேர்ந்து ஏழை, எளிய மக்கள் ஆயிரம் பேருக்கு பிரியாணி வழங்கும் நிகழ்ச்சியும், தின்டிவனம் நகராட்சி 25வது வார்டு உறுப்பினர் ரேகா பிரியதர்ஷினி சார்பில் மாற்றுத் திறனாளி ஒருவருக்கு ரூபாய் ஒரு லட்சம் மதிப்புள்ள மூன்று சக்கர வாகனம் வழங்கும் நிகழ்வு திண்டிவனம் வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மயிலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா மாசிலாமணி, திண்டிவனம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சீத்தாபதி சொக்கலிங்கம், ஒலக்கூர் கிழக்கு ஒன்றிய செயலாளரும், ஒன்றிய பெருந்தலைவருமான பாங்கை சொக்கலிங்கம், திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.ஆனந்தன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி. கே.பி. ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டு ஏழை, எளிய மக்களுக்கு பிரியாணி வழங்கி சிறப்பித்தனர்.

இதில், கழக தலைமைச் செயற்குழு உறுப்பினரும், தின்டிவனம் நகர மன்ற உறுப்பினருமான சீனி சின்னசாமி, நந்தா நகர பொருளாளர் மற்றும் அரசு ஒப்பந்ததாரர் சின்னா ராஜேந்திரன், சாரங்கபாணி, பிர்லா, செல்வம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பாபு, இளங்கோவன், குணசேகர், பார்த்தீபன், சத்தீஷ், பரணிதரன், சுதாகர், சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ரேகா பிரியதர்ஷினி எம்.சி. ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் மயிலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா மாசிலாமணி, திண்டிவனம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சீத்தாபதி சொக்கலிங்கம், ஒலக்கூர் கிழக்கு ஒன்றிய செயலாளரும், ஒன்றிய பெருந்தலைவருமான பாங்கை சொக்கலிங்கம், திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.ஆனந்தன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.கே.பி. ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டு மாற்றுத் திறனாளி ஒருவருக்கு ரூபாய் ஒரு லட்சம் மதிப்புள்ள மூன்று சக்கர வாகனத்தை வழங்கினர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

# கழக பொறியாளர் அணி சார்பில் பேச்சுப் போட்டி!

## அமைச்சர் எ.வ.வேலு - பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி - துரை.கி.சரவணன் - எஸ்.கே.பி.கருணா சிறப்புரை!

திருவண்ணாமலை, ஜன. 3 -

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாநில பொறியாளர் அணி சார்பாக மண்டல அளவிலான பேச்சுப் போட்டி எஸ் கே பி கல்வி குழும வளாகத்தில் காலை நிகழ்ச்சியாகவும் பட்டிமன்றம் அருணை பொறியியல் கல்லூரியில் மாலை நிகழ்ச்சியாகவும் நடைபெற்றது.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தி.மு.க. மாநில பொறியாளர் அணி நடத்தும் கல்லூரி மாணவர்களுக்கான மண்டல அளவிலான பேச்சுப்போட்டி காலை நிகழ்ச்சியாக திருவண்ணாமலையில் உள்ள எஸ்.கே.பி கல்வி குழும வளாகத்தில் சனிக்கிழமை காலை 9 மணிக்கு துவங்கியது.

இந்நிகழ்ச்சியில் மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி.கருணா வரவேற்புரை நிகழ்த்தினார்.

இதில் மாநில பொறியாளர் அணி தலைவர் துரை. கி சரவணன், மாநில துணைச் செயலாளர்கள் வெற்றி அழகன், நாடாளுமன்ற உறுப்பினர் கு, சண்முகசுந்தரம், வே உமா காந்த், இரா நரேந்திரன், சி பிரதீப், இரா.ப.பரமேசுகுமார் மற்றும் 16 மாவட்ட பொறியாளர் அணி பொறுப்பாளர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

16 கழக மாவட்டத்தில் பேச்சு போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்கள் சுமார் 85 பேர் இந்த மண்டல போட்டியில் பங்கு பெற்றனர்.

மேலும் மாவட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பொறியாளர் அணி மாவட்ட பொறுப்பாளர்கள் கலந்து கொண்டார்கள் இதனையோட்டி மதியம் ஒரு மணிக்கு அருணை பொறியியல் கல்லூரி வளாகத்தில் பட்டிமன்றம் மற்றும் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

கலைஞரின் சமூக நல திட்டங்களால் அதிகம் பயனடைந்தவர்கள் ஆண்களா? பெண்களா? என்ற தலைப்பில் பேராசிரியர் முனைவர் ஞானசம்பந்தம் தலைமையில் பட்டிமன்றம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி.கருணா அனைவரையும் வரவேற்றார். தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி முன்னிலை வகித்தார்.

மாநில பொறியாளர் அணி தலைவர் துரை சரவணன் இணைச் செயலாளர் வெற்றியழகன் துணைச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகசுந்தரம், வே. உமா காந்த், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர்கள் இரா. நரேந்திரன், சி பிரதீப், இரா. பரமேசுகுமார், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு நினைவு பரிசுகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார் .

அமைச்சர் எ.வ. வேலு பேசியதாவது... கலைஞர் தமிழ்நாட்டில் 5 முறை முதல்வராக ஆட்சி செய்து உள்ளார்.

பொறியாளர்களே எண்ணிப் பார்க்காத அளவிற்கு கல்லணையைக் கட்டியவர் ராஜராஜ சோழன் பொறியாளர்களின் உச்சமாக நிற்பது தஞ்சை பெரிய கோயில், தஞ்சை பெரிய கோயிலின் அடையாளம் தான் ராஜராஜ சோழனை அடையாளப்படுத்தி உள்ளது. என்றார்.

மாமல்லபுரம் வல்லவர்களின் அடையாளமாக உள்ளது சேரனுக்கு அடையாளமாக சிலப்பதிகாரத்தை கூறுகிறார்கள்.

பாண்டிய மன்னர்கள் தான் நமது தாய்மொழியான தமிழுக்கு 3 தமிழ் சங்கங்கள் அமைத்தவர்கள் இந்த வரலாறுக்குள் அனைத்தையும் ஒன்று திரட்டி இளைஞர்கள் மத்தியில் கொண்டு வந்த பெருமை கலைஞரையே சாரும். என்றார்.

கலைஞரின் வார்த்தையில் இசை இருக்கும், வசனங்களில் வீரம் இருக்கும், கவிதைகள் தனது எழுக எழுதுகோல் மூலம் நாட்டிற்கு சமுதாய வளர்ச்சியை வெளிப்படுத்தியவர் தலைவர் கலைஞர் என்றும் கலைஞருக்கு நிகரானவர் யாருமில்லை என்றும் அவர் கூறினார்.

நூற்றாண்டை கண்ட கலைஞர் 65 ஆண்டுகால திரைப்பட வாழ்க்கையில் 21 படங்களுக்கு பாடல்களை எழுதி உள்ளார். 29 திரைப்படங்களை தயாரித்தவர் என்றும் பேசினார்.

பராசக்தி படத்தில் சிவாஜி கணேசனை அடையாளம் காட்டியவர் தான் கலைஞர். அதேபோல் மந்திரகுமாரி என்ற படத்தில் மக்கள் திலகம் எம்.ஜி. ஆர்.ரை அடையாளம் காட்டியவர் கலைஞர். பூம்புகார் திரைப்படத்தின் மூலமாகத்தான் எஸ்.எஸ். ஆர் அடையாளம் காட்டப்பட்டார். என்றார்.

1953 ஆம் ஆண்டு ஆன் மீகத்தைப் பற்றி பேசியவர் கலைஞர் என சுட்டி க்காட்டினார் புகழ்பெற்ற கலைஞரை குறித்து மாணவர்கள் பேசி பரிசுகளை பெற்றுள்ளார்கள் என தெரிவித்தார்.

கலைஞரைப் பொருத்த வரையில் ஆணும் பெண்ணும் இரண்டையும் இரண்டு கண்களாக பார்ப்பவர் ஒன்றை மாற்றி பார்க்கும் வரலாறு கிடையாது என்றும் குறிப்பாக கலைஞர் ஆட்சிக் காலத்தில் தான் பேருந்து என்பது அரசுடைமையாக ஆக்கப்பட்டது என்றார். தொடர்ந்து கலைஞர் ஆட்சிக் காலத்தில் தான் குடிநீர் வடிகால் வாரியம், குடிசை மாற்று வாரியம் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், 108 ஆம்புலன்ஸ் திட்டம் பெரியார் சமத்துவபுரம் உள்ளிட்டவைகள் கொண்டுவரப்பட்டதாக குறிப்பாக 4215 திருக்கோவிலுக்கு 523 கோடி மதிப்பில் திருப்பணிகள் நடைபெற்றதையும் சுட்டிக்காட்டி பேசினார்.

சமூகம் என்றால் இதில் ஆணும் பெண்ணும் அடக்கம் என்றும் சமூகம் என்பது கலைஞரின் கண் போன்றது சமுதாயத்தின் வளர்ச்சியை மட்டுமே அவர் பார்த்தார் என தெரிவித்தார்.

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் இல்லை என்றால் நமது சமுதாயம் வளர்ச்சி பெற்று இருக்காது. சமுதாய வளர்ச்சிக்கு மும்மூர்த்திகள் தான் துணையாக இருந்தனர். என்றும் இவர்கள் தான் நம் வாழ்க்கைக்கு பாடமாக திகழ்ந்தார்கள் என தெரிவித்தார். பொறியாளர்கள் புரிந்து கொண்டால் தான் இந்த சமுதாயம் பண்படும் பொறியாளர்கள் மண் முதல் விண் வரை ஆற்றல் பெற்றவர்கள் என்று கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மாநில மருத்துவர் அணி துணைத் தலைவர் எ.வ.வே. கம்பன் மாவட்ட அவைத்தலைவர் த. வேணுகோபால் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் எம் எஸ் தரணிவேந்தன் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, தலைமை செயற்குழு உறுப்பினர் பொன் முத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சி.தி. சரவணன், எஸ். அம்பேத்குமார், ஒ.ஜோதி, மாவட்ட துணைச் செயலாளர் பிரியா விஜயரங்கன் மாவட்டப் பொருளாளர் பன்னீர்செல்வம் மாவட்ட துணை செயலாளர் விஜய லட்சுமி ரமேஷ் நகர செயலாளர் கார்த்தி வேல்மாறன் கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் டி.வி.எம்.நேரு, எஸ்.கே.பி. கல்வி குழுமத்தின் மக்கள் தொடர்பு அலுவலர் சையத் ஜஹிருத்தீன், அருணை துரை வெங்கட், ஏ.ஏ ஆறுமுகம் மற்றும் மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நிறைவாக திருவண்ணாமலை தெற்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் சி.ராம் காந்த் நன்றி கூறினார்.

இதற்கான ஏற்பாடுகளை மாநில பொறியாளர் அணி சிறப்பாக செய்து இருந்தது.



நாள் : 03.01.2024
இடம் : புதிய பேருந்து வளாகம், செஞ்சி.
மதிப்பீடு : ரூ.674 இலட்சம்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களின் ஆணைக்கிணங்க
செஞ்சி பேருந்து நிலையம்
திறப்பு விழா
திறந்து வைப்பவர் :
மாண்புமிகு கே.என்.நேரு அவர்கள்
நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்
முதன்மைச் செயலாளர்
முன்னிலை :
மாண்புமிகு செஞ்சி K.S.மஸ்தான் அவர்கள்
சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்
விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர்
அவர்களை வருக ! வருக !! என அன்புடன் வரவேற்கிறோம்.
R.விஜயகுமார் B.A.,B.L.,
செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர்
செஞ்சி ஒன்றிய செயலாளர் (கி) , தலைமை செயற்குழு உறுப்பினர்
L.P.நெடுஞ்செழியன் B.A.,B.L.,
மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் (கி)
தலைமை செயற்குழு உறுப்பினர்
KSM.மொக்தியார்-அலி B.Tech IT.LLB.,
தலைவர் – செஞ்சி பேரூராட்சி
M.விஜயராகவன்
செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர்
B.K.பச்சையப்பன் B.Sc.,
செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர்
ஒன்றிய கவுன்சிலர்
M.P.நாராயணமூர்த்தி MBA.,
மேல்மலையனூர் மத்திய ஒன்றிய செயலாளர்
சாந்திசுப்பிரமணியன்
மேல்மலையனூர் மேற்கு ஒன்றிய செயலாளர்
மாவட்ட கவுன்சிலர்
M.கார்த்திக்
செஞ்சி பேரூர் செயலாளர்.
A.சம்பத்
அனந்தபுரம் பேரூர் செயலாளர்
கண்மணி நெடுஞ்செழியன்
மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர்
V.முருகன்
அனந்தபுரம் பேரூராட்சி தலைவர்
அரங்க.ஏழுமலை
மாவட்ட கவுன்சிலர்
அகல்யா பார்த்திபன்
மாவட்ட கவுன்சிலர்
செல்வி ராமசரவணன்
மாவட்ட கவுன்சிலர்
V.ஜெயபாலன்
செஞ்சி ஒன்றிய துணை பெருந்தலைவர்
விஜயலட்சுமி முருகன்
மேல்மலையனூர் ஒன்றிய துணை பெருந்தலைவர்
D.A.மணிவண்ணன் B.A.,B.L.,
தலைமை பொதுக்குழு உறுப்பினர்
P.செல்வராஜ் M.Com.,
தலைமை பொதுக்குழு உறுப்பினர்
இராஜலட்சுமி செயல்மணி
செஞ்சி பேரூராட்சி துணை தலைவர்
அமுதா கல்யாணகுமார்
அனந்தபுரம் பேரூராட்சி துணை தலைவர்
இங்ஙனம் : செஞ்சி சட்டமன்ற தொகுதி தி.மு.க
விழுப்புரம் வடக்கு மாவட்டம்.
JN ADS
9790242624 digital printing-Gingee

# புதிய நம்பிக்கையோடும் சூரியனைக் கொண்டாடுவோம்!

## ‘கணையாழி’ தலையங்கம்!

வெள்ளத்தில் மிதந்தது சூரியன்
ஆனாலும்
தமிழர் திருநாள்
சூரியனைக் கொண்டாடுவோம்!
தண்ணீர் வெள்ளத்தில்
தானும் நடந்து
இயல்பு வாழ்க்கைக்கு மக்களை
எடுத்து வந்திருக்கும்
முதல்வரைக் கொண்டாடுவோம்!

போராடிப் போராடி
எதிர்கொள்ளும் போதே
சாதி, மத ஏற்றத் தாழ்வு எனும்
சமூகப் பேரிடர்
புதுப்புது அவதாரங்களில்
களமிறங்குவதைப் போல

அதிசய மழை,
மேக வெடிப்பு, நில நடுக்கம்,
வானத்தில் காற்றின்
அரக்க விளையாட்டு என்று
ஒவ்வொரு முறையும் புதிது புதிதாக
வெவ்வேறு அவதாரங்களில்
இயற்கைப் பேரிடர்!

இயற்கைப் பேரிடர்!
எதிர்க்க முடியாது;
தடுக்க முடியாது;
தப்பிக்கத்தான் முடியும்!

ஆனால்
மனிதர்கள் உருவாக்கும்
சமூகப் பேரிடரைத் தொடர்ந்து
எதிர்க்க வேண்டும்; தகர்க்க வேண்டும்!

தகர்க்க முனைவது வன்முறையாம்
இயற்கையைச் சிதைப்பது வளர்ச்சியாம்!

இயற்கைப் பேரிடரோ
சமூகப் பேரிடரோ
தமிழர்களுக்குப் புதிதில்லை!
கடல்கோள், சுனாமிகளையும்
கடந்து வந்தவர்கள் தமிழர்கள்!

வெள்ளப் பேரிடரைச் சொல்லாத
தொன்மை நாகரிகம் கிடையாது.
சுமேரியாவின் சார் ரூபாக் (தெற்கு ஈராக்)
வெள்ளத்திலிருந்து தப்பிக்கக்
கப்பல் செய்யக்
கட்டளை போட்டிருக்கிறார் கடவுள்!

பாபிலோனியா கில்காமேசு வரலாறு
வெள்ளத்தால் கடவுள்
உலகை அழிக்கப் போவதாகவும்
தப்பிக்கக் கப்பல் கட்டச் சொன்னதாகவும்
பதிவு செய்திருக்கிறது.

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த
கடவுள் வெள்ளத்தை ஏவி விட்டதாகவும்
கதை இருக்கிறது!

ஏதேன் தோட்டத்திலிருந்து விரட்டப்பட்ட
ஆதிமனிதத் தலைமுறைகள்
கடவுளை மறந்தனராம்.
கோபத்தில் கடவுள் உலகை அழிக்க
வெள்ளத்தை அனுப்பி வைத்தாராம்!

வான மதகுகள் உடைந்து
நாற்பது நாள் மழை கொட்டியதாம்!
பூமியின் ஊற்று மடைகளும்
திறந்துகொண்டனவாம்!
நோவா தப்பிக்கக் கடவுள் தந்த கப்பல்
அரராத் மலையில் தரை தட்டியதாம்!

ஒட்டுமொத்த உலகையும் ஒரே காலத்தில்
அழிக்க மாட்டேன் இனி என்று
கடவுள் தந்த
உறுதிமொழிக் கையொப்பம்தான்
மேகத்தில் தெரியும் வானவில்லாம்!

அடைமழையில்
மதுராந்தகம் ஏரி உடையாமல்
இராமரும் இலக்குவனும்
காவல் காத்த கதையை, நம்மூர்
ஏரி காத்த இராமர் கோயில் சொல்கிறது!
அங்கே
‘ஆராதனை என் அறியாமை ஒன்றுமே’ என்று
கம்பர் சொன்னதாகவும் கதை.

பெருவெள்ளத்திலிருந்து
பூமியையும் மக்களையும் காப்பாற்றத்
திருமால் எடுத்த மீன் அவதாரத்தைச்
சொல்கிறது மச்ச புராணம்!

வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு
மூழ்கிப் போன பூமியைத்
தோண்டி எடுத்து வந்து
படகுபோல் நீரில் மிதக்க விடத்
திருமால் எடுத்தது வராக அவதாரமாம்.

அரிமர்த்தன பாண்டியன்
ஆட்சிக் காலத்தில்
நரியைப் பரியாக்கிய
சிவபெருமான் திருவிளையாடலில்
வைகை ஆற்றில் பெருவெள்ளமாம்!

மக்களைக் காப்பாற்றக்
கரையை அடைக்க
வீட்டுக்கு ஒரு ஆள் என்று
கட்டளை இட்டிருக்கிறான்.

யார் யாருக்கு எந்தெந்த இடம் என்று
நிவாரணப் பணிகள்
பிரித்துக் கொடுக்கப்பட்டனவாம்!

‘கூலி கொடுத்து என்னை
வேலைக்கு அமர்த்துபவர் உண்டோ’ என,
ஆள் துணை இல்லாமல்
பிட்டு விற்ற வந்திப் பாட்டியிடம்
கூலிக்கு ஆளாக வந்து
திருமுடியில் மண் சுமந்து
வேடிக்கை காட்டி, வேலையைக் கெடுத்த
கடவுளும்
பிரம்படி பட்ட கதையைச் சொல்கிறது
நம்ம ஊர்
திருவிளையாடல் புராணம்!

‘அன்றிரவு’ சிறுகதையில்
புதுமைப்பித்தனும்
மதுரை வெள்ளத்தில்
சிவனின் திருவிளையாடலை
வழிமொழிந்திருக்கிறார்.

இப்படிக்
கதைகளில் எல்லாம் வெள்ளத்தைக்
கட்டுப்படுத்தி மக்களைக் காப்பாற்றக்
கடவுள் அவதாரங்கள்தான் வந்திருக்கின்றன!
ஆனால் வரலாற்றில் தேடிப் பார்த்தால்
கடவுளை எதிர்பார்க்காமல்
கல்லணை கட்டியும்
காவிரிக்குக் கரை எடுத்தும்
வெள்ளத்திலிருந்து மக்களைக் காத்த
வீரனாகத் தெரிகிறான் கரிகாலன்!

இப்போது
புயல் அடித்தது!
வெள்ளம் சூழ்ந்தது
கச்சா எண்ணெய் கலந்தது!
போதாக் குறைக்கு
உரத் தொழிற்சாலையிலிருந்து
அமோனியா கசிந்தது!

பேரிடரில்
பகுதி பகுதியாகத்
தவணை முறையில்
தத்தளித்தது தமிழகம்!
ஐம்பது ஆண்டுகால
வரலாறு காணாத பேரிடரைச்
சமாளித்து உடனடியாக
இயல்பு நிலைக்குத் திருப்பியிருக்கிறார்
தமிழ்நாட்டு முதல்வர்!

எனவே
புதிய நம்பிக்கையோடும்
சூரியனைக் கொண்டாடுவோம்!



- ம.ரா.

நன்றி : ‘கணையாழி’
ஜனவரி - 2024



மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் ஒன்றியம் நக்கம்பாடி ஊராட்சியில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் வருமுன் காப்போம் சிறப்பு மருத்துவ முகாமை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தொடங்கி வைத்து நலத் திட்ட உதவிகளை வழங்கினார். உடன் குத்தாலம் மேற்கு ஒன்றியச் செயலாளர் ஏ.ஆர்.ராஜா, குத்தாலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் கு.வைத்தியநாதன், குத்தாலம் ஒன்றியக் குழுத் தலைவர் மகேந்திரன், ஒன்றியக் குழு உறுப்பினர் சிவஞானசுந்தரிபாலு, ஊராட்சி மன்றத் தலைவர் வெண்ணிலாராஜ்குமார் மற்றும் பலர் உள்ளனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஒலக்கூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தாதாபுரம் ஊராட்சியைச் சேர்ந்த அ.தி.மு.க., பா.ம.க. கட்சியினர் அக்கட்சியில் இருந்து விலகி செஞ்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன், மாநில பொதுக்குழு உறுப்பினர் சாந்தி ஏழுமலை ஆகியோர் உள்ளனர்.

### இந்திய அரசின் அடிப்படைக் கட்டமைப்பே ஒன்றிய பா.ஜ.க. அரசால் தகர்க்கப்பட்டுவிட்டது!

# ‘இந்தியா’ கூட்டணியை வெற்றி பெறச் செய்ய வேண்டும்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி - புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் வலியுறுத்தல்!

சென்னை, ஜன. 3 -

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை கட்டமைப்பையே தகர்க்கும் ஒன்றிய பி.ஜே.பி. அரசை வீழ்த்திட, ‘இந்தியா’ கூட்டணியின் ஒருங்கிணைப்புப் பிரச்சாரமும், ஒற்றுமையும் தேவை, தேவை என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

பல சோதனைகளை இயற்கை உற்பாதங்களை ஆண்டு இறுதியில் அதிகம் தந்த ஆண்டாக அமைந்து, ஜனநாயகத்தின் எதிர்காலத்தைக் கேள்விக் குறி யாக்குதே ஒன்றிய பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். ஆட்சி! இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைத் தத்துவங்களையும், விழுமியங்களையும் விடை கொடுத்தனுப்பியது பி.ஜே.பி. ஆட்சி! இந்த விந்தை ஆட்சியின் வினையாட ல்களுக்கும், அனைத்து முற்போக்கு உலகத்தவரின் முகம் சுளிப்பு க்கும், முழு விமர்சனங்க ளுக்கும் இடம் தந்த 2023 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது.

2024 ஆம் ஆண்டான புத்தாண்டு இன்று (1.1.2024) தொடங்கியது. இவ்வாண்டின் இன்னும் மூன்று, நான்கு மாதங்களில் ஒன்றிய அரசுக்கான பொதுத் தேர்தல் வரவிருக்கும் நிலையில், இவ்வாண்டு மிக முக்கியமான, மக்களின் விழிப்புணர்வின் தேவையை வலியுறுத்தும் ஆண்டாக உள்ளது!

நமது அரசமைப்புச் சட்டத்தின் கர்த்தாக்கள் குறிப்பாக டாக்டர் அம்பேத்கர் உருவாக்கிய சட்டத்தின் முகப்புரையில் உள்ள 1.இறையாண்மை 2.சமதர்மம் 3.மதச்சார்பின்மை, ஜனநாயகம் 4.குடியரசு என்பனவற்றின் முக்கியத்துவம் (Core Values) கடந்த நான்கு ஆண்டுகளில் வெகுவாகக் காணாமற் போய்க் கொண்டுள்ளது!

அரசின் அமைப்புகளில் வெளிப்படைத்தன்மைக்குப் பதில், ‘தோலிருக்க, சுளை முழுங்கும்‘ வகையில், மக்கள் பிரதிநிதிகளின் குரல் எதிர்க்கட்சியினர் குரல் கேட்கப்பட முடியாததாக்கப்பட்டு, வரலாறு காணாத வகையில் 146 உறுப்பினர்கள் தொடர் முழுவதும் (சிலர் அடுத்தத் தொடர் வரையிலும்) ‘சஸ்பெண்ட்’ செய்யப்பட்ட நிலையில், 5 சட்டங்கள் மிக முக்கிய குற்றவியல் சட்டங்கள் உள்பட, சம்பந்தமான மசோதாக்கள் வெறும் ஆளுங்கட்சியினர் மட்டுமே ஓட்டளித்து நிறைவேற்றப்பட்டுள்ள விசித்திரம் நடந்துள்ளது!

### பறிபோகும் மாநில உரிமைகள்!

உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனப் பிரச்சினையிலும் சரி, தேர்தல் ஆணையத்தின் உறுப்பினர்கள் போன்ற (ஜனநாயகக் காப்புப் பிரச்சினை) உறுப்பினர்கள் நியமன முறையிலும், அதன் ஆணைகளுக்கு நேர் எதிர்நிலைப்பாட்டை பா.ஜ.க. ஆட்சி எடுத்து, தானடித்த மூப்பாகவே நடந்துகொண்டுள்ளது!

### மாநில உரிமைகள் அன்றாடம் பறிபோகும் பரிதாபம்!

எதிர்க்கட்சிகள்மீது மட்டும் பாயும் அமலாக்கத் துறை, வருமான வரித் துறை, சி.பி.அய். போன்றவை!

ஊடகங்கள், ஜனநாயகத்தின் நான்காவது தூண், கலகலத்துப் போகும் அளவுக்கு, அச்சுறுத்தப்பட்டு, அவர்களின் எண்ணப்படி நடக்கும் நிலை!

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்களை அரசியல் ஏவுகணைகளாக்கி, அவ்வாட்சிகளை முறைப்படி நடத்தவிடாமல் முடக்கும் விந்தை!

### எல்லாம் ‘ஜு'ம்லா’தானா?



தேசியப் பேரிடர் போன்ற நிலையில், நிவாரணத்தை அள்ளி வழங்க வேண்டிய நேரத்தில், கிள்ளியும் தருவதற்கு மனு போட்டுக் காத்திருக்கும் மாநில அவலங்கள், இப்படி எத்தனை எத்தனையோ!

கொடுத்த வாக்குறுதிகள், விலைவாசி, வேலை வாய்ப்புத் தரும் திட்ட ங்கள், மக்கள் நல உதவிகள் எல்லாம் ‘ஜூம்லா” சும்மாப் பேச்சு இப்படி ஓர் ஆட்சி, ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. ஆட்சி, மீண்டும் 2024 தேர்தலில் வெற்றி பெற்றால், அத்துடன் ஜனநாயகம் காணாமற்போய்விடும் என்பது கல்லின்மேல் எழுத்து!

### இராமர் கோவில் திறப்பின் பின்னணி ?

இப்போதோ ஹிந்து ராஷ்டிரக் கொடியை ஏற்றுகிறோம் என்று உலகிற்குக் காட்டிடவும், வாக்குகளைத் திரட்டிடவும், அதிருப்தியில் இருக்கும் மக்களை மயக்கவே இராமர் கோவில்.

எனவே, தமிழ்நாடு போல், ‘இந்தியா’ கூட்டணியை வெற்றி பெறச் செய்ய பொறுப்புடனும், கவலையுடனும் கூடிய ஓர் ஆக்கப்பூர்வ செயல்முறைத் திட்டமாக விட்டுக் கொடுத்து, வெற்றி வாய்ப்புகளையே ஒரே இலக்காகக் கொண்டு வேட்பாளர்களை, பா.ஜ.க.வுக்கு எதிராக நிறுத்தும் திட்டத்தை ‘இந்தியா’ கூட்டணி உருவாக்குதல் அவசரம், அவசியம்!

2024 இல் முக்கிய முன்னுரிமைப் பணி இது!

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, ஒப்பற்ற முதலமைச்சர் மாண்புமிகு மானமிகு மு.க.ஸ்டாலின் அவர்களது சீரிய தலைமையில் நடைபெறும் ‘திராவிட மாடல்’ ஆட்சியை, ‘வாளும் கேடயமாக’ நின்று, திட்டமிட்ட திரிபுவாதப் பிரச்சாரத்தின் பொய்த் திரையைக் கிழித்தெறிந்து, உண்மைகளை உலகறியச் செய்யும் உன்னத பணியை அனைத்து முற்போக்காளர்களும், கட்சிக் கண்ணோட்டமின்றி ஒன்றுபட்டு செய்ய முன்வரவேண்டும்.

### புத்தாண்டு வாழ்த்துச் செய்தி!

திராவிடர் கழகம் ஒரு பிரச்சார இயக்கம் ஆனபடியால், திண்ணைப் பிரச்சாரம், தெருமுனைக் கூட்டங்கள், அரங்குக் கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள், தனித்த உரையாடல்கள் காணொலி கூட்டங்கள் ஆகிய எல்லா களங்களிலும் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனைகளை சமூக வலைத்தளங்கள் மூலமாகவும், பல உத்திகளோடும் செய்து வருவதையே வரும் மாதங்களில் முன்னுரிமைப் பணிகளாக காவிக் கிருமிகள் இந்த தேசத்தின், ஜனநாயகத்தினைப் பற்றி அழிக்காத வண்ணம் தீவிரமாக நாளும், மணியும், நிமிடமும் ஓய்வின்றி பணியாற்றிட சூளுரை மேற்கொள்ள வேண்டும்!

“குடிசெய்வார்க்கில்லை பருவம்” என்ற குறளுக்கேற்ப, நமது தொண்டு பருவம் பாராது, மானம் பாராது, அதே இலக்குடன் உழைத்து, வெற்றிக்கனியைப் பறிக்க நாம் துவளாது துணை நிற்போம்! வாரீர்! வாரீர்!! வாரீர்!!!

அனைவருக்கும் இதுவே புத்தாண்டு வாழ்த்துச் செய்தியாகும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### சிறப்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கையால்

# சென்னையில் ‘உயிரிழப்பு இல்லா புத்தாண்டு’!

## ஒத்துழைப்பு வழங்கிய பொதுமக்களுக்கு - காவல்துறை ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் பாராட்டு!

சென்னை, ஜன. 3 -

இந்த ஆண்டு புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது எந்த வித அசம்பாவிதங்களும் நடைபெறாமல் தடுக்க சென்னை மாநகரம் முழுவதும் போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் தலைமையில் கூடுதல் கமிஷனர்கள் பிரேம் ஆனந்த் சின்கா, அஸ்ரா கார்க், போக்குவரத்து கூடுதல் கமிஷனர் சுதாகர் ஆகியோர் மேற்பார்வையில் இணை கமிஷனர்கள், 16 துணை கமிஷனர்கள் என 18 ஆயிரம் போலீசார் நேற்று முன்தினம் மாலை முதல் 1 ஆம் தேதி அதிகாலை வரை பணியில் ஈடுபட்டனர்.

சென்னையில் 100க்கும் மேற்பட்ட கோயில்கள் மற்றும் தேவாலயங்களில் பொதுமக்கள் சிரமங்கள் இன்றி சிறப்பு வழிபாட்டிற்கு வந்து செல்லும் வகையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. மேலும், குடித்துவிட்டு வாகனம் ஓட்டும் நபர்கள், பைக் ரேசில் ஈடுபடும் நபர்கள் மற்றும் போக்குவரத்து விதிகளை மீறும் நபர்களை கண்காணித்து நடவடிக்கை எடுக்க மாநகரம் முழுவதும் 420 இடங்களில் வாகன சோதனை நடத்தப்பட்டது.

அதேபோல் இந்த ஆண்டு பைக் ரேஸ் மற்றும் வாகன சாகசங்களில் ஈடுபடுவதை கண்காணிக்க 25 சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தது. இந்த குழுக்கள் எடுத்த சிறப்பான நடவடிக்கையால் பைக் ரேஸ் முற்றிலும் தடுக்கப்பட்டது. பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களான மெரினா, பெசன்ட் நகர் கடற்கரையில் ஏற்பாடு செய்யப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கையை போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் நேரில் ஆய்வு செய்தார். அதேபோல் மாநகரம் முழுவதும் 420 வாகன சோதனை இடங்களையும் கமிஷனர் ஆய்வு செய்து பணிகளை விரைவு படுத்தினார்.

### விபத்துகள் இல்லா புத்தாண்டு!

இதனால் எந்த ஆண்டும் இல்லாத வகையில் இந்து ஆண்டு, ஒரு விபத்துக்களும் மற்றும் உயிரிழப்பு இல்லாத புத்தாண்டாக அமைந்துள்ளது.

புத்தாண்டு கொண்டாட்டம் நடந்த பகுதிகளில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ‘டிரோன்’கேமரா மூலமும், துணை கமிஷனர் தலைமையில் அமைக்கப்பட்ட பெண் காவலர்கள் கொண்ட குழுவினரும் சிறப்பாக செயல்பட்டதால், பெண்களுக்கு எந்த தொந்தரவுகளும் இன்றி இனிமையான புத்தாண்டாக இந்த 2024ம் ஆண்டு பிறந்துள்ளது.

எனவே ‘உயிரிழப்பு இல்லா புத்தாண்டு’ என்ற முழக்கத்தை சரியாக முறையில் திட்டமிட்டு நடத்திய காவல்துறை உயர் அதிகாரிகள் மற்றும் காவலர்கள் என பாதுகாப்பு பணியில் இருந்து 18 ஆயிரம் போலீசார் 1500 ஊர்காவலர் படையினருக்கு போலீஸ் கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

### போலீசாருக்கு ஒத்துழைப்பு!

மேலும், குடிபோதையில் வாகனம் ஓட்டுவது, இரவு நேரங்களில் தேவையில்லாத வகையில் வெளியே சுற்றுவது ஆகிய நிகழ்வுகளை பொதுமக்கள் பல குறைத்து கொண்டதற்கும், காவல்துறையினருக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்ததற்கும் போலீஸ் கமிஷனர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

2023ம் ஆண்டு புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது, குடிபோதையில் வாகனம் ஓட்டியதாக மாநகர காவல்துறை 252 பேர் மீது வழக்கு பதிவு செய்தது. அதேபோல், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தி அதிவேகமாக வாகனம் ஓட்டியதாக 24 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேலும், ஆபத்தான முறையில் பைக் ரேசில் ஈடுபட்ட 22 பேரை போலீசார் கைது செய்து மொத்தம் 276 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.



புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் பேரூராட்சியில், "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின்கீழ், மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பார்வையிட்டார். உடன் புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.வள்ளியம்மை தங்கமணி, கீரமங்கலம் பேரூராட்சித் தலைவர் சிவக்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஊராட்சி ஒன்றியம், அரூர், ஆண்டாபுரம், இராசிபாளையம் மற்றும் சின்னபெத்தாம்பட்டி ஆகிய ஊராட்சிகளில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் சார்பில், ரூ.52.36 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 4 புதிய அங்கன்வாடி மைய கட்டடங்களை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், ஒன்றிய செயலாளர் பெ.நவலடி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### கே.எஸ்.சந்திரன் தலைமை : அன்னவாசல் தெற்கு ஒன்றியத்தில்

# மாணவரணி சார்பில் மாபெரும் குதிரை வண்டி பந்தயம்!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் பரிசுகள் வழங்கினார்!

புதுக்கோட்டை, ஜன. 3 -

கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் தெற்கு ஒன்றியம், வடக்கு மாவட்ட மாணவரணி சார்பில் நடத்தப்படும் மாபெரும் குதிரை வண்டி பந்தயம் 30.12.2013 சனிக்கிழமையன்று காலை 9.30 மணி முதல் அன்னவாசல் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.எஸ்.சந்திரன் தலைமையில் நடைபெற்றது. குதிரை வண்டி பந்தயத்தை புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தொடங்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கே.எஸ்.ச. இளையச்சூரியன் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் மாவட்ட பொருளாளர் எம்.லியாகத் அலி, பொதுக்குழு உறுப்பினர்கள் தென்னலூர் எம். பழனியப்பன், எம் செந்தில் குமார், குண்டாண்டார் கோவில் மத்திய ஒன்றிய செயலாளர் சி.சண்முகம்,

எம்.எம்.பாலு, சிவ.வீ. ஞானப்பிரகாசம், டாக்டர் கே.என்.அமானுல்லா, என்.அன்சாரி பாசித், பி. சதீஷ்குமார், சாங்கிராப்பட்டி ஆர்.ரவி, கே.டி.ஆர். தங்கராஜ், மாணவரணி துணை அமைப்பாளர்கள் எம். தெய்வானை, சிப்காட் சதீஷ், இரத்தினசபாபதி, கோ.அண்ணாதுரை, செ.பிரசன்னா, எஸ். கணேசன், சி.சண்முகம், எம். சக்தி, எஸ்.ராஜேந்திரன் இரா.முத்துச் செல்வம், சித.சண்முகம், எம். கோவிந்தராஜ், வி.சி. பரஞ்சோதி, ஆர்.கோபாலன், எம்.முத்துச்சாமி, பி.கார்த்திக், திருப்பதி, பி.ராஜேஸ், எம்.ஆர். சி.சிதம்பரம், சி.சண்முகம், டி.கணேசன், கே. கார்த்தி, கிட்டு, செ.ரமேஷ், எம். கே.ஆர்.கருப்பையா, எஸ். எஸ்.பி.ராஜா மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். காலை 9.30 மணி முதல் 8 மைல் பெரிய குதிரை வண்டி பந்தயமும், காலை 10.30 மணி முதல் 8 மைல் சிறிய குதிரை வண்டி பந்தயமும் நடைபெற்றது.

மொத்தம் ஒரு லட்சம் ரூபாய் பரிசுத் தொகையுடன் நடத்தப்பட்ட இந்த பந்தயத்தில் குதிரை வண்டிகள் சீறி பாய்ந்தன.

இதில் பெரிய குதிரை வண்டி 11 மற்றும் சிறிய குதிரை வண்டிகள் 18 என மொத்தம் 29 குதிரை வண்டிகள் போட்டியில் பங்கேற்று சீறி பாய்ந்தன. பெரிய குதிரை வண்டி, சிறிய குதிரை வண்டி என தனித்தனி பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் ஒரு லட்ச ரூபாய்க்கும் அதிகமான ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன அதோடு வெற்றி கோப்பைகள் மற்றும் வண்டி ஓட்டிய சாரதிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

வெற்றி பெற்ற பெரிய குதிரை வண்டி பந்தயத்திற்கு முதல் பரிசாக ரூ.30,046ம், இரண்டாவது பரிசாக 20,046ம், மூன்றாவது பரிசாக 10,046 ம், 4வது பரிசாக 7,0 46ம் வழங்கப்பட்டது. வெற்றி பெற்ற சிறிய குதிரை வண்டி பந்தயத்திற்க்கு முதல் பரிசாக ரூ.20,046 ம், இரண்டாவது பரிசாக ரூ.15,046ம், மூன்றாவது பரிசாக ரூ.7,046ம், 4வது பரிசாக 5,046 ம் வழங்கப்பட்டது. வழங்கப்பட்டன. இதில் மாவட்ட செயலாளர் கே. கே. செல்லபாண்டியன் பங்கேற்று பரிசுகளை வழங்கினார்.

முடிவில் அன்னவாசல் பேரூர் கழக பொறுப்பாளர் எம்.எஸ்.ஏ.முகம்மது ரிஷா நன்றி கூறினார்.

# ஈரோடு மாவட்டத்தில் 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாம்கள்!

## பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன !

ஈரோடு, ஜன. 3 -

தமிழ்நாட்டில் உள்ள அரசு துறைகளின் சேவைகள் மக்களுக்கு எளிதாக கிடைக்கும் வகையில், 'மக்களுடன் முதல்வர்' என்ற திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோவையில் துவக்கிவைத்தார்.

இதை தொடாந்து, ஈரோடு மாவட்டத்தில் மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள், கிராம ஊராட்சிகளில் இத்திட்ட முகாம்கள் தொடர்ந்து நடந்து வருகிறது.

கோபி நகராட்சியில் மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாம் மொடச்சூர் தனியார் திருமண மண்டபத்தில் கோபி நகராட்சி தலைவர் என்.ஆர்.நாக ராஜ் தலைமையில், நகராட்சி ஆணையாளர் சசிகலா முன்னிலையில் நடைபெற்ற முகாமில் கோபி கலை அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் தியாகராசன், கோபி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்க மேலாண்மை இயக்குனர் சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்தனர். முகாமில் 100க்கும் மேற்பட்ட பொதுமக்களிடம்

தமிழ்நாடு மின்சார வாரியம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, மதுவிலக்கு மற்றும் காவல் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை உள்ளிட்ட 13 துறைகளை சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டு கோரிக்கை மனுக்களை பெற்றனர். உடனடியாக தீர்வு காணும் மனுக்களுக்கு முகாமிலேயே தீர்வு காணப்பட்டது. நிகழ்ச்சியில் இன்ஸ்பெக்டர் சண்முகவேலு, நகராட்சி மேலாளர் ஜோதிமணி, நகரமைப்பு அலுவலர்ஜானகிராமன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

காசிபாளையம் பேரூராட்சியில் திருமண மண்டபத்தில் காசிபாளையம் பேரூராட்சி தலைவர் தமிழ்ச் செல்வி வெற்றிவேல் தலைமையில், பேரூராட்சி செயல் அலுவலர் மணிகண்டன் முன்னிலையில் முகாம் நடைபெற்றது. அதைத்தொடர்ந்து நடைபெற்ற முகாமில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் காசிபாளையம் வெற்றிவேல், பேரூராட்சி துணைத் தலைவர் ராமசாமி, கவுன்சிலர்கள் ராணிமுருகேசன், நித்யா வேலுச்சாமி, வேலுச்சாமி, சுப்பிரமணி, பொன்மணி மகாதேவன், சிவகாமி, யோகேஷ்வரமூர்த்தி, அமுதா, கார்த்திகேயனி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சித்தோடு பேரூராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்ட சிறப்பு முகாமில் பேரூராட்சித் தலைவர் கண்ணகி தம்பணன் தலைமையில் துணைத் தலைவர் கே.எஸ்.தங்கவேல் முன்னிலையில் செயல் அலுவலர் கிறிஸ்டோபர் தாஸ் வரவேற்பில் வருவாய்த்துறை, காவல்துறை, தொழிலாளர் நலத்துறை உட்பட 13 துறைகளின் அதிகாரிகள் கலந்து கொண்டு, மனுக்களை பெற்றனர். மாமன்ற உறுப்பினர்கள் முருகாம்பாள், கவிதா, தேன்மொழி, தனலட்சுமி, அம்பிகா, நதியா, வசந்தி, ரமேஷ், வரதராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நசியனூர் பேரூராட்சியில் மக்களுடன் முதல்வர் சிறப்பு மனுக்கள் பெரும் முகாமில் பேரூராட்சி தலைவர் மோகனப்பிரியா லோகேஸ்வரன் தலைமையில் பொதுமக்களிடம் மனுக்கள் பெறப்பட்டன. நிகழ்வில் துணைத் தலைவர் பத்மநாபன் பொதுக்குழு உறுப்பினர் கதிரம்பட்டி மகாலிங்கம், ஒன்றிய செயலாளர் சதாசிவம், பேரூர் செயலாளர் சுந்தரி, செயல் அலுவலர் ஜெகதீஷ் தொமுசா தங்கமுத்து மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

காஞ்சிகோயில் பேரூராட்சியில் முதல்வர் சிறப்பு திட்ட முகாமில் பேரூராட்சி தலைவர் திவ்யா ஈஸ்வரமூர்த்தி துணை தலைவர் செம்மலர், செயல் அலுவலர் ஆர். பாலாஜி ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்றனர். பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூகலூர் பேரூராட்சியில் மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாமில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் பொதுமக்களிடம் மனுக்களை பெற்றார். நிகழ்வில் பேரூராட்சி தலைவர் ஜெயலட்சுமி மாரப்பன், துணைத் தலைவர் ராஜாராம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் நாகையில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற தனியார் வேலைவாய்ப்பு முகாமில் தனியார் நிறுவனங்களால் தேர்வு செய்யப்பட்ட வேலைநாடுனர்களுக்கு பணி நியமன ஆணையை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் வழங்கினார். உடன் கூடுதல் ஆட்சியர் நஞ்சித்சிங், நாகை நகரக் கழகச் செயலாளரும், நகர்மன்ற தலைவர் இரா.மாரிமுத்து மற்றும் பலர் உள்ளனர்.

# செஞ்சியில் அ.தி.மு.க. - பா.ம.க. கட்சியில் இருந்து விலகி கழகத்தில் இணைந்தனர்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில்!

செஞ்சி, ஜன. 3 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஒலக்கூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் மாநில பொதுக்குழு குழு உறுப்பினர் சாந்தி ஏழுமலை ஏற்பாட்டில் தாதாபுரம் பா.ம.க. நிர்வாகி பாலாஜி தலைமையில் அதிமுக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகி கோவிந்தராஜ், பா.ம.க. நிர்வாகிகள் நித்திஷ், பிரகாஷ், கார்த்திக், திருநாவுக்கரசு, மோகன், புஷ்பராஜ், சீனிவாசன் உள்ளிட்ட 15க்கும் மேற்பட்டோரும், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் ஏற்பாட்டில் செஞ்சி பேரூராட்சி சக்கராபுரம் 13வது வார்டு அ.தி.மு.க. பொரு ளாளர் வேல்முருகன்ஆகியோர் அக்கட்சியிலிருந்து விலகி செஞ்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

தி.மு.க.வில் இணைந்த அனைத்து நிர்வாகிகளுக்கும் அமைச்சர் செஞ்சி மஸ்தான் சால்வை அணிவித்து வரவேற்று வாழ்த்துத் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், மாநில பொதுக்குழு உறுப்பினர் சாந்தி ஏழுமலை, ஒலக்கூர், மேற்கு ஒன்றிய பொருளாளர் திருஞான சம்பந்தம், கிளைச் செயலாளர் சிவப்பிரகாசம் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

# மணலி புது நகரில் மாற்றுத்திறனாளிகளுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கல்!

சென்னை, ஜன. 3 -

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில், மாதவரம் 16 வது வட்டம், மணலி புதுநகர் மற்றும் சுற்றுவட்டாரத்தில் வசிக்கக்கூடிய மாற்றுத்திறனாளிகளுக்கு நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது.

மாதவரம் 16 வது வட்டத்தில் சமீபத்தில் பெய்த மழையின் காரணமாகவும் பூண்டி ஏரியிலிருந்து திறந்து விடப்பட்ட மழை நீரின் காரணமாகவும் மணலி புதுநகர் சுற்றுவட்டாரத்தில் உள்ள பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். இதன் காரணமாக அரசு சார்பிலும் மாநகராட்சி சார்பிலும் நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டு உள்ளது. இந்த நிலையில் மணலி புதுநகர் சுற்றுவட்டாரத்தில் வசிக்கும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு நிவாரண பொருட்கள் வழங்க வேண்டும் என்று, மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைப்பு நல சங்கத்தின் தலைவர் பிரேமா மற்றும் நிர்வாகிகள் பாக்கியலட்சுமி, ஆனந்தி, கஜலட்சுமி, மணிமேகலை, செல்வி, அரிகிருஷ்ணன் ஆகியோர், மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் மற்றும் 16 வது வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன் ஆகியோரிடம் வைத்த வேண்டுகோளை ஏற்று, (1.1. 2024) மாலை 3 மணி அளவில் மணலி புதுநகர் பகுதியில் உள்ள திருவள்ளுவர் சிலை அருகே, மேற்படி மாற்றுத்திறனாளிகளுக்கு நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது.

16 வது வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாற்றுத்திறனாளிகளுக்கு அரிசி, போர்வை உள்ளிட்ட நிவாரண பொருட்களை மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் வழங்கினார்.

நிவாரணப் பொருட்களை பெற்றுக் கொண்ட மாற்றுத்திறனாளிகள் தமிழ்நாடு முதல் அமைச்சருக்கும், கழக நிர்வாகிகளுக்கும் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

சமூக இடைவெளியுடன் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் 19 வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செல்வன், 16 வது வட்ட நிர்வாகிகள் சி.முத்தையா, கே.ஏ.ரமேஷ், புவனேஸ்வரி மகேஷ்குமார், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் கருணாகரன், மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர்.பாபு, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ்.உதயகுமார், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே.சண்முகப்ரியன், எஸ்.சிவக்குமார், விவசாய அணி துணை அமைப்பாளர்கள் டி.வினோத் கே.ராஜ் குமார், எலந்தனூர் வி.சிவபிரகாஷ், மணலி புதுநகர் வக்கீல் பி.கே.கண்ணன், சி.எம். ராஜா, டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், செமின் எடிசன், கடப்பாக்கம் சாம்ராஜ், வக்கீல் சுரேந்தர், சிவராமன், சிவராஜன், தீயம்பாக்கம் பாலாஜி, ஜான்சன், வில்சன், வடபெரும்பாக்கம் மைக்கேல், செந்தில் கார்த்திக், தினேஷ், சதீஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



ஈரோடு மாவட்டம் அந்தியூர் சட்டமன்றத் தொகுதி அந்தியூர் ஊராட்சி ஒன்றியம் பர்கூர் மலை கிராம ஊராட்சி சோழகனை கிராமத்தில் 30 நபர்களுக்கு மூங்கில் மூலம் கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்வது குறித்த திறன் பயிற்சியில் அவர்கள் உற்பத்தி செய்த கைவினைப் பொருட்கள் கண்காட்சி மற்றும் விற்பனை மேளாவை அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் பார்வையிட்டு முதல் விற்பனையை துவக்கி வைத்தார். நிகழ்வில் அந்தியூர் ஒன்றிய அவைத் தலைவர் புட்டன், அந்தியூர் பேரூராட்சி மன்றத் தலைவர் பாண்டியம்மாள், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் பழனிச்சாமி, முன்னாள் ஊராட்சி கழக செயலாளர் கவின்பிரசாத் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### காடையாம்பட்டி கழக முன்னோடி

# மொழிப்போர்த் தியாகி இரா.நாகரத்தினம் மறைவு!

## இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அஞ்சலி!

சேலம், ஜன. 3 -

சேலம் மத்திய மாவட்டம் காடையாம்பட்டி தி.மு.க.முத்த முன்னே டியும். மொழிப்போர் தியாகியும் கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவருமான இரா.நாகரத்தினம். வயது 89. இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.




செய்தியறிந்ததும் மாவட்டக் கழக செயலாளர் இரா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. மற்றும் மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள். அனைத்துக் கட்சி பிரமுகர்கள் அன்னாரின் உடலுக்கு மாலை அணி வித்து இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ம.த. மல்லையன்

சனவரி 3 (2014)



தந்தை பெரியார்,
பேரறிஞர் அண்ணா,
தலைவர் கலைஞர் ஆகியோர்
வழிநின்று கம்பம் பகுதியில் கழகம்
வளர்த்தவர்.

க.புதுப்பட்டி பேரூராட்சி மன்றத்
தலைவராக தொடர்ந்து பதினைந்து
ஆண்டுகளாகப் பொறுப்பு வகித்து,
அறிஞர் அண்ணா முதல்வராக
இருந்த சமயத்தில் அப்பகுதியில் அரசு
உயர்நிலைப் பள்ளியும் – தலைவர்
கலைஞர் முதல்வராக இருந்த போது
எண்ணற்ற நலத்திட்டங்களையும்
கொண்டு வந்து அப்பகுதி மக்களிடம்
கழகத்திற்கு நற்பெயரைப்
பெற்றுத் தந்தவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம்,
விலைவாசி உயர்வு எதிர்ப்பு
போராட்டம் மற்றும் கழகம் நடத்திய
அனைத்துப் போராட்டங்களிலும்
பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### மகாகவி பாரதியின் வாழ்க்கை வரலாற்றை ‘கவிராஜன் கதை’ என எழுதியதைப் போல் - கவிப் பேரரசு வைரமுத்து

# தலைவர் கலைஞரின் வரலாற்றை கவிதையாகத் தர வேண்டும்!

## ‘மகா கவிதை’ நூலை வெளியிட்டு – முதல்வர் மு.க.ஸ்டாலின் அன்பு வேண்டுகோள்!

**சென்னை, ஜன. 3 –**

**மகாகவி பாரதியின் வாழ்க்கை வரலாற்றை ‘கவிராஜன் கதை’ என எழுதியதைப் போல் – கவிப் பேரரசு வைரமுத்து தலைவர் கலைஞரின் வரலாற்றை கவிதையாகத் தர வேண்டும் என்று ‘மகா கவிதை’ நூலை வெளியிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுக்கு அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.1.2024) சென்னை, காமராசர் அரங்கில் நடைபெற்ற கவிப்பேரரசு வைரமுத்துவின் ‘மகா கவிதை’ நூல் வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:–

உரையை தொடங்குவதற்கு முன்பு கவிப்பேரரசுக்கு நான் சொல்ல விரும்புவது, நான் கவிஞனுமல்ல! கவிதை விமர்சகனும் அல்ல! கவிஞராகவும், கலை விமர்சகராகவும் இருந்து கோலோச்சிய தலைவர் கலைஞர் அவர்கள் மட்டும் இன்று இருந்திருந்தால்... ‘மகா கவிதை’ தீட்டிய கவிப்பேரரசு வைரமுத்து அவர்களை உச்சிமுகர்ந்து பாராட்டி இருப்பார்.

**கலைஞரின் பாராட்டு மழையில் நனைந்தவர் கவிப்பேரரசு!**

பொதுவாக ஒரு கவிஞர், இன்னொரு கவிஞரைப் பாராட்ட மாட்டார். அப்படியே பாராட்டினாலும், கொஞ்சம் குறை சொல்லித்தான் பாராட்டுவார்கள். ஆனால், தலைவர் கலைஞரைப் பொறுத்தவரை, அழகிய தமிழாக இருந்தால், தன்னை அசத்திய தமிழாக இருக்குமானால், உள்ளிருந்து பாராட்டுவார், மிச்சம் வைக்காமல் பாராட்டுவார்! அப்படி கலைஞரின் பாராட்டு மழையில் நனைந்தவர் தான் நமது கவிப்பேரரசு அவர்கள்! இந்த ‘கவிப்பேரரசு’ என்ற பட்டமே தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கியதுதான்!

முதன்முதலாக, 1989–ஆம் ஆண்டு ‘எல்லா நதியிலும் என் ஓடம்’ என்ற புத்தகத்தை தலைவர் கலைஞர் அவர்களை வைத்து வெளியிட்டார் நம்முடைய வைரமுத்து அவர்கள். ‘எல்லா நதியிலும் என் ஓடம்’ என்று அவர் சொல்லிக் கொண்டாலும், அது எப்போதும் வந்து சேரும் கடலாக கலைஞர் அவர்கள்தான் இருந்தார்! இதுதான் வைரமுத்து அவர்களுக்கு இருக்கும் சிறப்பும் பெருமையும்!

**வைரமுத்துவின் 15 நூல்களை வெளியிட்டவர் கலைஞர்!**

வைரமுத்து அவர்கள் எழுதிய 15 நூல்களை வெளியிட்ட கைகள் கலைஞர் அவர்களுடைய கைகள். இது அவர்கள் இருவருக்கும் இருந்த நட்புக்குப் பெருமை!

பாசமிகு கவிப்பேரரசு அவர்களே... இந்த நேரத்தில் உங்களிடம் ஓர் அன்பான ஒரு வேண்டுகோளை வைக்க நினைக்கிறேன். மகாகவி பாரதியின் வாழ்க்கை வரலாற்றை ‘கவிராஜன் கதை’ என்ற தலைப்பில் எழுதியதைப் போல, தலைவர் கலைஞரின் வரலாற்றை கவிதையாக நீங்கள் தர வேண்டும். இது எனது அன்பான வேண்டுகோள்! உங்கள் தமிழில் கலைஞருக்கு ஒரு கவிதை வரலாறு வந்தாக வேண்டும் என்ற உங்கள் ரசிகனின் வேண்டுகோள், இன்னும்கூட கொஞ்சம் உரிமையோடு சொன்னால், கட்டளை!

**கவிப்பேரரசு எழுதிக் கொண்டே இருக்கவேண்டும்! நான் அதனை வெளியிட்டுக் கொண்டே இருப்பேன்!**

தலைவர் கலைஞர் அவர்கள் நிறைவாழ்வை எய்திய பிறகு நமது கவிப்பேரரசு அவர்களின் ‘தமிழாற்றுப் படை’ நூலை வெளியிட்டேன்; இப்போது ‘மகா கவிதை’யை வெளியிடும் வாய்ப்பையும் பெற்றுள்ளேன். கவிப்பேரரசு அவர்கள் எழுதிக் கொண்டே இருக்க வேண்டும்; அவற்றை வெளியிடும் வாய்ப்பை நான் பெற்றுக் கொண்டே இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய மகா ஆசை!

சில மாதங்களுக்கு முன்பு, என்னை வந்து சந்தித்த கவிப்பேரரசு அவர்கள், இப்படி ஒரு நூலை எழுதி வருவதாகவும், அதனை நான் வந்து வெளியிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். பொதுவாக, அவரது படைப்புகள் வார இதழ்களில் வெளியாகும்.

வாரா வாரம் படிக்கும் வாய்ப்பு வாசகர்களுக்கு ஏற்படும். ஆனால் இந்த ‘மகா கவிதை’ என்பது மிக மிக இரகசியமாக இருந்தது. வார இதழ்களில் எழுதப்பட்டது அல்ல இது. எதிலும் வெளியிடப்படாமல் நேரடியாக புத்தகமாக வெளியாகி உள்ளது. எனவே, கவிப்பேரரசு அவர்கள் எதைப் பற்றி எழுதி இருக்கிறார் என்ற ஆர்வம் எனக்கு ஏற்பட்டது. எனது ஆர்வத்தை தணிக்கும் வகையில் வைரமுத்து அவர்களும், அவரது இரண்டு கவிதை வாரிசுகளும் சேர்ந்து வந்து, ‘மகா கவிதை’ நூலை என்னிடம் வழங்கினார்கள்.

**சமீபத்தில் ஏற்பட்ட புயல் – மழை – வெள்ளம் ஆகியவை சூழலியல் பிரச்சினைகள் மீது அதிகமான கவனத்தை ஈர்க்கின்றன. அதைப் போலவே கவிப்பேரரசு அவர்களின் மகா கவிதையும் ஐம்பூதங்கள் மீதான அக்கறையை அதிகரிப்பதாக அமைந்துள்ளது. இந் நூலை – கருத்து வாளை, அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கவிதைகளைப் படிப்பதோடு, அதன்படி நடக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கவிப்பேரரசு அவர்களே! உங்கள் தமிழ்க் கவிதையை தமிழ்நாடு பேசும்! இயற்கை மானுடம் பேசும்! இந்த ‘மகா கவிதை’யை உலகம் பேசும்!**

**ஒரு வாளை கையில் ஏந்தியது போல் இருந்த நூல்!**

அந்தப் புத்தகத்தை வாங்கிய போது, அதுவே மகா புத்தகமாகத்தான் இருந்தது. இன்னும் சொன்னால், ஒரு புத்தகத்தைக் கையில் வைத்திருப்பது போல இல்லாமல், ஒரு வாளைக் கையில் ஏந்தியது போல நீளமாக இருந்தது. படைப்பு தரமாக இருப்பதைப் போல, சிலர் புத்தகங்களைத் தரமாகத் தயாரிப்பது இல்லை. படைப்பும் தரமாக இருந்து, புத்தகத்தையும் அதைவிடத் தரமாகத் தயாரிப்பதில் கவிப்பேரரசு கண்ணும் கருத்துமாக இருப்பார். அந்த வகையில், படைப்புலகத்துக்கு மட்டுமல்ல, பதிப்புலகத்துக்கும் இந்த நூல் மகுடமாக அமைந்துள்ளது.

நிலம் – நீர் – தீ – காற்று – வானம் ஆகிய ஐம்பூதங்களைப் பற்றிய கவிதைத் தொகுப்பு என்பதை நீங்கள் அனைவரும் வாசிக்கும் போது உணர்வீர்கள். ”நிலம் – நீர் – தீ – வளி – விசும்பொடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் என்று சொல்கிறது தொல்காப்பியம். தொல்காப்பியம் தொடங்கிய இடத்துக்கு தமிழ் இலக்கியத்தைக் கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறார் கவிப்பேரரசு அவர்கள். பொதுவாக, இந்த ஐம்பூதங்களையும் யாராலும் அடக்க முடியாது என்று சொல்வார்கள். ஆனால் அந்த ஐம்பூதங்களையும் ஒரு கவிஞனால், தமிழ்க் கவிதைக்குள் அடக்க முடியும் என்பதை மெய்ப்பிக்கும் புத்தகம்தான் இந்த மகா கவிதை நூல்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (01.01.2024) சென்னை, காமராசர் அரங்கில் நடைபெற்ற கவிப்பேரரசு வைரமுத்துவின் ‘மகா கவிதை’ நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், ஒன்றிய முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப.சிதம்பரம், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மன்றத்தின் துணைத் தலைவர் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை, மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கலைஞானி கமல்ஹாசன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**நவீன அறிவியலைச் சொல்லும் திறம் கொண்டது தமிழ்மொழி**

மழையைப் பற்றி கவிஞர் சொல்கிறார்... ”திரவ ஊசியால் பூமியின் துவாரம் போலும் துளைத்த மழை – என்கிறார்! அதனைத்தான் நாம் சில வாரங்களுக்கு முன்னால் பார்த்தோம். இதனை விட மழையை விளக்க முடியாது. அடுத்து நீரைப் பற்றிச் சொல்கிறார்... ”ஆதியும் நீரே அந்தமும் நீரே தாய்க்குடம் உடைந்து பிறக்கிறோம் தண்ணீர்க் குடம் உடைத்து முடிக்கிறோம் என்கிறார். ”சூரியன்தான் எங்கள் ஒற்றை உயிர் விளக்கு என்கிறார். ”காற்றாகிய நான் ஒருநாள் நஞ்சூட்டப் பட்டால் மொத்த உலகமும் மூச்சழியும் என்கிறார்.

கனிமம் – தாவரம் – நீர் – நுண்ணுயிர் – விலங்கு – காற்று – வானம் – தீ. அனைத்தும் நிகழ்கால மனிதா! உனக்கல்ல. நீ கால்நடையாய் வந்த ஒரு பயணி. நுகர்ந்தாயா – போய்விடு – என்று வழிகாட்டுகிறார் கவிஞர். இப்படி ஐம்பூதங்களும் கவிஞரின் தமிழில் அடங்கிக் கிடக்கின்றன இந்த நூலில். அறிவியலை – அதுவும் நவீன அறிவியலைச் சொல்லும் திறம் கொண்டது தமிழ்மொழி என்பதை நிரூபிப்பதாகவும் இந்த புத்தகம் அமைந்துள்ளது. வைரமுத்துவின் மொழி ஆளுமை – மொழி ஆற்றல் – இதில் வெளிப்படுகிறது.

## ஐம்பூதங்களும் கவிப் பேரரசின் தமிழில் அடங்கிக் கிடக்கின்றன!

மிகமுக்கியமான காலக் கட்டத்தில் இந்த நூலை எழுதி இருக்கிறார் கவிப்பேரரசு. இதற்காக அவரை முதலில் பாராட்ட வேண்டும். புயலும் – மழையும் – வெள்ளமும் தலைநகர் சென்னை முதல் தென் மாவட்ட குமரி வரைக்கும் சுற்றிச் சுழன்றடித்து முடித்திருக்கும் இந்த நேரத்தில் ஐம்பூதங்களைப் பற்றி கவிஞர் எழுதி இருக்கிறார். சென்னையாக இருந்தாலும் – நெல்லையாக இருந்தாலும் வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் அதி கனமழை பெய்யும் என்று சொன்னார்களே தவிர, எவ்வளவு பெய்யும் என்று சொல்லவில்லை.

**177 ஆண்டுகளிலேயே பெரிய மழையாகப் பெய்த காரணத்தை யாரும் சொல்ல முடியவில்லை!**

ஏரி உடைந்ததைப் போல – வானம் உடைந்து கொட்டியதாக மழை பெய்துள்ளது. 100 ஆண்டில் பெரிய மழை. 177 ஆண்டில் பெரிய மழை – என்று சொல்கிறோமே தவிர, இதற்கான காரணம் என்ன என்பதை யாரும் சொல்லவில்லை. உண்மையான காரணத்தை இந்தப் புத்தகத்தில் வைரமுத்து அவர்கள் சொல்லி விட்டார்கள்... ”மனிதன் இப்போது பூதங்களைத் தின்னத் தொடங்கி விட்டான். அதனால்தான் பூதங்கள் மனிதனைத் தின்னத் தொடங்கி விட்டன – என்று சொல்கிறார் கவிஞர். ”மண்ணியல், விண்ணியல் மாற்றங்களை மனிதகுலம் பொருட்படுத்தாது போயின் ஐம்பூதங்களும் மனிதனுக்கு எதிராகத் திரும்பிவிடும் – என்கிறார். அதுதான் உண்மை.

மண்ணும் – நீரும் – காற்றும் – வானமும் மாசுபட்டு விட்டதால், அந்த இயற்கை தன் குணத்தை இழந்து வேறுபடத் தொடங்கி விட்டதன் அடையாளத்தைதான் நாம் இப்போது பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

- மழை பெய்வது இல்லை.
- பெய்தால் அதிகமாகப் பெய்கிறது.
- காற்று மாசுபட்டு விட்டது.
- உஷ்ணக்காற்று அதிகமாக வீசுகிறது.
- புவி அதிகப்படியாக வெப்பம் அடைந்து வருகிறது.
- நிலத்தடி நீர் ஆதாரம் குறைந்து விட்டது. – இவை அனைத்தும் ஐம்பூதங்களைக் காக்கத் தவறியதன் விளைவுதான்.

**கவிதை மூலமாக வைரமுத்து விடும் எச்சரிக்கை மணி!**

இனியாவது விழிப்படையா விட்டால் பேரழிவு அதிகமாகும் என்ற எச்சரிக்கை மணியைத்தான் மகா கவிதை மூலமாக வைரமுத்து அடித்துள்ளார். எனவே, இது கவிதைப் புத்தகம் அல்ல, காலப் புத்தகம் என்றே சொல்லலாம். கவியரசு கண்ணதாசன் அவர்கள், ”கவிஞன் நானோர் காலக் கணிதம் என்று சொல்வார். அதைப்போல, காலக் கணிதமாக கவிப்பேரரசு மாறி நிற்கும் புத்தகம்தான் மகா கவிதை!

## கால நிலை மாற்றத்தை எதிர் கொள்ள தமிழ்நாடு அரசு தீவிர நடவடிக்கை!

தமிழ்க் கவிதையில் காதலைப் பற்றி – இயற்கையைப் பற்றி – அரசியல் பற்றி – அழகியல் பற்றி – அதிகமாக எழுதப்பட்டிருக்கிறது. அறிவியல் கவிதைகள் குறைவு. அதிலும் அறத்தை வலியுறுத்தும் அறிவியல் கவிதைகள் மிகமிகக் குறைவு. அந்தக் குறையைப் போக்கி இருக்கிறார் கவிப்பேரரசு. இந்தப் புத்தகம் தமிழ் நிலத்தைப் பற்றி மட்டும் பேசவில்லை, உலகத்தையே பேசுகிறது. உலகத்துக்கே தேவையானதைப் பேசுகிறது.

**காலநிலை மாற்றம்தான் நமக்கு மிகப்பெரிய ஆபத்தாக மாறலாம்!**

ஒரு தமிழ்க்கவி, உலகக் கவியாக மாறும் உயரம்தான் இந்த நூல். இந்நூல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட வேண்டும் என்று உங்கள் அனைவர் சார்பிலும் கேட்டுக் கொள்கிறேன். நாம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய ஆபத்தாக காலநிலை மாற்றம்தான் இருக்கப் போகிறது என்பதை நான் பல்வேறு நிகழ்ச்சிகளில் சொல்லி இருக்கிறேன். காலநிலை மாற்றத்தை உலகம் எதிர்கொள்ள, அதன் தாக்கத்தை மட்டுப்படுத்த, 2050–ஆம் ஆண்டுக்குள் கார்பன் சமநிலையை எட்டவேண்டும் என்று பல்வேறு பன்னாட்டு ஆய்வுகளும் உச்சி மாநாடுகளும் அறிவுறுத்துகின்றன.

கழக அரசு அமைந்ததும் இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் முன்னெடுக்காத பல்வேறு செயல்களை நமது திராவிட மாடல் அரசு மேற்கொண்டு வருகிறது. அதன் தொடக்கமாகத்தான், துறையின் பெயரை ”சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை என்று அறிவித்தோம்.

- தமிழ்நாட்டிற்கான காலநிலை திட்டத்தை அறிவித்தோம்.
- நிதிநிலை அறிக்கையில் அதற்கென 500 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கிறோம்.
- தமிழ்நாடு பசுமை இயக்கத்தின் மூலம் தமிழ்நாட்டின் காடுகளின் பரப்பளவை 21 விழுக்காட்டில் இருந்து 33 விழுக்காடாக அடுத்த பத்தாண்டுகளுக்குள் உயர்த்த திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

**சமூகத்தில் அனைவரிடமும் கொண்டு சேர்க்க ‘கால நிலை அறிவு இயக்கம்’!**

- சுமார் 2 கோடியே 8 லட்சம் மரக் கன்றுகள் பதியன் போடப்பட்டு, அவற்றை நடும் பணிகள் துவங்கப் பட்டுள்ளன. இந்தத் திட்டம் தமிழ்நாட்டின் பசுமைப் போர்வையை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், கார்பனை உள்வாங்கவும் பயன்படும்.
- காலநிலை மாற்றம் குறித்து பள்ளி – கல்லூரி மாணவர்கள், தொழில்முனைவோர் என சமூகத்தின் அனைத்து மக்களுக்கும் கொண்டு சேர்க்க ”காலநிலை அறிவு இயக்கத்தை தமிழ்நாட்டில் செயல் படுத்தப் போகிறோம்.
- இந்த அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைக்க இந்தியாவிலேயே முதல்முறையாக ”Tamil Nadu Green Climate Company உருவாக்கப்பட்டிருக்கிறது.
- மக்கள் கடைகளுக்குச் செல்லும்போது வீட்டிலிருந்தே பைகளை எடுத்துச்செல்ல வேண்டும் என்பதற்கான குறியீடாக ”மீண்டும் மஞ்சப்பை இயக்கம் துவக்கப்பட்டிருக்கிறது.
- இவை அனைத்தையும் ஒருங்கிணைக்க, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள, ”காலநிலை மாற்ற நிர்வாகக் குழு எனது தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. அதில் பல்வேறு விஷயங்களை ஒருங்கிணைத்துச் செயல்படுத்த அரசு சாராத பலரும் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

**சுற்றுச் சூழலில் தனிக் கவனம் செலுத்தும் ஒரே மாநிலம் தமிழ்நாடு!**

இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் இந்தளவுக்கு சுற்றுச்சூழலில் கவனம் செலுத்தவில்லை.

சமீபத்தில் ஏற்பட்ட புயல் – மழை – வெள்ளம் ஆகியவை சூழலியல் பிரச்சினைகள் மீது அதிகமான கவனத்தை ஈர்க்கின்றன. அதைப் போலவே கவிப்பேரரசு அவர்களின் மகா கவிதையும் ஐம்பூதங்கள் மீதான அக்கறையை அதிகரிப்பதாக அமைந்துள்ளது.

இந்நூலை – கருத்து வாளை, அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கவிதைகளைப் படிப்பதோடு, அதன்படி நடக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். கவிப்பேரரசு அவர்களே! உங்கள் தமிழ்க் கவிதையை தமிழ்நாடு பேசும்! இயற்கை மானுடம் பேசும்! இந்த ‘மகா கவிதை’யை உலகம் பேசும்! என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# திராவிடப் போராளிகள்

49 ■ வழக்கறிஞர் அருள்மொழி

**ம**றைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...

## அரணாகத் திகழ்ந்த நூர்ஜகான் பேகம்



ஓவியம் : ரவி பேலட்

எப்போதும் சிரித்த முகம், யாருக்கும் அஞ்சாமல் தன் கருத்தை உரத்துச் சொல்லும் நேர்மை, தனது இயக்கமும் தலைவரும் இரு கண்களாகக் கருதும் கொள்கைப் பற்று, என்றும் மாறாத எளிமை இவற்றை ஓர் ஓவியமாக வரைந்தால், நூர்ஜகான் பேகம் எனும் உருவமாக வரும்.

திராவிட இயக்கக் கொள்கைகளைப் பெற்றோர் மூலமும், நூல்களில் படித்தும் அறிந்துகொண்டவர்கள் உண்டு. ஆனால், நூர்ஜகான் பேகமோ, கலைஞர் அவர்களின் 'மந்திரிகுமாரி', 'பராசக்தி' வசனங்களைக் கேட்டு ஈர்க்கப்பட்டவர்..

*1957* ஆம் ஆண்டு, கலைஞர் அவர்கள் முதன்முதலாக குளித்தலை சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளராகப் போட்டியிட்டார். நூர்ஜகான் பேகத்தின் குடும்பம் அப்போது குளித்தலையில் இருந்தது அந்தச் செய்தியைக் கேட்டவுடன், மகிழ்ச்சிப் பொங்க கலைஞர் பேசும் பிரச்சாரக் கூட்டங்களைத் தேடித்தேடிப்போய் நின்று விடுவார். அந்த இளம் உள்ளத்தில் பதிந்துவிட்ட அரசியல் கருத்துகள், அவரைத் தீவிர தி.மு.க. பெண்ணாக்கிவிட்டது.

### அரவக்குறிச்சி தந்த அரசியல் பெண்

நூர்ஜகான் பேகம் *1946* ஆம் ஆண்டு கரூரில் பிறந்தார். தந்தை பெயர் ஷேக் இப்ராஹிம், தாயார் ரோஷன் பீவி. பழமை நிறைந்த இசுலாமியக் குடும்பம். அவர் தந்தை இருமுறை ஹஜ் பயணம் சென்று வந்தவர். அதனால் 'ஹாஜியார்' என்று அழைக்கப்பட்டார். அவர்களின் சொந்த ஊர், கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி.

பள்ளிப்படிப்பை முடித்தவுடன், நூர்ஜகான் பேகத்திற்கு, திருமணம் நடந்தது. அவர் கணவர் பெயர் அப்துல் வஹாப். இரண்டு ஆண் குழந்தைகள், இரண்டு பெண் குழந்தைகள், என நான்கு குழந்தைகளின் தாயாகக் குடும்பப் பொறுப்பைச் சுமந்த போதும், அரசியல் ஈடுபாடும், அதிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது கொண்ட பிடிப்பும் மாறவே இல்லை.

நூர்ஜகான் பேகத்தின் கணவருக்கோ அரசியல் கூட்டங்களுக்கு அவர் செல்வது பிடிக்கவில்லை. பெரும்பாலான பெண்கள் பொதுவாழ்க்கையில் தொடர முடியாமல், நின்றுவிடும் தடைக்கல்லாக உருவாகும் குடும்பச்சிக்கல், நூர்ஜகான் பேகத்துக்கும் ஏற்பட்டது.

*1972* ஆம் ஆண்டில், தி.மு.க.வின் உறுப்பினர் ஆனார் நூர்ஜகான். கூட்டத்துக்குப் போய்விட்டு வந்தால், கணவருடன் சண்டை வரும். அந்நிலையில், *1973* ஆம் ஆண்டு திண்டுக்கல் பாராளுமன்றத் தொகுதிக்கு இடைத்தேர்தல் வந்தது.

அந்தச் சூழலில், திரை போட்ட ரிக்ஷாவின் உள்ளே அமர்ந்து கொண்டு, தெருத்தெருவாகச் சென்று, ஒலிபெருக்கி மூலம் தி.மு.க வேட்பாளர் பொன்.முத்துராமலிங்கம் அவர்களுக்காகத் தேர்தல் பிரச்சாரம் செய்தார் நூர்ஜகான் பேகம். பிரச்சாரம் முடிந்து, வீட்டிற்கு வந்தால் அடி உதை. அத்தனையும் தாங்கிக்கொண்டு தன் முடிவில், மாறாமல் நின்ற நூர்ஜகான் பேகத்தின் கொள்கை உறுதி, அவர் கணவர் உட்படக் குடும்பத்தையே தி.மு.க.வின் பக்கம் திருப்பியது.

தன் தலைவர் கலைஞர் ஒரு போராட்டத்தை அறிவித்துவிட்டால், அந்தப் போராட்டம் வெற்றி பெற கடுமையாக உழைப்பதோடு தானும் அந்தப் போராட்டத்தில் பங்கேற்று கைதாவார் நூர்ஜகான் பேகம்.

### நீதிக்காக எட்டு நாள் நடை

எம்.ஜி.ஆர் ஆட்சியில் திருச்செந்தூர் கோயிலில் நடந்த பெருந்திருட்டு ஒன்றும், அதைத் தொடர்ந்து அறநிலையத்துறை அதிகாரி ஒருவரின் மரணமும் நாட்டையே உலுக்கின.

அதற்காக கலைஞர் அவர்கள் நீதிகேட்டு நடத்திய நெடிய பயணம், இந்தியா முழுவதும் பேசப்பட்டது. எட்டு நாட்கள் தொடர்ந்த அந்த நடைப்பயணத்தில், எட்டு நாட்களும் உடன் நடந்தவர்களில் நூர்ஜகான் பேகமும் ஒருவர்.

### கல்லடி கண்ட தலைவி

தமிழ்நாடு முழுக்க அவர் பேசாத ஊரே இல்லை. பல இடங்களுக்கு மாட்டு வண்டியில் கூடப் பயணம் செய்து கூட்டத்துக்குச் சென்றார். பல ஊர்களில் அவரது பேச்சின் வீரியம் எதிரிகளை அச்சம் கொள்ளச் செய்தது. அதன் விளைவு, அவர் மீது விழுந்த கல்லடிகள்.

எம்.ஜி.ஆர். ஆட்சியின் எரிசாராய ஊழலை மறைக்க, அவரே நியமித்த நீதிபதி கைலாசம் கமிஷனை எதிர்த்த போராட்டத்தில் நூர்ஜகான் பேகமும் கைதானார். சிறை சென்றோர் ஜாமீனில் வரக்கூடாது என்று கலைஞர் அவர்கள் கூறியதை ஏற்று, ஒரு மாதகாலம் சிறையில் இருந்தார்.

பேராசிரியர் உள்ளிட்ட தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்கள் பத்து பேரின் சட்டமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்ட போது அந்த ஜனநாயகப் படுகொலையைக் கண்டித்தும், கலைஞர் அவர்களை விடுதலை செய்யக் கோரியும் திண்டுக்கல்லில் நூர்ஜகான் பேகம் தலைமையேற்றுக் கடையடைப்புப் போராட்டத்தை நடத்தினார்.

நூர்ஜகான் பேகம் அம்மையாரின் உழைப்பின் பலனாக அவரது அரசியல் பொறுப்புகளும் படிநிலைகளும் உயர்ந்தன. ஒன்றியக் கிளைக் கழகச் செயலாளர், திண்டுக்கல் நகர மகளிர் அணி அமைப்பாளர், ஒருங்கிணைந்த மதுரை மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர், மாநில மகளிர் அணித் துணைச் செயலாளர், பின் மகளிர் அணித் தலைவர் எனப் பொறுப்புகளிலும் உயர்ந்தார்.

தி.மு.க மகளிர் அணித் தலைவராக இருந்த அலமேலு அப்பாதுரை அவர்களிடம் பயிற்சிபெற்று, அம்மையார் சற்குண பாண்டியன், சட்டமன்ற உறுப்பினராக இருந்த நெடுநாள் செயல்வீரர் சங்கரி நாராயணன், கலைத்துறையோடு கழகப்பணி ஆற்றி வரும் விஜயா தாயன்பன் என ஒரு பேரணியாகச் செயல்படும் மகளிர் அணியை உருவாக்கியவர்களில் நூர்ஜகான் பேகமும் ஒருவர்.

### அடையாளம் துறக்காத கொள்கைக்காரர்

*2008* ஆம் ஆண்டு ஜூன் மாதம் *14, 15* தேதிகளில் கடலூர் மாவட்டத்தில் நடைபெற்ற மாநில மகளிர் அணி மாநாட்டில் நிறைவு உரையாற்றிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், "...என்னுடைய மகள் கனிமொழி ஆனாலும், என்னுடைய பேத்தி கயல்விழி ஆனாலும், இவர்களெல்லாம் நூர்ஜகான் பேகம் போன்ற உள்ளத்தைப் பெற வேண்டும் "என்று குறிப்பிட்டார்.

*2013* ஆம் ஆண்டு ஜூன் *6* ஆம் தேதி, 'முரசொலி' ஏட்டின் முதல் பக்கத்தில், வெளியான கலைஞர் கடிதத்தில் ஜூன் *1, 2* தேதிகளில் நடைபெற்ற தனது பிறந்தநாள் விழா நிகழ்வுகளைப் பற்றி எழுதியிருந்தார்.

அதில், "நூர்ஜகான் பேகம் இன்றைக்கு மகளிர் அணியின் தலைவராக இருந்தபோதிலும், அந்தக் காலம் தொட்டு நான் புகைவண்டியில் மதுரைக்குச் செல்கிறேன் என்றால், திண்டுக்கல் புகைவண்டி நிலையத்தில் *20* மகளிரோடு கூடி நின்றுகொண்டு 'கலைஞர் வாழ்க' என்ற குரலை அந்தப் புகைவண்டி நிலையம் முழுதும் கேட்கக்கூடிய வகையில் எதிரொலிக்கும் என் பாசக்கார தங்கை" என்று குறிப்பிட்டிருந்தார்.

நூர்ஜகான் அம்மையார் தனது இஸ்லாமிய அடையாளமாக சேலை தலைப்பால் முக்காடு போட்டுக்கொள்வதை ஒருபோதும் மாற்றிக்கொள்ளவில்லை. அவரது அரசியல் செயல்பாடுகளுக்கு, மதவாதிகளிடமிருந்து எதிர்ப்பு வந்த போதும், அவரது மத அடையாளத்துக்கு இயக்கத்தினர் சிலரிடமிருந்து எதிர்ப்பு வந்த போதும், "நீ உனது அடையாளத்தை யாருக்காகவும் மாற்றிக்கொள்ளாதே. நமது இயக்கம் உனக்குத் துணையாக இருக்கும்" என்று தலைவர் கலைஞர் கூறிய நம்பிக்கைச் சொற்களே, நூர்ஜகான் பேகம் அம்மையாருக்குப் பெரும் ஊக்க சக்தியாக இருந்தன.

அம்மையார் அவர்களுக்கு *1990* ஆம் ஆண்டு 'கலைஞர் விருது' வழங்கப்பட்டது.

தன் தலைவர் மீது மாறாத நம்பிக்கையும் பற்றும் கொண்டிருந்த நூர்ஜகான் அம்மையார் தலைவர் கலைஞர் அவர்கள் மறைந்த போது நிலைகுலைந்து போனார். அதன்பின் எழுபது நாட்களே வாழ்ந்தார். *24.10.2018* அன்று நூர்ஜகான் பேகம் காலமானார்.

அம்மையாரின் நினைவேந்தல் நிகழ்ச்சியில், அவரது படத்தினைத் திறந்து வைத்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மனம் நெகிழ்ந்து, "நூர்ஜகான் பேகம் அம்மையார் கழகத்தின் எழுச்சி முரசமாக - இயக்கத்தினுடைய போர் முரசமாக, லட்சிய முரசமாக விளங்கியவர்" என்றும், "சிறுபான்மை சமுதாயத்தினுடைய திரவியம்" என்றும் கூறினார். மேலும் தாயின் வழியில் தங்கள் இயக்கப்பயணம் தொடரும் என்று அம்மையாரின் நினைவேந்தலில் உரையாற்றிய அவரது மகள் வகிதாபேகம் அறிவித்ததையும் குறிப்பிட்டுப் பாராட்டினார்.

சுயமரியாதை, சமத்துவம் என்ற தத்துவத்தை அடிநீரோட்டமாய்க் கொண்ட திராவிட இயக்கத்தின் அரணாய்த் திகழ்பவர்கள் அம்மையார் நூர்ஜகான்பேகம் போன்ற திராவிடப் போராளிகள்தான்.

(வருவார்கள்...)

## குஜராத்தின் உண்மை முகம்!

குஜராத்திலிருந்து வந்த பிரதமர் நரேந்திர மோடிதான் சிறந்த அரசியல் நடிகர் என்று நினைத்தால், ஒட்டுமொத்த குஜராத் மாநில அரசே நடிப்புத் துறையில் கோலோச்சுகிறதோ என்று எண்ண வைக்கின்றன சமீப கால நடவடிக்கைகள்.

'போலி டோல்கேட்', 'போலி அரசு அலுவலகம்' என்று அடுத் தடுத்து குஜராத் மாநிலத்தின் வண்டவாளங்கள் வெளியே வந்து கொண்டிருக்க, இப்போது 'பூரண மதுவிலக்கு' என்ற போலி பிம்பமும் கலையத் தொடங்கி இருக்கிறது.

குஜராத், காந்தி நகர் 'கிஃப்ட் சிட்டி'யில் (GIFT City - Gujarat International Financial Tech City) பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் 'அதிகாரப்பூர்வ விருந்தி னர்களுக்கு' மதுவிலக்கில் இருந்து விலக்கு அளிக்க முடிவு செய்யப் பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இதன் மூலம் அவர்கள் மதுபானங்கள் விற்கும் 'ஹோட்டல்கள்', 'உணவகங்கள்', 'கிளப்புகள்' போன்ற இடங்களில் மதுபானங்களை எடுத்துக் கொள்ள முடியும்.

சர்வதேச முதலீட்டாளர்களை ஈர்க்க, 'திராவிட மாடல்' இங்கே மாநாடு நடத்துகிறது. ஆனால் 'குஜராத் மாடல்' மதுபானங்கள் மூலம் அவர்களை ஈர்க்க நினைக் கிறது. தமிழ்நாட்டைக் குறை சொல்லும் முன் நடுநிலை வாதிகளும் காவிகளும் கொஞ்சம் குஜராத் முதுகைப் பார்க்கட்டும்..!

## :ப்ளாஷ்பேக்





சோழராசன்

### பிளவிலிருந்து மீண்டபோது சந்திப்பு!

1994 ஆம் ஆண்டு, கழகம் ஒரு பிளவிலிருந்து மீண்டு வந்த நிலையில், தலைவர் கலைஞரை நேரில் சந்தித்து ஆதரவு தெரிவிக்க, பல்வேறு மாவட்டங்களிலிருந்து தொண்டர்களும் கழக நிர்வாகிகளும் வருகை தந்தபடி இருந்தார்கள். அப்போது திருச்சி மாவட்டம், மணப்பாறை நகரக் கழக நிர்வாகிகளுடன் தலைவர் கலைஞரை, அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றோம். முன்னாள் நகர மன்றத் தலைவர் கோபாலகிருஷ்ணன் மறைந்த முன்னாள் நகரச் செயலாளர் மலையாளம், பொருளாளர் தங்கபாண்டியன், தற்போது உள்ள நகரச் செயலாளர் செல்வம் ஆகியோர் உடனிருந்தார்கள்.

**-மு.சோழராசன், துணை அமைப்பாளர், மாவட்ட நெசவாளர் அணி, திருச்சி தெற்கு.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்பு ங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கோரிக்கையும் அறிவிப்பும்

**1990 ஆம் ஆண்டு சென்னையில் கழகத்தின் சார்பில் நடத்தப்பட்ட பாராட்டுக் கூட்டத்தில் கலந்து கொண்டார் பிரதமர் வி.பி.சிங். அந்தக் கூட்டத்தில் பேசிய முதலமைச்சர் கலைஞர், சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள விமான நிலையங்களுக்கு 'அண்ணா' பெயரும் 'காமராஜர்' பெயரும் சூட்ட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். மேடையிலிருந்தே டெல்லியில் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு பேசிய பிரதமர், அவர் உரையின்போது கலைஞரின் கோரிக்கையை ஏற்று, விமான நிலையங்களின் பெயரை அப்போதே அறிவித்தார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 348




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131